# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை 7 வள்ளுவர் ஆண்டு 2029 மாசி 2 சனிக்கிழமை (14-02-1998) SANJEAVY-Regenerative Tamil Weekly சிகரம்: 37


# மாங்குளத்துக்கு தெற்கே தொடர்ந்து கடுஞ்சண்டை!

## புலிகள் தரப்பு அறிவிப்பு நேற்றிரவு வரை இல்லை

யாழ்ப்பாணம், பெப்ரவரி 14

மாங்குளத்துக்குத் தெற்கே அரசுத் துருப்புகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து கடுஞ்சமர் இடம்பெற்று வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

எனினும் நேற்றிரவு வரை 'புலிகளின் குரல்' வானொலி இம் மோதல் குறித்து தகவல் எதனையும் வெளியிடவில்லை.

''வெற்றி - உறுதி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் வடக்கே மாங்குளத்தை நோக்கி முன்னேறுவதற்கான புதிய இராணுவ நடவடிக்கைத் தொடரை நேற்று முன்தினம் ஆரம்பித்தது தெரிந்ததே.

இந்தநடவடிக்கை குறித்தே நேற்றிரவு வரை 'புலிகளின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகரில் மோதல்

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ். குருநகர் தொடர் மாடிப்பகுதியில் நேற்று அதிகாலை 3-00 மணி முதல் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிய வந்தது.

சென்பற்றிக்ஸ் வீதி, சவச்சாலைச் சந்தி உள்ளிட்ட கரையோரப் பகுதிகளிலேயே மோதல் இடம்பெற்றது.

ஒரு மணி நேரம் அப்பகுதியில் உள்ள காவலரண் பகுதிகளில்இருந்து சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களும், ஆர். பி ஜி. தாக்குதல் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்ததாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

இந்த மோதலின் போது சில படையினர் காணாமற் போனதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

இந்த மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று அதிகாலை 5.30 மணியளவில் அந்தப் பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது.

(உ-3-15-51-139)

### தேடுதல்

சாவகச்சேரி, மீசாலைப் பகுதி நேற்றுக் காலை சுற்றி வளைக்கப்பட்டு பலத்த தேடுதல் இடம் பெற்றது.

நண்பகல் வரை இத்தேடுதல் தொடர்ந்தது.

## கொழும்பில் நேற்று இரவு விடாது வெடி முழக்கம்!

### மக்கள் மத்தியில் பதற்றம்!!

கொழும்பு, பெப். 14

நேற்றிரவு எட்டு மணிமுதல் சுமார் அரைமணி நேரம் கொழும்பு நகரின் மத்தியில் நாற்பது தொன் வெடிமருந்துகள் விடாது வெடித்ததால் நகரமே அதிர்ந்தது. மக்கள் பதகளிப்பில் அல்லோலகல்லோலப்பட்டனர்.

அரைமணி நேரமாக முழங்கியது வாணவேடிக்கைகளின் சத்தமே என்பதை அறிந்ததும் மக்கள் நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளரை கிளிநொச்சிக்கு கூட்டிச் செல்வாராம் அனுருத்த!

கொழும்பு, பெப். 14

''கிளிநொச்சி நகரை விடுதலைப் புலிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கைப்பற்றவில்லை. இதைக் காட்ட நாளை (ஞாயிற்றுக்கிழமை) பத்திரிகையாளர்களை அங்கு அழைத்துச் செல்லத் தயார்''

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரதவத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சு நடவடிக்கைகள் தொடர்பாக விளக்குவதற்காக பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 2 ஊர்காவலர்களை புலிகள் விடுவிப்பு!

மட்டக்களப்பு, பெப். 14

கடந்த சில நாள்களுக்கு முன்னர் தம்மால் கடத்தப்பட்ட இரு ஊர்காவலர்களை அம்பாறை உகனையில் வைத்து விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் விடுதலை செய்தனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகள், ஏற்பாடுகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் இவர்களை விடுதலைப்புலிகள் விடுதலை செய்திருக்கலாம் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-21)

## கிரானில் சிப்பாய் மிதிவெடிக்குப் பலி!

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியில் உள்ள கிரான் என்னுமிடத்தில் நேற்றுக் காலை மிதிவெடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

குடும்புறுமலை முகாமில் இருந்து புறப்பட்டு வீதி கண்காணிப்பு வேலையில் ஈடுபட்டிருந்தபோது இந்தச் சிப்பாய் மிதிவெடியில் சிக்கியதாகக் கூறப்பட்டது. (உ-21)

## அத்தாஸ் வீட்டுள் புகுந்து காடையர்கள் அட்டகாசம்!

கொழும்பு, பெப். 14

இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும், ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையில் பாதுகாப்புத் தொடர்பான கட்டுரைகளை வரையும் பிரபல இராணுவ விமர்சகருமான இக்பால் அத்தாஸின் வீட்டுக்குள் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் ஆயுதங்களுடன் புகுந்த காடையர் குழு ஒன்று அவரையும் அவரது மகளையும் துப்பாக்கி முனையில் மிரட்டியது. சற்று நேரம் அங்கு காடைத்தனம் புரிந்துவிட்டு தப்பிச் சென்றது.

கொழும்பு நுகெகொடையில் உடகஹவில் உள்ள அத்தாஸின் வீட்டிலேயே இச்சம்ப

(10 ஆம் பக்கத் தொடர்)

## எனது தலையில் பிஸ்டலை வைத்து அச்சுறுத்தினர்

### பயங்கர அனுபவத்தை அத்தாஸ் விவரிப்பு

கொழும்பு, பெப். 14

வந்தவர்களில் ஒருவர் பிஸ்டலை 'லோட்' செய்துஎனது தலையில்வைத்து அச்சுறுத்தினார் அதன் பின்னர் எனது எலும்புகளை நொருக்கப் போவதாகவும் அவர் மிரட்டினார்.

பிரபல இராணுவ விமர்சகர் அத்தாஸ் தமக்குஏற்பட்ட பயங்கர அனுபவம் குறித்து வியரிக்கையில் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

இரவு 8-30 மணியளவில் ஐந்து காடையர்களைக் கொண்ட குழு ஒன்று எனது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரேயொரு பொலீஸ்காரரே அத்தாஸ் வீட்டுக்குக் காவல்!

கொழும்பு, பெப். 14

அச்சுறுத்தலுக்குள்ளான பிரபல இராணுவ விமர்சகர் அத்தாஸின் வீட்டுக்கு காவலுக்கு ஒரேயொரு பொலீஸாரே நிறுத்தப்பட்டிருக்கின்றார்.

நேற்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அச்சுறுத்தல் சம்பவம் குறித்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரதவத்தயிடம் சரமாரியாகக் கேள்விகள் கேட்கப்பட்டன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம் முடிவு

கொழும்பு, பெப். 14

மலையகத்தில் தோட்டத் தொழிலாளர் கடந்த 9 நாள்களாக மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தத்தை நேற்றுடன் கைவிட்டு விட்டனர் என இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

தோட்டத் துரைமார் சங்கம், தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் நேற்று நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து வேலை நிறுத்தத்தைக் கைவிட இணக்கம் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய தோட்டத் தொழிலாளர்கள் இன்று வேலைக்குத் திரும்புவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் வெளிக்கள அலுவலகங்கள் நிறுவும்

## நீர் விநியோகத்தை இலகுபடுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம். பெப். 14

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கிராமிய நீர் விநியோகத் திட்ட புனரமைப்பு வேலைகளை இலகுபடுத்தும் நோக்குடன் மூன்று வெளிக்கள அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளன.

கரவெட்டி, சங்கானை, ஊர்காவற்றுறை போன்ற இடங்களில் இந்த வெளிக்கள அலுவலகங்கள் திறக்கப்படும்.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் யாழ். மாவட்டத்தில் 17 நீர் விநியோகத் திட்டங்களைப் புனரமைக்கும் பணியை ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய சமூக மனிதாபிமான அமைப்பின் உதவியுடன் இந்தப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையின் அனுசரணையுடன் இந்தப் புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளன.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை பிரிட்டிஷ் அரசின் உதவியுடன் யாழ். மாவட்டத்தில் புதிதாக ஒரு நீர் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடமராட்சி பகுதியிலுள்ள கப்பூது கிராமத்தில் இந்த நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான மதிப்பீட்டு வேலைகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் யாழ். அலுவலகம் மேற்கொண்டுள்ளது. (இ-5)

# செல்வா நூற்றாண்டு விழா கிராம மட்டத்தில் குழுக்கள்

யாழ்ப்பாணம், பெப். 14

தந்தை செல்வா நூற்றாண்டுவிழா வரும் மார்ச் 31 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. விழாவுக்கு முன்னோடியாக கிராமமட்டத்திலான குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

நூற்றாண்டு விழாவை யொட்டி பாடசாலை மட்டத்தில் கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளதுடன் கொடி வாரமும் அனுஷ்டிக்கப்படும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏற்பாட்டில் நடைபெறும் நூற்றாண்டு விழாவை யொட்டி தந்தை செல்வாவின் உருவச்சிலை ஒன்றும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ளது. (இ-5)

# மோதல் சம்பவத்துக்கு யாழ். எம். பி. கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ். நகரில் கடந்த 11ஆம் திகதி இரு தமிழ்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ. இராமமூர்த்தி கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிரி யார், நண்பன் யார் என்று தெரியாமல் 1986 இல் இடம்பெற்ற இயக்க மோதல்களைப் போல் மீண்டும் எமக்கு இடையில் மோதிக்கொள்வது தவிர்க்கப்பட வேண்டும் இவ்விதமோதல்கள் எமது மக்களின் நிம்மதியைக் குலைத்து விடும். சமாதானக் கீற்றுக் தெரியும் இந்த வேளையில் இவ்வாறான செயல்கள், சம்பந்தப்பட்டோரை அரசியல் வானிலிருந்து ஒதுக்கி விடும் நிலையையே ஏற்படுத்தும்; மிதவாத அரசியல்வாதிகளுக்கும் சாதகமான சூழலை ஏற்படுத்திவிடும். எனவே இதனைப் புரிந்து ஜனநாயக வழிக்குத் திரும்பிய நாம் அனைவரும், பிரச்சினைகளைப் பேசித் தீர்த்து ஒற்றுமையாக செயற்படுவோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)


யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்

விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்: 28 - 02 - 98 சனிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: தலைமைச் செயலகம், 39, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
விடயம்: பேக்கரித் தொழில் பாதிப்பு சம்பந்தமானது.

அங்கத்தவர் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி

மாவட்ட செயலாளர்,
யாழ். மாவட்ட
(சி-2882) பேக்கரி உரிமையாளர் சங்கம்.


# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு: 14 – 02 – 1991

**திருமதி புவனேஸ்வரி அரியராசா**

(ஆசிரியை, யா/தாவடி இ. த. க. பாடசாலை)

ஏழு ஆண்டு சென்றாலும் உங்கள்
நினைவு எங்கள் நெஞ்சங்களை
ஆறாத் துயரில் ஆழ்த்துதம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
கணவன், மகன், உறவினர்கள்,

''ஜெயந்தம்''
தாவடி தெற்கு,
கொக்குவில். (53378)

# ஆதீனத்தில் மாதாந்த இசையரங்கு

யாழ்ப்பாணம், பெப். 14,

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாதந்தோறும் தெய்வீக இசையரங்கு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்மாத தெய்வீக இசையரங்கில் நாளை ஞாயிறு மாலை 3 மணிக்கு ஆதீன கலா மண்டபத்தில் நாதஸ்வரக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

★ நாதஸ்வரம்;- சங்கீத நாதஸ்வரம் ஆர். கேதீஸ்வரன், நாதஸ்வரவித்துவான் கே. செல்வரத்தினம்.

★ தவில்:- லயஞான கலாநிதி ரீ. உதயசங்கர், வித்துவான் கே. சிவமூர்த்தி.


விற்பனைக்கு

6 மாதம் நிரம்பிய
முட்டை இடும்
100 கோழிகள்
விற்பனைக்குண்டு

தொடர்பு:
ரகு ஸ்ரூடியோ
ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.
[53341]


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**முருகேசு சண்முகநாதன்**

தோற்றம்: 22 – 03 – 1922 மறைவு: 16 – 01 – 1998

திதி: 15-02-1998

ஆத்மசாந்தி வீட்டுக்கிரியைகள் (சபிண்டீகரணம்) 15-02-1998 நாளை ஞாயிற்றுக்கிழமை ஏழாலை தெற்கில் உள்ள எமது இல்லத்தில் 10.30 மணியளவில் நடைபெறும். அன்று தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக நடைபெறும் கிரியைகளில் பங்குபற்றுவதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து பலவித உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

து. செல்வரட்ணம் [கற்கண்டு]
[மருமகன்]
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு. (கி/2883)

# மரண அறிவித்தல்

## பொன்னையா தம்பித்துரை

(Retired Staff Assistant A. C L. G's Office Jaffna)

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா தம்பித்துரை 12 - 02 - 98 வியாழன் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா பகவதி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா பூரணம் ஆகியோரின் மருமகனும், கமலவேணி அவர்களின் அன்புக் கணவரும், கமலநிதி (மட் / வின்சன்ட் மகளிர் கல்லூரி), ஜெயந்தி [சுகாதார அமைச்சு, வடகிழக்கு மாகாணம்), தாகூர் (லங்கா சிமெந்து), சுகந்தி [தொழில் திணைக்களம் யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயநாதன் (தென்னை ஆராய்ச்சி நிலையம், மட்டக்களப்பு), மேரி கஸில்டா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற செல்வ சிரோன்மணி அம்மா, செல்வரத்தினம் (ஓய்வு பெற்ற செயலாளர் யாழ் போதனா வைத்தியசாலை), ஆகியோரின் சகோதரரும், கோபி, சோஜிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள், நாளை (15-02 98) ஞாயிறு காலை 9.00 மணிக்கு உடுவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. டி. லாலா
([illegible])

அம்பலவாணர் வீதி,
உடுவில். (53362)


நெல்லியடி
மஹாத்மா
வெண் திரையில்

14-02-98 முதல்
15-02 98 வரை
விஜய் - சங்கீதா
நடித்த
பூவே உனக்காக
காட்சிகள்:- 10-30, 2-30
(ப நே.) (கி/2765)



லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
வெள்ளி முதல்
ஞாயிறு வரை
பிரபு – சுபலக்சுமி
மணிவண்ணன்
நடித்த
பொன் மனம்
(புதிய வெளியீடு)
குடும்பச் சித்திரம்
திங்கள் முதல்
செவ்வாய் வரை
விஜயகாந் நடித்த
உளவுத்துறை
[illegible]
(53059)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வெற்றி உறுதி' 9 ஆவது மாதம் பூர்த்தி!

# மாங்குளத்தைப் படைகள் நெருங்கின!

வவுனியாவிலிருந்து வடக்கே பாதுகாப்பான தரை வழி விநியோகப் பாதையைத் திறப்பதற்காக ஸ்ரீலங்காத் துருப்புகள் மேற்கொள்ளும் ''வெற்றி உறுதி'' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஒன்பது மாதங்கள் பூர்த்தியாகி விட்டன.

இப்போது மாங்குளத்தை நோக்கிப் படைகள் முன்னேறுவதாகவும் —

மாங்குளத்தில் படையினரின் சுற்றிவளைப்பில் அறுநூறு புலிகள் வரை சிக்குண்டுள்ளனர் எனவும் —

அரசுத் தரப்புச் செய்திகள் நேற்று பிரலாபித்துக் கொண்டுள்ளன.

ஆனால் இக்கட்டுரை வரையப்படும் இக்கணம் வரை மாங்குளம் நிலைமை குறித்து புலிகளினது தரப்புத் தகவல்களோ அல்லது சுயாதீன செய்தி வட்டாரங்களினது தகவல்களோ கிடைக்கவில்லை.

மாங்குளத்திலிருந்து தெற்கே சுமார் இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கொல்லர்குளியம் குளம் என்ற இடம் வரை படைகள் முன்னேறியிருப்பதாக — முதலில் கிடைத்த — ஊர்ஜிதப்படுத்தாத செய்திகள் தெரிவித்தன.

வடக்கிற்கான தரைவழி விநியோகப் பாதையில் மாங்குளம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளம் என்பது மட்டும் உண்மை; விடுதலைப் புலிகள் அதனை இலகுவில் கைவிடுவார்கள் என எதிர்பார்ப்பதற்கு இல்லை.

மாங்குளம் சமர் குறித்து அதன் ஆரம்ப நிலையிலேயே தகவல்களைப் பெற்று வெளியிட முடியாது என்றாலும் சில யதார்த்தங்களை மட்டும் குறிப்பிடலாம்.

ஓரிடத்தில் செறிவாக இருக்கும் படைகளை பரந்து நிலை கொள்ள விட்டு பின்னர் அவர்களை இலகுவாகத் தாக்கி அழிப்பதும்—

பெருத்த எடுப்பில் நகரும் படைகளுக்கு தொடர்ந்து எதிர்ப்புக்காட்டி நிற்காமல் தந்திரோபாய ரீதியில் பின்வாங்கலை மேற்கொண்டு, பின்னர் தமக்கு வாய்ப்பான நேரத்தில்-வாய்ப்பான இடத்தில்—வாய்ப்பான வழியில்—எதிரிகளைத் தாக்குவதும்—

இந்த 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைக்கு எதிராகப் புலிகள் அவ்வப்போது பயன்படுத்தி வரும உத்தியாகும்.

இந்த வழியில் மாங்குளத்திலும் புலிகள் சிலவேளைகளில் தந்திரோபாய பின்வாங்கலை மேற்கொள்ளலாம்: அல்லது புளியங்குளத்தில் செய்தது போன்று, பாதுகாப்பான நிலைகளில் நின்று கொண்டு தாம் விரும்பும் காலம்வரை தொடர்ந்து பலமாகத் தாக்கி, படை முன்னேற்றத்தை முறியடித்து, அப்பிரதேசத்தை சிலகாலம் தக்கவைத்துக் கொண்டிருந்து விட்டு, தாம் விரும்பும் நேரத்தில்— படையினரே எதிர்பார்க்காத வகையில்— அங்கிருந்து தந்திரோபாய பின்வாங்கலை மேற்கொள்ளலாம்.

எது எப்படியென்றாலும் மாங்குளத்திலிருந்து புலிகள் பின்வாங்கினால் அது அவர்களின் பின்னடைவாகக் கருதி விமர்சிப்பது பொருத்தமற்றதாகவே இருக்கும்.

மாங்குளம் நோக்கிய படையினரின் நகர்வு தொடர்பாக உண்மை நிலைமை என்னவென்பது அடுத்து வரும் தினங்களில் வெளிவரும் என எதிர்பார்க்கலாம்.

மாங்குளத்தைக் படைகள் பிடித்துத் தக்க வைத்துக் கொண்டால் தரைவழிப் பாதயைத் திறப்பதற்கு இன்னும் 20 கிலோ மீற்றர் தூரத்தையே படைகள் கைப்பற்ற வேண்டியிருக்கும்.

அது எப்போதைக்கு முடியும் இன்னும் சில வாரங்கள் போதுமா? அல்லது மாதங்கள் எடுக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

★ ★ ★

## அத்தாஸுக்கு அச்சுறுத்தல்

பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு சிவில் உடையில் சென்றோர் தாக்குதல்நடத்தியிருக்கின்றார்கள்; அவர் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றார்.

இரவு 8.45 மணியளவில் அவரின் வீட்டுக் கதவை உடைத்து பலவந்தமாக நுழைந்த காடையர் குழு ஒன்று அவரது வேலையாளைத் தாக்கியிருக்கின்றது. இக்பால் அத்தாஸை துப்பாக்கி முனையில் மிரட்டியிருக்கின்றது.

நிச்சயமாக இது முப்படைகளில் ஒன்றைச் சேர்ந்த குழு ஒன்றின் வேலையே எனத் திட்டமாகக் கூறுகின்றார் மற்றொரு இராணுவச் செய்தியாளர்.

விமானப்படைத் தளபதி மற்றும்அதிகாரிகளின் செயற்பாடுகள் குறித்து அண்மையில் பல்வேறு தகவல்களை அம்பலப்படுத்தியதன் மூலம் விமானப்படைத் தளபதியினதும் மற்றும் மூத்த அதிகாரிகளினதும் கடும் சீற்றத்துக்கும் எரிச்சலுக்கும் ஆளாகியிருந்தவர் அத்தாஸ்.

அதனை ஒட்டி தமது நடமாட்டங்கள் உளவு பார்க்கப்படுவதாகவும், தமது உயிருக்கு உலை வைக்கும் முயற்சிகள்எடுக்கப்படுதாகவும் தமது வீட்டை நோட்டம் பார்க்கும் பணியில் ஒரு விசேட குழு ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் இக்பால் அத்தாஸ் தமது வாராந்த பாதுகாப்பு செய்தி மடல் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இந்தத் தகவல் வெளியான சமயத்தில் வெளிநாட்டில் இருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, உடனடியாக அங்கிருந்தபடியே உயரதிகாரிகளுக்கு உத்தரவிட்டு அத்தாஸை வேவு பார்க்கும் நடவடிக்கையை நிறுத்தச் செய்தார். ஜனாதிபதியின் தலையீட்டை அடுத்து நிலைமை சுமூகமானது.

எனினும் தொடர்ந்து விமானப்படை தொடர்பான ஊழல்கள் மற்றும் தவறான நடவடிக்கைகளை அத்தாஸ் அடிக்கடி அம்பலப்படுத்தி வந்தார்.

தென்னாபிரிக்காவில் இருந்து ஸ்ரீலங்காப் படைகளுக்கு என கப்பலில் ஏற்றி வரப்பட்ட 32 ஆயிரம் மோட்டார் ஷெல்களும் புலிகளால் சுவீகரம் செய்யப்பட்ட தகவலையும் அம்பலப்படுத்தி, தொடர்ந்து அது பற்றிய செய்திகளையும் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர் அத்தாஸ்.

பாதுகாப்புத்துறை தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திகள் விமானப் படையினரை மட்டுமல்லாமல் இராணுவத்தினர், கடற்படையினர், பொலீஸார்— ஏன் புலிகளையும் கூட — ஆத்திரமுற வைத்தன என்பது உண்மையே.

எனினும் பாதுகாப்புத் துறைச் செய்தியாளர் என்ற முறையில் உள்வீட்டுத் தகவல்களை அம்பலப்படுத்தும் — நம்பிக்கையான — சர்வதேச மட்டத்தில் புகழ் பெற்ற — ஒரு துணிச்சலான பத்திரிகையாளர் என்ற முத்திரையை அவர் பதித்துக் கொண்டார்.

அவர் பாதுகாப்புத்துறை தொடர்பாக வெளியிடும் செய்திகளை வைத்தே புலிகள் தமது தாக்குதல் திட்டங்களைத் தயாரிக்கின்றார்கள் என்ற பாணியில் —

அல்லது புலிகளின் தாக்குதல் திட்டங்களுக்கு உளவுத் தகவல்களை அவரது செய்திகள், கட்டுரைகளே தருகின்றன என்ற சாரப்பட—

ஒரு குற்றச்சாட்டை உருவாக்கி அவரைச் சிக்கலில் மாட்ட வைக்கவும் மூத்த [illegible] என்றாலும் தமது எழுத்துத் திறமை மூலம் அதனைஇலகுவில் முறியடித்தார் அவர்.

துணிச்சலான பத்திரிகையாளர் என்று அவர் இப்போது வர்ணிக்கப்பட்டாலும் எண்பதுகளின் பிற்பகுதியில் தென்னிலங்கையிஎ ஜே. வி.பியின் செல்வாக்கு உச்சம் பெற்றிருந்த போது— ரிச்சர்ட் சொய்ஸா போன்ற பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட காலத்தில்— சுமார் இரண்டு, மூன்று ஆண்டுகள் இக்பால் அத்தாஸும் இலங்கையை விட்டு வெளியே ஓடி தலைமறைவு வாழ்க்கை நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னைய பிரேமதாஸா காலத்து அரசாங்கத்தின்

**பாசுபதன்**

காலத்தில் இருந்தது போல் பத்திரிகையாளர்களை அச்சுறுத்தி வாயை அடக்கும் அடாவடித்தனத்துக்கு தற்போதைய அரசின் ஆட்சியில் அரச மட்டத்தில் ஆதரவு— இல்லை என்றும்—

இது படைக்குள் இருக்கும் ஒரு சில அதிகாரிகளின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மிரட்டல் தாக்குதலே என்றும்—

கொழும்புச் செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டார். ஜே. வி. பி. அச்சுறுத்தலும் இப்போது இல்லைஎன்று அவர் சுட்டிக்காட்டினார்,

''கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலும் பல பத்திரிகையாளர்கள் மிரட்டப்பட்டார்கள்; அவர்களின் உயிருக்கு உலைவைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன; அவர்களுக்காக அவர்களது நெருங்கிய உறவினர்களின் உயிர்கள் அநியாயமாகக் காவு கொள்ளப்பட்டன; சிலர் மிரட்டி அடக்கப்பட்டனர்; சிலர் கடத்தப்பட்ட பின்னர் காணாமல் போயினர்; சிலர் வெஞ்சிறைகளில் பல காலம் வாடினர்.

இக்பால் அத்தாஸ் அளவுக்கு மிகப்பொரும் துணிச்சலான பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணத்தில் இல்லாவிட்டாலும் —

ஸ்ரீலங்காப் படைகள், இந்தியப் படைகள், இந்தியப் படையுடன் வந்த குழுக்கள், புலிகள் என பலதரப்பு ஆட்சி நிர்வாகங்களுக்கு மத்தியிலும் —அத்தாஸைப் போல கஷ்ட காலத்தில் நாட்டை விட்டு ஓடி விட்டு, சுமுகமான காலத்தில் வந்து பீற்றிக் கொள்ளாமல் — தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் பல




பத்திரிகையாளர்கள் நின்று பிடிக்கின்றார்கள். பல்வேறு அழுத்தங்களையும் தாங்கி நிற்கும் யாழ்ப்பாணத்துப் பத்திரிகையாளர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே''
— என்றும் அந்தக் கொழும்புப் பத்திரிகையாளர் குறிப்பிட்டார்.

இக்பால் அத்தாஸ் வீட்டின் மீதான தாக்குதலை அடுத்து அவர் வாராந்தம் பாதுகாப்புச் செய்தி எழுதும் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை அலுவலகத்துக்கு பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

மிரட்டல் சம்பவம் குறித்து உடனடி விசாரணைகளை பொலீஸார் ஆரம்பித்திருக்கின்றனர்.

## பல்கலைக்கழகம் மீது சந்தேகம்

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் கிழக்குப்பல்கலைக் கழகத்துக்கு அண்மையில் கடந்த புதன்கிழமை நண்பகல் நடைபெற்ற கண்ணி வெடித்த தாக்குதல் கிழக்கில் பாதுகாப்புத் தொடர்பான பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது.

விடுமுறையில் சென்ற சுமார் நாற்பது படையினரை பொலன்னறுவைக்கு ஏற்றிச் சென்று கொண்டிருந்த படையினரின் பஸ் ஒன்றே மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியில் புலிகளின் கிளைமோர் கண்ணிவெடியின் தாக்குதலுக்கு இலக்கானது.

இலக்கு சற்றுத் தவறியதால் படையினருக்கு ஏற்படவிருந்த பேரிழப்பு தவிர்க்கப்பட்டது. இரு படையினர் உயிரிழந்தனர்: 22; படையினர் காயமடைந்தனர்; அவ்வழியே சென்று கொண்டிருந்த யுவதி ஒருத்தி உட்பட பொதுமக்கள் மூவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு அருகே உள்ள வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றிருப்பதை அடுத்து பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்து சோதனையிட அனுமதிக்குமாறு மட்டக்களப்பில் உள்ள படை அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சிடம் கோரியிருக்கின்றார்கள்.

இந்தச் சம்பவத்திற்கு முன்னரும் பல்கலைக்கழகத்திற்கு அருகேயுள்ள வீதியில்இரண்டு தடவைகள் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும்—

புலிகள் கிழக்குப் பல்கலைக் கழகத்தை தமது பாதுகாப்பான மறைவிடமாகப் பயன்படுத்தித் தாக்குதல் நடவடிக்கைகளை அங்கிருந்து மேற்கொள்வதாகவும்—

எனவே அதனை முறியடிப்பதாயின் பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்தே ஆக வேண்டும் எனவும்—

கிழக்குப் படை வட்டாரங்கள் பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியப்படுத்தி உள்ளனவாம்.

பல்கலைக்கழகத்துக்குள் நுழைய தங்களுக்கு அனுமதி வழங்கப்படாததால் தாங்கள் தகுந்த நடவடிக்கையை எடுக்க முடியாதிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளனவாம்!

எது எப்படியென்றாலும் கள நிலைமை மிகச் சூடாகவுள்ள கிழக்கில், பல்கலைக் கழகத்துக்கு இராணுவம் சென்று மூலை முடுக்கு எங்கும் தேடுதல் நடத்துவதற்கு இடமளிப்பது வேண்டத்தகாத விளைவுகளை உருவாக்கும் என அவதானிகள் குறிப்பிடுகின்றனர், ★

## பிரபா தப்பிச் செல்ல சுரங்கப் பாதையாம்!

இராணுவச் செய்தியை வாசிக்கும் வாசகர்களுக்கு இது ஒரு தகவல். அரச சார்புப் பத்திரிகையான 'டெய்லி நியூஸ்' நேற்று முன் தினம் இத்த கவலை வெளியிட்டது. இத் தகவலை'ஸீரியஸ்' ஆக எடுப்பதோ விடுவதோ அவரவர் எண்ணத்தைப் பொறுத்தது.

''சிங்கள மன்னன் ஒருவனால் கட்டப்பட்ட புராதன சுரங்கப்பாதை ஒன்று மாங்குளத்துக்கு கிழக்கே இரண்டு மைல் தொலைவில் இருந்து ஆரம்பித்து முல்லைத்தீவு கடற்கரையோரத்தில் முடிவடைகின்றது. புலிகளின் தலைவர் பிரபாகரன் அவசரமாகத் தப்பிச் செல்வதற்கு மிக வாய்ப்பான வழி இது. முல்லைத்தீவுக் காட்டிலிருந்து புலிகள் புதிதாக அமைத்த சுரங்கப் பாதை ஒன்று இந்தப் புராதன சுரங்கப் பாதையுடன் இணைக்கப்பட்டுள்ளது என்று இராணுவப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

''பிரபாகரன் தற்போது ஒளிந்திருக்கும் இந்தச் சுரங்கப் பாதையை தக்க வைத்திருப்பதற்கு புலிகள் தங்கள் வளம் முழுவதையும் பிரயோகிப்பதாக நடவடிக்கைத் தலைமையகம் தெரிவிக்கின்றது.''

— இப்படி அந்தச் செய்தி தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு அதிகாரிகள் தெரிவு:

# நேர்முகப் பரீட்சை 21 ஆம் திகதி

## யாழ். மாவட்டத்தில் 33 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 14 விளையாட்டு உத்தியோகத்தர்கள் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை ஆகியவற்றில் சித்தி பெற்ற — யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த - 33 பேருக்கு நேர்முகப் பரீட்சை தொடர்பாக ஏற்கனவே அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதில் நேர்முகப்பரீட்சை நடைபெறும் தினம் 17 ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டிருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் அது தற்போது 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிப்போர் தமது வதிவிடத்தை நிரூபிப்பதற்கு பிறப்புச் சான்றிதழ், பாடசாலை விடுகைப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளர் வதிவிடச் சான்றிதழ், வாக்காளர் அட்டவணையின் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி ஆகியவற்றில் ஏதேனும் மூன்றைச் சமர்ப்பிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோரின் பெயர்கள் வருமாறு:—

எஸ். மகிந்தன், எஸ். தயானன், பி. பாஸ்கரன், கே. முகுந்தன், எஸ். றமணன், ரீ. தேவநாராயணா, ஆர். ராஜசீலன், ரீ. றமணன், பி. சிவகுமார், ஆர். குகதாஸ், வீ. முருகதாஸ், பி. ஜெயகுமார், எஸ். குமுதினி, வீ. குபேந்திரன், எஸ். மனோன்மணி, எஸ். கோகுலன், எஸ். சதீஸ்குமார், கே குணநிதி, எம் ஆர் மோகனதாஸ், எஸ். சிவதரன், ஜீ டி. மதியழகன், எம். வளர்மதி, எஸ். ஸ்ரீகாந்தன், பி.முகுந்தன், ஏ. பிறேமானந்தன், கே. குலச்சந்திரன், ரீ. ராகுலேசன், எஸ். சிவானந்தன், என். உதயகுமார், ஆர் விக்கினேஸ்வரமூர்த்தி, சி விமந்தகுமார் கே. விமந்தகுமார், எஸ். நளாயினி.

[ஐ]

## ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் ஊழியரால் தாக்கப்பட்டார்

### காலியில் நடைபெற்றசம்பவம்

கொழும்பு, பெப்.14 காலி அரசாங்க மருத்துவ மனைப் பணிப்பாளரை அங்கு பணியாற்றும் சிற்றூழியர் ஒருவர் தாக்க முற்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் மருந்து பெறும் நோயாளர்களிடம் குறிப்பிட்ட இந்தச் சிற்றூழியர் பணம் அறவிடுவதாக கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மருத்துவ மனைப் பணிப்பாளர் அந்தச் சிற்றூழியரை அழைத்து விசாரணையை மேற்கொண்டபோதே பணிப்பாளரை அவர்கெட்ட வார்த்தைகளால் தூஷித்தார் எனவும்,பணிப்பாளரின் கழுத்துப் பட்டியை இழுத்து தாக்க முயற்சித்தார் என்வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

## விசேட அடையாள அட்டை விநியோகம்

குருநகர், பெப். 14 குருநகர் றெக்கிளமேசன் கிழக்கு [ஜே-68], றெக்கிளமேசன் மேற்கு [ஜே-69] கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக கிராம சேவையாளர் றோ. அன்ரனி அறிவித்துள்ளார்.

[ஐ-51]

## பிற்போடப்பட்டுள்ளது

15-02-98 அன்று நடைபெறவிருந்த பழைய மாணவர் சங்க ஒன்று கூடலும், மதிய போசன விருந்தும் தவிர்க்க முடியாத காரணத்தால் 22-02-98 அன்று ந. ப. 12.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

குறிப்பு; மேலும் கலந்து கொள்ள விரும்புவோர் அதிபருடன் தொடர்பு கொள்க:

செயலாளர்,
**யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.**
பழைய மாணவர் சங்கம்.

(53376)

உ

## கலாவிநோதன் சின்னமணியின் மணிவிழாவும், பாராட்டுவிழாவும்

வில்லிசைப்புலவர்
**கா. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி)**
அவர்களின்
30 வருட கலைச்சேவையைப் பாராட்டி அச்சுவேலி மக்கள் எடுக்கும் பெருவிழா.

இடம்: அச்சுவேலி மகாவித்தியாலயம்,
காலம்: 14 - 02 - 98 (சனி)
பிற்பகல் 2. 00 மணி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி!

லயன் க. செல்வரத்தினம்
தலைவர்
மணிவிழாக்குழு.

[53280]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரமு தங்கம்மா

127, கனரத்தினம் வீதி, அரியாலையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பரமு தங்கம்மா அவர்கள் 13-02-98 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகர் பரமுவின் அன்பு மனைவியும், யாழ்ப்பாண மாநராட்சி மன்றத்தில் பணியாற்றி இளைப்பாறிய பழனித்துரை, நவரத்தினம் மற்றும் திருமதி. சிங்கராசா செல்வதி, திருமதி பண்டிதர் செல்வராணி, இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் செல்வராசா, காலஞ்சென்ற யோகராசா, (ஹொலன்ட்) கலைவாணன் ஆகியோரின் அருமைத் தாயாரும், இளைப்பாறிய ஆசிரியர் செ. சிங்கராசா, மன்னார் மின்சார சபையைச் சேர்ந்த ச. பண்டிதர், சரோஜினிதேவி, புஸ்பராணி, பானுமதி ஆகியோரின் அன்பு மாமியும், ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14-2-98 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. செல்வராசா
(மகன்)

ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு.

(53274)

## திருமதி மதிவதனா (மதி) பன்னிருகரம்

யாழ்ப்பாணம் இல. 196, இரண்டாம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி ப. மதிவதனா அவர்கள் 12-03-1998 அன்று காலமானார்.

இவர் பன்னிருகரத்தின் அன்பு மனைவியும், கந்தசாமி( சைக்கிள்கடை),யோகேஸ்வரி (யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்) ஆகியோரின் அன்பு மகளும், வனிதாவின் அன்புத் தாயாரும், ஸ்ரீ நந்தின், ஸ்ரீ ஜெயசந்திரன், சுதர்சன், தர்சினி, தர்சினி, பிரதீபா, நிரோசினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், குணரட்ணம் (ரசசின்), மேரிஜக்குலின் ஆகியோரின் அன்பு மச்சாளும், காலஞ்சென்ற திருமதி பூரணம் சுப்பிரமணியம் (யாழ் போதனா வைத்திய சாலை ஊழியர்) அவர்களின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று 14-02-98 சனிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு கொட்டடி இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்;
வ. கந்தசாமி (தந்தை)
க. யோகேஸ்வரி (தாய்)
க ஸ்ரீஜெயச்சந்திரன் (சகோதரன்)

16/4, 2ஆம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்

(53375)

## திருமதி ராஜேஸ்வராணி சுந்தரராஜா

திருமதி ராஜேஸ்வரராணி சுந்தரராஜா அவர்கள் 10-02-98 அன்று காலமானார். அன்னார் திரு. சுந்தரராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு, திருமதி திருராஜசிங்கத்தின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்புமகளும், மடுமலர்ராஜகுலராணி (கனடா) காலஞ்சென்ற அன்ரன்ராஜசெல்வம் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வரஞ்சிதராணி, பிறின்ஸ்ராஜேந்திரசிங்கம், திவ்வியராணி ஆகியோரின் அன்புச்சகோதரியும், கருணானந்தன் (கணக்காளர்,கனடா) சித்ரஞ்சி ஆகியோரின் அன்புமாமியாரும், மாக்ஸ்,கிறிஸ்டீனா, குவின்ரன், சாம்சன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (14-02-98) 2 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ந. திவ்யராணி
(சகோதரி)

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி,

(53364)


★ மலிவு விலையில் ★
அனைவரும் விரும்பிப் பயன்படுத்தும்

**லீலா கலண்டர்கள், டயறிகள்**

★ மொத்தமாகப் பெற்றுக் கொள்வோருக்கும் வியாபாரிகளுக்கும் விசேட கழிவுகள்

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் கலண்டர்களை கொழும்பு விலையிலும் 15 வீதக் கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

**கொழும்பு விலை 100 ரூபா**

கிடைக்குமிடங்கள்:

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மொடேர்ண் ஸ்ரோர்ஸ்
பஸ் நிலையம்,
நெல்லியடி.

கரன் புக்சென்டர்
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

பஸ் நிலையம், சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மிகவும் பக்குவமாக பாவிக்கப்பட்ட வீணை ஒன்று நல்ல நிலையில் உடனடியாக விற்பனைக்கு உண்டு. நேரில் வந்து பார்க்கலாம். தொடர்பு: V.K. தியாகராசா மாவடி, ஞானவைரவர் ஆலயம் அருகில் சங்கானை. (53366)

ரீ.வி, (26'' கலர்) கதிரை செற், சோகேஸ், சாப்பாட்டு மேசை செற், கட்டில்கள், வாங்குகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 25 மணற்றறை ஒழுங்கை கந்தர்மடம். (53372)

### தவறிவிட்டது

செல்வர் நடராசா (காந்தி வீதி கொக்குவில்) ஆகிய எனது விசேட அடையாள அட்டையும், தொழில் அடையாள அட்டையும் கொக்குவில் கிழக்கில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். (53345)

புலோலி கிழக்கு, பருத்தித்துறை சேதுநாயகம் புவனேஸ்வரியின் 397850102V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை நல்லூர் சட்டநாதர் ஆலய திவ்ய ஜீவன சங்க மண்டபத்தடியில் 11-02-98 புதன்கிழமை அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையில் ஒப்படைக்கவும். (53348)

குணசிங்கம் ஸ்ரலின்குமார் 50, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம் எனும் பெயர் முகவரியையுடைய விசேட அடையாள அட்டை (0902035486) கோண்டாவில் பழனியாண்டவர் வீதியில் இருந்து இருபாலையூடாக யாழ். செல்லும் வழியில் 10-02-98 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ''ஜெனே வீடியோ சென்ரர்'' 944, பருத்தித்துறை வீதி, (சட்டநாதர் ஆலயம் முன்) ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (53343)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் [Broiler] விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். வாடிக்கையாளருக்கு விசேட சலுகை உண்டு. 5 [17], கோயில் வீதி, யாழ்ப்பாணம். [53370)

இறைச்சிக்கோழி [புறோயிலர்] மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். ஒவ்வொரு நாளும் கிடைக்கும். [காலை தொடக்கம் மாலை வரையும்] தொடர்பு: Luck Farm Sales Center, Palaly Road. Thirunelvely. [53369]

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்குண்டு. தொடர்பு இல. 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [53368]

புறோயிலர் இறைச்சிக் கோழி மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 340, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். சிவன் கோயிலுக்கும் மனோகரா தியேட்டருக்கும் இடையில் விளம்பரப் பலகை பார்க்கவும்]. [53358]

புறோயிலர் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். 40/6, புகையிரத கிழக்கு வீதி, கந்தர்மடம். (செல்வநாகபூஷணி அம்மன் கோயில் அருகில். [53358]

### தேவை

நல்ல நிலையிலுள்ள தமிழ் தட்டச்சு இயந்திரமும், நல்ல நிலையிலுள்ள றோணியோ இயந்திரமும் உடன் தேவை. தொடர்பு: மே/பா உதயன், 693. [53344]

### இலகு திருமண சேவை

பிறப்பு 1961 கார்த்திகை2 உதயச் செவ்வாய், U. K வதிவுடைமை Computer Technician உத்தியோகத்தருக்கு மணமகள் தேவை. சகல உள்ளூர் வெளியூர் மணமக்கட்கு உதவ முடியும் தொடர்பு:- ஞாயிறு காலை துரைவிமனா 958/8 கே. கே. எஸ் வீதி, யாழ். நாச்சிமார் கோவிலடி (53338)

### ஆங்கிலக்கல்வி

Spoken English (30 மணித்தியாலங்களில்) அலுவலக வேலை செய்வதற்கும் O/L Distinction Credit பெறுபேறடையும் கற்பிக்கப்படும் ஆசிரியர் 85, சிவன் கோயிலடி, சிவன்கோயிலடி மேற்கு வீதி, திருநெல்வேலி. (53363)

### மணமகள் தேவை

இங்கிலாந்தில் குடியுரிமை பெற்று தனியார் நிறுவனத்தில் பொறியியலாளராகத் தொழில் புரியும் முப்பது வயதுள்ள யாழ் இந்து மணமகனுக்கு இருபத்தேழு வயதிற்குட்பட்ட படித்த மணமகளை பெற்றோர் விரும்புகின்றனர். உதயலக்கினம் கும்பம் பூரம் 3 செவ்வாய் 12 இல் மணமகன் இலங்கை வந்து திருமணம் செய்து கூட்டிச் செல்வார். C/o இல. 690, உதயன். (53180]

---

இளவாலை
## மெய்கண்டான் மகாவித்தியாலயம்
# பவள விழா

**1998-02-15 ஞாயிற்றுக்கிழமை**
காலை 8.30 தொடக்கம்
ஊர்வலமும், பவள மலர் வெளியீடும்
கலை நிகழ்ச்சிகளும்,
பிற்பகல் 1.30 தொடக்கம்
பாராட்டும். பரிசளிப்பும்,
கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள், அன்பர்கள், அபிமானிகள் அனைவரையும் விழாவிற் கலந்து மகிழ்ந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பவள விழாச் சபையினர்.

இளவாலை மெய்கண்டான் ம. வி.
இளவாலை. (53367)

---

# முதலாண்டு நினைவலைகள்



## அமரர் சி. செல்வநாயகம் (எம். பி)

மலர்வு: 25-04-1947 — உதிர்வு: 25-02-1997

திதி: 14-02-98

ஆறுதல் சொல்ல யார் இருந்தென்ன
உங்கள் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா?
தேறுதல் சொல்ல தெய்வம் வந்தென்ன
உங்கள் திருமுகம் பார்த்தால் போதாதோ?
ஆனதோ ஓராண்டு பாசமோ மாறாது
உங்கள் நினைவே மறையாது.

மீளாத் துயில் கொண்ட எங்கள் அப்பாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மாமி, மைத்துனர்,
மைத்துனிமார், உறவினர்.

26/9 மலர் மகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். [53357]

---

ஊரெழு
## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
# வருடாந்த உற்சவம்

22-02-98 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10-03-98 செவ்வாய் தேரும், 11-03-98 புதன் தீர்த்தமும் நடைபெறும். வீதியில் உள்ள கடைகள் 15-02-98 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4:00 மணிக்கு ஏலத்தில் விடப்படும்.

தலைவர்
ஆலய நிர்வாக சபை.

[53252]

---

# வாழ்த்துகின்றோம்

அச்சுவேலி நகரில் மணிவிழாக் காணும்
வில்லிசைப் புலவர்
கலாவினோதன்
**நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி)**
அவர்கள்
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வீடியோ கலாமினி.
(53368) அச்சுவேலி.

---

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 15 — 03 — 1918



அரன் அடியில்: 09 — 02 — 1993

## அமரர் மாணிக்கம் சின்னத்துரை

(பத்தைமேனி, அச்சுவேலி.)

திதி : 14 — 2 — 1998

ஆத்ம சாந்திக்காகப்பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பாரதி வீதி,
பத்தைமேனி,
அச்சுவேலி.
[53350]

---

# 19- வது வயது நிறைவில்
# 4 ஆம் மாத நினைவஞ்சலி

இறைவன் படைப்பு: 14 — 02 — 1979



இறைவன் அழைப்பு: 13 — 10 — 1997

## செல்வி றபாயேல் பிறிசில்லாடொறத்தி

''குறுகிய காலத்தில் நிறைவு பெற்று நீண்ட வாழ்வினை நிறைவு செய்து கொண்டாய்''
(ஞானாகமம். 4:13)

உன் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி இறைவனை வேண்டி நிற்கும்,

அப்பா, அம்மா,
பாசமிகு அண்ணா, தங்கை.

''அமலவனம்''
அச்சுவேலி.
(53356)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் விரைவில் புதிய அரசியல் கட்சி

கொழும்பு, பெப். 14 தேசிய ஒன்றிணைப்பு முன்னணி என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்று விரைவில் தென்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் இந் நாட்டில் நிலவும் தேசியப் பிரச்சினைகளுக்கு முக்கிய அரசியல் கட்சிகள் தீர்வு காணத் தவறியதால் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கி தற்போது நிலவும் கொந்தளிப்பு நிலையை எதிர் கொள்ளக் கூடியதும், காலத்தின், இனத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதுமான புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கடந்த புதனன்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் கலாநிதி நாத் அமரக்கோன் தெரிவித்தார்.

தமது கட்சி ''தேசிய ஒன்றிணைப்பு முன்னணி'' என அழைக்கப்படும் எனவு,ம் அக் கட்சியில் நிர்வாகத்துறையைச் சேர்ந்த உயரதிகாரிகள், புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள், மருத்துவர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் ஆகியோர் ஒன்றிணைந்து செயற்படவுள்ளனர் எனவும் தமது கட்சியை ஓர் அரசியல் கட்சியாகத் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் நாத் அமரக்கோன் தெரிவித்தார்.

தெளிவான கொள்கையை முன்னெடுத்துச் செல்லவுள்ள தமது அரசியல் கட்சி விரைவில் நாட்டில் மூன்றாவது முக்கிய அரசியல் கட்சியாக விளங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-10)

## நிறுவன தினம்

யாழ்ப்பாணம், பெப். 14 யாழ். நகரில் உள்ள ''இன்ஸ்ரிரியூட் ஒவ் இன்பொமொற்றிக் ஸ்ரடீஸ்'' (ஐ. ஐ. எஸ்.) நிறுவனத்தின் நிறுவனதின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் —

சிறப்பு விருந்தினராக மின்சார சபையின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் வி. ராஜேந்திரமும் கலந்து கொள்வர்.

(ஐ)

## நிறைவு விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், பெப். 14 உரும்பராய் வடக்கு கணேசா சனசமூக நிலையத்தின் 43 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிறு உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலையத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற உள்ளன.

இதில் உள்நாட்டு உதவி ஆணையாளர் வ. கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகவும், சமாதான நீதிவான் அ. க. த. கிருஸ்ணராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த நிகழ்வுகளில் முதல் அமர்வாக காலை 9.30 மணிக்கு விளையாட்டு நிகழ்வுகளும், பிற்பகல் 1.30 மணிக்கு இரண்டாவது அமர்வாக விழா நிகழ்வுகளும், மூன்றாவது அமர்வாகமாலை 3.45 மணிக்கு கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

## நாட்டுக்கூத்து இசைநாடக போட்டி

யாழ்ப்பாணம், பெப். 14 பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நாட்டுக் கூத்து இசைநாடகப் போட்டியை நடத்தவுள்ளது.

மரபுவழி நாட்டுக்கூத்துக்களின் செம்மையும், மரபுவழி இசை நாடகத்தின் சுவையும் துலங்கும் நோக்குடனும், இதில் ஈடுபடும் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும், கலைஞர்களை இனங்காணும் நோக்குடனும், கலைஞர்களைக் கௌரவிக்கும்நோக்குடனும், ஒட்டுமொத்தமாகப் பாரம்பரியக் கலைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்த நாடகப் போட்டியில் பங்குபற்றும் நாடகம் ஒவ்வொன்றுக்கும் மேடை ஏற்றும் செலவாக 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும். போட்டியில் வெற்றி பெறும் நாடகங்களுக்கு முதலாவது பரிசாக 5 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 3 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசாக ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்றுவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பாரம்பரியக்கலைகள் மேம்பாட்டுக் கழகப் கேட்டுள்ளது. (ஐ-5)

## விளையாட்டுப் போட்டி

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் விளையாட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் செ. சிவநடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக உடுவில் கோட்டக் கல்வி [illegible] காரி அ. தற்பரானந்தன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினரர்களாக சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் க. ஆனந்தராசா உட்பட மற்றும் பல்வேறு பிரமுகர்கள் கலந்து கொள்வர். (ஐ-7)

## கல்வி டிப்ளோமா பரீட்சைகள்

தேசிய கல்வி நிறுவகக்கல்வி டிப்ளோமா பகுதி ஒன்றிற்கான பரீட்சை எதிர்வரும் 21ஆம்,22 ஆம் திகதிகளிலும் பகுதி இரண்டிற்கான பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதியும், மார்ச் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளன.

இதற்கான அனுமதி அட்டைகளை நிறுவன விரிவுரையாளரிடம் இன்று சனிக்கிழமை பெற்றுக் கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## அதிரடி அரங்கு

''மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது போன்ற நிலைதான்!'' — இப்படி அலுத்துக் கொண்டார் யாழ். நகர வர்த்தகர் ஒருவர்.

யாழ். உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி பணத்தை தண்ணீராய் வாரி இறைத்துச் செலவழித்த தமிழ்க் கட்சிகள் (அல்லது முன்னாள் ஆயுதக் குழுக்கள்) இப்போது யாழ். நகர வர்த்தகர்களிடம் பணம் கறக்கும் முயற்சியை ஆரம்பித்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

அதனால் விசனமடைந்த யாழ். வர்த்தகர் ஒருவரே வேதாளக் கதையைக் கூறினார்.

பயந்த நாயை அறைக்குள் பூட்டி வைத்து அடித்தால் அதுவும் கோபாவேசத்தோடு பொங்கி யெழும்.

யாழ். வர்த்தகர்கள் 'பணம் சம்பாதிப்பதில்' சூரர்கள்தான். ஆனால் இயக்கங்களிடம் பணம் பறிகொடுப்பதில் பயந்த பிராணிகள். இதுவரை பறிகொடுத்து பறிகொடுத்து நொந்தவர்கள். இந்த விடயத்தில் அவர்கள் பொங்கி எழுந்தால் ''சாதுமிரண்டால் காடு கொள்ளாத நிலைதான்'' ஏற்படும்.

ஓர் இயக்கம் வற்புறுத்தி வசூலித்தாலும் பல இயக்கங்கள் வசூலித்தாலும், பெயர் அனைத்து ஆயுதக் குழுக்களின் மேலும்தான் விழும்.

எனவே நாங்கள் வர்த்தர்களிடம் வரி, வசூல், கட்டாய நன்கொடை போன்றவை அறவிடுவதில்லை என்று சொல்லி இயக்கங்கள் தப்பிவிடமுடியாது. அடுத்த இயக்கம் அதனைச் செய்தால் அதை அம்பலப்படுத்தி, தகுந்த நடவடிக்கை எடுத்து தாம், அதில் ஈடுபடவில்லை என்று இனம் காட்ட வேண்டும். அல்லது கெட்ட பெயரில் எல்லாக் கட்சிகளுக்கும் பங்கிருக்கின்றது என்ற நிலையைத் தவிர்க்க முடியாது.

★ ★ ★

ஜி. சீ. ஈ. (சாதாரண தரப்) பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் கோட்டக் கல்வி அதிகாரி ஒருவர் ஈடுபட்டது குறித்து கடந்த வாரம் இதே பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். இது தொடர்பாக கோட்டக் கல்வி அதிகாரி ஒருவர் சஞ்சீவியுடன் தொடர்பு கொண்டார். அவர் கூறும் விளக்கம் இது:

''கல்விப் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியரல்லாத அலுவலர் என்ற வகையில் மதிப்பீட்டாளர் நியமனத்தைப் பெற்றேன். கல்வி மேற்பார்வை, கல்வி வழிகாட்டல் மற்றும் ஆலோசனை போன்ற எமது கல்வி அபிவிருத்திப் பணிகளுக்கு மதிப்பீட்டாளர் அனுபவம் பெரிதும் உதவும் என்ற அடிப்படையிலேயே அந்த வேலையில் ஈடுபட்டேன்; மதிப்பீட்டாளர்களுக்கான 'படி'யில் கண் வைத்து அல்ல.

''இந்த மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்டதனால் பெற்ற கல்விசார் அனுகூலங்களை ஜி. சீ. ஈ. (சா. த.) வகுப்புகளில் கல்வி கற்கும்— எனது கோட்டத்தைச் சேர்ந்த — பதினேழு பாடசாலை ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளேன்.

''பதினொரு நாள்கள் மதிப்பீட்டுப்பணி நடக்கவில்லை; பத்து நாள்களே நடந்தன. அதில் சனி, ஞாயிறு தினங்களைத் தவிர்த்தால் அலுவலக நாள்கள் ஆறு தினங்களே; அந்த ஆறு நாள்களும் எனது அலுவலகம் வினைத்திறனுடன் இயங்கக் கூடியதாக மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன,

''தவிரவும் நான் மேற்படி தகவலில் குறிப்பிடப் பட்டபடி மூத்த கல்வி அதிகாரி அல்லன்; கல்வி நிர்வாக சேவையில் மூன்றாம் நிலையில் உள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர் தரத்தைச் சேர்ந்தவனே!''

—இவ்வாறு அவர் தெரிவித்திருக்கும் விளக்கம் வாசகர்களுக்குச் சமர்ப்பணம்.

★ ★ ★

'அதிரடி அரங்கு' பகுதிக்கு கல்வித் துறையுடன் சார்ந்தவர்களிடம் இருந்து வரும் பல்வேறு விதமான கடிதங்களில் பலவற்றில் ஒரே மாதிரியான விடயம் சுட்டிக் காட்டப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

நமது சமூகத்தின் நல்லாசான்களாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள். மாதா, பிதாவுக்கு அடுத்து— தெய்வத்துக்கு முன்னாக — வைத்துப் போற்றப்படும் குரு போன்றவர்கள் ஆசிரியர்கள். பொதுவாக சமூகத்தில் உயர்ந்த இடத்தில் வைத்துப் பேணப்படுபவர்கள் அவர்கள்.

ஆனால் கல்வி நிர்வாகத்தில் ஈடுபடும் சில அதிகாரிகள் இந்த ஆசான்களை மிக அகௌரவமாக நடத்துவதாக 'அதிரடி அரங்கு' பகுதிக்கு வரும் பெரும் எண்ணிக்கையான கடிதங்கள் தெரிவிக்கின்றன. மூத்த கல்வி அதிகாரிகள் சிலர் ஆசிரியர்களை (அவர்கள் பெண்ணானாலும் சரி, ஆணானாலும் சரி) பலருக்கு முன்னிலையில் 'நீ', 'நான்' என்று விளித்து 'வந்தாய்', 'போனாய்' என்று அஃறிணைப் பாணியில் பேசுவதாகவும், கேவலமாக நடத்துவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

பெரிய மனிதர்களாக — பெரிய பதவிகளில் — இருந்தால் மட்டும் போதாது; நாகரிகத்திலும் பழக்க வழக்கங்களிலும் கூட பெரிய மனிதராகக் காட்டிக் கொள்வது அவசியம்.

சமூகத்தில் உயர்ந்த மதிப்பைப் பெற்றிருக்கும் ஆசிரியர்களுக்கு அந்த கௌரவத்தை அவர்களின் அதிகாரிகள் அளிக்காவிட்டால் அதன்பின் வேறு யார் அவர்களை மதிப்பார்கள்?

தவறுவிடும் ஆசிரியர்கள் தண்டிக்கப் படத்தான் வேண்டும். ஆனால் அதிலும் நாகரிகம் தேவை.

- மின்னல்

## கைதாகி விடுதலையான பலர் புலிகளாம்

கடந்த காலத்தில் பொலீசாரால் கைதுசெய்யப்பட்டு பொலீஸ் நிலையங்களில் விசாரிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட பலர் விடுதலைப் புலிகள் அமைப்புடன் நேரடியான தொடர்புடையவர்கள் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக பொலீஸ் பேச்சாளர் தெரிவித்தார் எனக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சந்தேக நபர்களை விசாரிக்கும் அதிகாரிகளின் பலவீனமும் புதிய சட்ட விதிகளுமே இவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கான காரணம் என அந்தப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ-10)


உ
அம்பாள் துணை

துர்க்காபுரம் மகளிர் இல்லம்
தெல்லிப்பழை

16-ம்ஆண்டு நிறைவு விழா

இடம்: யா/ இராமநாதன் கல்லூரி மண்டபம்

காலம்: 15-2-1998 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணி

தலைமை: சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.

ஆசியுரை: நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்

பிரதம விருந்தினர்: திருமிகு. வைத்திய கலாநிதி ந. சிவராஜா (தலைவர், சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

பரிசில் வழங்கல்: திருமதி மலையரசி சிவராஜா (சமுதாய மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

வாழ்த்துரை: திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் (அதிபர், யா/ இராமநாதன் கல்லூரி)

கலை நிகழ்ச்சிகள்
★ சிறுவர் அபிநயப் பாடல்
★ குழு நடனம்
★ நாட்டிய நாடகம் ★ இல்லக்கீதம்

நிர்வாக சபை,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பழை.

(சி-2816)



JAFFNA SCIENCE ASSOCIATION
PRESIDENTIAL ADDRESS

18th February 1998, 3.00 p. m.
KAILASAPATHY AUDITORIUM
University of Jaffna.

''REFORMS IN MEDICAL EDUCATION''
BY:
Prof. S. V. PARAMESWARAN
[ Senior Professor, Faculty of Medicine, University of Jaffna. ]

ALL ARE WELCOME.

General Secretary

(C/2881)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகளை பார்வையிட விதிமுறைகள் தளர்வு

கொழும்பு, பெப். 14

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகால விதிகளின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப்பார்வையிட அவர்களின் உறவினர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த விதிமுறைகள் உடனடியாக நீக்கப்படவிருக்கின்றன.

சட்டமா அதிபருடன் ஈ. பி. டி. பி அமைப்பு வியாழன் நடத்திய பேச்சுக்களில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்கள் வருமாறு:-

★ தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை அவர்களது உறவினர்களில் மூவர் பார்வையிட அனுமதிக்கப்படும்.

★ மாதத்தில் 4 தடவைகள் பார்வையிட அனுமதிக்கப்படும்.

★ தடுத்துவைக்கப் பட்டவர்களைப் பார்வையிடச் செல்பவர்கள் பொலீஸ் சான்றிதழ்களைப் பெறுவதற்கு கொழும்பில் தனியான அலுவலகம் ஒன்று அமைக்கப்படும்.

★ கொழும்பில் கைது செய்யப்படுபவர்கள் தனிச் சிறைப்பிரிவில் வைக்கப்படுவர். (இ-3)

## புத்தூரில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், பெப். 14

புத்தூர் மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 7-30 மணியளவில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் பின்னர் பலியானதாகபாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-9)

# மாங்குளத்தில் ஹெலி சேதம்!

கொழும்பு, பெப். 14

மாங்குளம் பகுதியில் அமைந்துள்ள புலிகளின் நிலைகள் மீது கடந்த செவ்வாயன்று தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த 'எம். ஐ. 24' ரக ஹெலிக்கொப்டர் மீது விமான எதிர்ப்புத் துப்பாக்கி மூலம் புலிகள் தாக்கியதில் அந்த ஹெலிக்கொப்டர் சேதமடைந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

சேதமடைந்த ஹெலி உடனடியாக மின்னேரியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு பழுதுபார்க்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## நிபந்தனையுடன் விடுவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 14

வடமராட்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவத்தினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட சுதிர்காமத்தம்பி பாலச்சந்திரன் என்பவர் மூன்றாம் நாளான வியாழக்கிழமை இரவு நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இன்று சனிக்கிழமை நடைபெறவிருக்கும் அவரது தந்தையின் அந்தியேட்டிக் கிரியையில் பங்குபற்று முகமாகவே அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அந்தியேட்டிக்கிரியை முடிந்ததும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இராணுவமுகாமுக்கு மீண்டும் விசாரணைக்காக வரவேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே இவர் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-15)

## நாரஹேன்பிட்டியில் வெடி குண்டு மீட்பு!

கொழும்பு, பெப். 14

நாரஹேன்பிட்டியில் சலுசல நிறுவனத்துக்கு அருகில் இருந்து குண்டு ஒன்று மீட்கப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை அப்பகுதியில் குண்டு ஒன்று கிடப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

குண்டு செயலிழக்கும் படைப்பிரிவினர் அங்கு அழைக்கப்பட்டு குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (உ.3)

## கொழும்பு நகரில் 6 புலிகள் கைதாம்!

மத்திய கொழும்பில் கடந்த புதன் இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்ட 182 பேரில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஐந்து முக்கிய உறுப்பினர்களும் ஒரு சாதாரண உறுப்பினரும் அடங்குவர் என மூத்த பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என "லங்காதீப" நாளிதழ் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இந்த அறுவரில் நால்வர் மருதானையிலுள்ள விடுதி ஒன்றிலும் இருவர் புறக்கோட்டையிலுள்ள விடுதி ஒன்றிலும் தங்கியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களே இந்த அறுவரையும் அடையாளம் காட்டியுள்ளனர் என்றும்—

இந்த அறுவரும் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்றும்—

அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-10)

## இன்று நடப்பவை

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையினர் தயாரிப்பில் உருவான 'மலநீக்கம்' என்ற நாடகம் இன்று மாலை 2 30 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (உ 5)

★ ★ ★

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் க. நாகராசா தலைமையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

போட்டியில் முதன்மை விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. கமலநாதன், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் கி. சிவமகாராசா ஆகியோரும், கௌரவ விருந்தினராக செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்துகொள்ளவிருக்கின்றனர். (உ-4-5)

★ ★ ★

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு நடத்தும் தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சி ஆரம்ப விழா இருபாலையில் இன்று நடைபெறவுள்ளது.

சி.குணரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் க. பரமநாதன், கெயர் திட்ட முகாமையாளர் எச். ஏ. அருள்ஞானம், அ. சக்திவேல், க. சிவச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (உ-5)

★ ★ ★

புலோலி மேற்கு கலைத்தீப ஜோதி விளையாட்டுக்கழக கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று மாலை 4 30 மணிக்கு நடைபெறவுள்ளன. (உ-109)

★ ★ ★

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தினரால் நடத்தப்படும் "தொழில் உரிமைத்துவமும் சிறுவாணிப முகாமைத்துவமும்" என்ற சான்றிதழ் கற்கை நெறியின் நிகழ்ச்சித் திட்ட அறிமுக வைபவம் இன்று காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் ச. ஆ ஞானேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறைத் தலைவர் நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுவார். (உ-9)

★ ★ ★

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கற்றல் துணைச் சாதனங்கள் தயாரித்தல் போட்டியும், கண்காட்சியும் இன்றும், நாளையும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் காலை 8.45 மணி முதல் நடைபெறும்.

வலயம் இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஐயா இந்த நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். (உ-3)

# வவுனியாவிலிருந்து ஓமந்தை வரை ரயில் பாதை அமைக்கப்படுகின்றது

வவுனியா, பெப். 14

வவுனியாவில் இருந்து ஓமந்தைக்கு ரயில் பாதைகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா ரயில் நிலையத்தில் இருந்து தாண்டிக்குளம் வரை முதல் கட்டமாகவும்—

தாண்டிக்குளத்தில் இருந்து ஓமந்தை வரை இரண்டாம் கட்டமாகவும் - ரயில் பாதை அமைக்கப்படவிருக்கிறது.

அவசர நிதி ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்பட்டுள்ள நிதியில் இருந்து இந்தப் பணி நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

"வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கை ஆரம்பமான பின்னர் தாண்டிக்குளம் பகுதி தளங்கள் மீது விடுதலைப் புலிகள் ஊடுருவி நடத்திய தாக்குதலின்பின் தாண்டிக்குளத்துக்கும், வவுனியாவுக்கும் இடையேயான ரயில் தண்டவாளங்கள், சிலிப்பர் கட்டைகள் என்பன அகற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-164-3)

## செயலகத்தில் மிதிவெடி மீட்பு!

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ் செயலக வளவில் நேற்று மிதிவெடியொன்று கண்டெடுக்கப்பட்டது அதனைப் படையினர் பின்னர் எடுத்துச் சென்றனர்.

யாழ். செயலக ஊழியர்களினால் மண்ணுள் புதையுண்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மிதிவெடி குறித்து உடனடியாகப் படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் அங்கு வந்த இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் மிதிவெடியை தம்முடன் எடுத்துச் சென்றனர். (உ-5)

## போட்டி ரத்து

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு இன்று சனிக்கிழமை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடத்தவிருந்த பண்ணிசைப்போட்டி போதிய மாணவர் இதுவரை விண்ணப்பிக்காமையால் இரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே விண்ணப்பித்த வடமராட்சி மாணவர்களுக்கான பண்ணிசைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 30மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினர் தெரிவித்துள்ளனர் (உ-4)

## நாளை

**மாசி 3**

ஞாயிற்றுக்கிழமை

திதி: சதுர்த்தி

முன் இரவு 11.46 வரை

நட்சத்திரம்: அத்தம்

வைகறை 4.21 வரை.

சுபநேரம்: 9.33-11.03

ராகுகாலம்: 5.03-6.33

(பகலுக்கும் இரவுக்கும் பொதுவான நேரப்படி)

# கசிப்பு தயாரித்த 14 பேர் நீதிமன்றில்

## அவர்களில் அறுவர் பெண்கள்

சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்தமை, கசிப்பு, கள் என்பன வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் 14 பேர் நேற்று முன்தினம் யாழ் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களுள் ஆறு பேர் பெண்கள் ஆவர்.

பூபாலன் ராசகுமாரி—(கொக்குவில்), ஐயாத்துரை பூமணி (கலட்டி). வசந்தன் செல்வமகள்—(திருநெல்வேலி), சந்தியா அல்பிரட்—(பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்), நாகமணி நாகராஜா — (கொக்குவில்), சந்தியா அன்ரன் — (குருநகர்), சின்னத்துரை துரை — (குருநகர்), பசில் ஞானேந்திரன் — (ஈச்சமோட்டை), ராஜதுரை நிமலன் — (பாசையூர்), செபமாலை மரியநாயகம் — (குருநகர்), செல்லப்பா ஐயாத்துரை — (கொக்குவில்), செல்லமுத்து கனகு — (திருநெல்வேலி), அந்தோனி தேவதாஸ்— (சுண்டுக்குளி), ராஜதுரை யூட்பிளெயினர் அன்ரன் (குருநகர்) ஆகிய 14 பேருமே மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டு நீதிவான் பா. பாலச்சந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் நீதிவான் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

## நாளை

கொழும்புத்துறைஆத்தியம்பதி சந்திரசேகரர்-விநாயகர் ஆலய இந்து இளைஞர் மன்றத்தின் ஓராண்டுப் பூர்த்தி விழாவும், "கணநாதம்" இதழ் வெளியீட்டு விழாவும் நாளைபிற்பகல் 2-30மணிக்கு கொழும்புத்துறைதுரையப்பா வித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் கௌரவ விருந்தினராகப் பங்குபற்றுவார். (உ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம் றக்கா வீதி புனித திரேசாள் ஆலயப் பங்கு மக்கள் அருட்தந்தை ஜே. பி. ஈ செல்வராசா அடிகளாருக்கு அளிக்கும் பிரிவு உபசாரமும், அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாருக்கு அளிக்கும் வரவேற்புபசாரமும் நாளை பிற்பகல் 4-30 மணிக்கு ஆலய முன்றலில் இடம் பெறும். (உ-3)

★ ★ ★

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் நாளை 15ஆம் திகதி காலை 10-00 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-5)

★ ★ ★

திருநெல்வேலி பேர். பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவாநிலைய மகாமண்டபத்தில் தங்கரதத்தில் சுவாமி பவனிவரும் நிகழ்வு நாளை பிற்பகல் 1-30 மணிக்கு நடைபெறும்.

பாபாவின் அஷ்டோத்திர நாமாவளி வீடியோ படக்காட்சி ஆகியனவும் இடம்பெறும். (உ-3)

## நெல் மூடைகள் தீயினால் சேதம்

வயலில் இருந்து கொண்டுவரப்பட்டு வீட்டின் முன்னால் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகள் மீது போடப்பட்டிருந்த வைக்கோல் மீது திடீரென தீப்பிடித்ததில் நெல் மூடைகள் எரிந்து சாம்பரான சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சாவகச்சேரி கல்வயலில் இடம்பெற்றது.

சூடுமிதிப்பு வேலைகள் முடிந்து நெல் மூடைகளும் வைக்கோலும் டிராக்டரில் கொண்டு வந்த போது இரவாகிவிட்டதால் இவற்றினை வீட்டின் முற்றத்தில் பறித்து விட்டு டிராக்டர் சென்று பின்னர் இரவு சமையலறையிலிருந்து பறந்த தீப்பொறி வைக்கோலில் பிடித்து பெரும் சுவாலையாக மாறியதால் நெல் மூடைகளைக்காப்பாற்ற முடியாமல் போனதாக தெரிவிக்கப்பட்டது. (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபை பதவிகள்;

# பகிஷ்கரிக்க ரெலோ முடிவு

## ஏனைய கட்சியினர் புதனன்று பதவியேற்பு

கொழும்பு, பெப். 14

யாழ். மாவட்டத்தில் உள்ள 16 உள்ளூராட்சிச் சபைகளுக்கும், கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கும் நடந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி வைபவ ரீதியாக பதவியேற்கவிருக்கும் நிலையில்—

இத்தேர்தலில்வல்வெட்டித்துறை நகரசபையின் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள ரெலோ அமைப்பு இந்த நிகழ்வைப் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளது.

ரெலோ அமைப்பின் முதல்வர் எம். கே. இவராஜலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தை நிறுத்தி நிபந்தனையற்ற பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று முன்வைத்த கோரிக்கைக்கு அரசாங்கத்திடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் இந்த முடிவைத் தாங்கள் எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை நகர சபை உட்பட ஏனைய சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள தமது அமைப்பின் 18 உறுப்பினர்களும் இந்த நிகழ்வைப் பகிஷ்கரிப்பர் எனவும் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தலைவர், உப-தலைவர் உறுப்பினர்கள் விவரங்களை அனுப்புமாறு தேர்தல் ஆணையாளர் சகல கட்சிகளிடமும் எழுத்துமூலம் கேட்டிருந்தார்.

ரெலோ தவிர்ந்த ஏனைய கட்சிகள் இந்த விவரங்களை அனுப்பியுள்ளன.

விவரங்களை அனுப்பாத ரெலோ அமைப்புக்குறித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க இருப்பதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(உ-3-7)

# உயர்தரப் பரீட்சை முடிவுகள் இன்று!

## யாழ்ப்பாணத்துக்குப் புதனன்றே?

கடந்த ஓகஸ்ட் மாதம் நடந்த ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சை முடிவுகள் இன்று கொழும்பில் வெளியாகும் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் — யாழ். மாவட்ட மாணவர்களுடைய பரீட்சை முடிவுகள் எதிர்வரும் புதன்கிழமை அளவிலேயே யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்திலிருந்து தோற்றிய தனியார் பரீட்சார்த்திகளின் முடிவுகள் வெளியாவதில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

(உ-3-7)


எமது ஒறிஜினல் வெளியீடு!

சுரேஸ்கோபி, ரஞ்சிதா

மாபியாங் கேங் (ORI)

[இவர்களை எதிர்த்துப் போராடிய ஒரு இளைஞனின் கதை]

சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம்.

(சி/2886)

விம்பம்

யாழ். பல்கலைக்கழக கலைவட்டமும் நுண்கலைத்துறையும் இணைந்து நடத்தும்

ஓவியர் ஆசை இராசையாவின் ஓவியக் காட்சி

நாள்: 15, 16, மாசி, 1998

நேரம்: 10 மணி — 4மணி வரை

இடம்: முகாமைத்துவ மண்டபம் யாழ். பல்கலைக்கழகம்.

சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்

(ரவுசர் தினுசுகளின் ராஜமுத்திரை)

73, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(53314)

நியூலலிதா ஜுவல்லர்ஸ்

கடந்த 28 வருட காலமாக யாழ். நகரில் இயங்கி வரும் எமது ஸ்தாபனம்

நியூ லலிதா எனும்

பெயரை கருவாகக் கொண்டு எவ்வித மாற்றங்களுடனும் புதிதாக கிளை எதனையும் ஆரம்பிக்கவில்லை என்பதை எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

170, கஸ்தூரியார் வீதி,

(ராஜா தியேட்டர் நேர் முன்பாக)

யாழ்ப்பாணம்.

165, செட்டியார் தெரு, கொழும்பு - 11, 01. 332948

1604. GERRA STREET, TORONTO, CANADA, 416 - 4612610.

(53873)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14 - 02 - 98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## அத்தாஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

வம் நடந்திருக்கின்றது.

சில மோட்டார் சைக்கிள்களிலும் நீல நிற டொயட்டா வாகனம் ஒன்றிலும் வந்த — சிவில் உடை தரித்த — காடையர்களே வாசலில் இருந்த வீட்டு உதவியாளரைத் தாக்கி விட்டு, வீட்டுக் கதவைப் பலவந்தமாகத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து இக்பால் அத்தாஸை மிரட்டியிருக்கின்றனர்.

வீட்டுக்குள் விலை மாதர்கள் இருப்பதாக அறிந்து அது குறித்து தாங்கள் விசாரணை நடத்த வந்திருப்பதாகக் கூறிக் கொண்டு — புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் போன்று தம்மைக் காட்டிக் கொண்டபடி —அவர்கள் வீட்டுக்குள் நுழைந்ததாக ஒரு செய்தி தெரிவித்தது.

அச்சுறுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட குழு அங்கிருந்து அகன்று சென்றதையடுத்து அதுபற்றிய தகவல் வெளியேகிய எம். பிக்கள், அமைச்சர்கள், அதிகாரிகள் எனப் பலர் நலம் விசாரிக்க அத்தாஸ் வீட்டுக்கு விரைந்தனர்.

அப்படி அவர்கள் வந்து கூட்டமாக அத்தாஸ் வீட்டில் நின்ற சமயமும் — இரவு 11 மணியளவில் — மேற்படி காடையர் குழு அதே வாகனத்தில் வந்து, அத்தாஸ் வீட்டுப் பிரதேசத்தில் நின்று நிலைமைகளை நோட்டம் விட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

(உ-3-7-21)

## தோட்டத்...

(முதலாம் பக்கத் தொடர்)

புதிய ஏற்பாட்டின்படி —

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 95 ரூபா சம்பளத்துடன் 6 ரூபா நாளாந்தப் படியும் சேர்த்து 101 ரூபா சம்பளமாக வழங்கப்படும்.

இறப்பர் தோட்டத் தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 95 ரூபாவைச் சம்பளமாகப் பெறுவர். முதல்தர இறப்பரின் விலையைப் பொறுத்து ஒவ்வொரு ரூபாவுக்கும் 80 சதத்தை மேலதிகக் கொடுப்பனவாகத் தொழிலாளர்கள் பெறுவர்.

கடந்த 6 ஆம் திகதி முதல் தேயிலை, றப்பர் தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 5 லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வந்ததால் தோட்டத் தொழில்துறை செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது தெரிந்ததே. (உ-3-7)

# வெகுஜனப் போர்

திருகோணமலை, பெப். 14

திருகோணமலை தம்பலகமம் பாரதிபுரத்தில் 8 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து பாரதிபுரத்தில் இன்று வெகுஜனப் போராட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

## மாங்குளத்...

(முதலாம் பக்கத் தொடர்)

குரல்' தகவல் எதனையும் வெளியிடவில்லை.

மாங்குளத்துக்கு அண்மையில் பலத்த மோதல்கள் இடம்பெறுவதாகவும் —

விமானப் படையினர் தொடர்ந்து கடும் தாக்குதலை நடத்தி வருவதாகவும்—

நேற்று முன்தினம் மாங்குளம் வடக்குப் பகுதியில் இருந்து விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதல்கள் விமானப்படை நடவடிக்கை மூலம் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளதாகவும்—

பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் அறிவித்தன.

மாங்குளத்துக்கு தெற்கே சுமார் இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கொல்லர் குளியம்குளம் வரை படைகள் முன்னேறியிருப்பதாக ஒரு தகவல் தெரிவித்த போதிலும் அதை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

(உ-3-7)

## பத்திரிகை...

(முதலாம் பக்கத் தொடர்)

தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு சமுகமளித்த செய்தியாளர்கள் யுத்தம் தொடர்பாகவே அமைச்சரிடம் கேள்விகளைத் தொடுத்தனர்.

''கிளிநொச்சி நகர் விடுதலைப் புலிகள் வசம் உள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர். ஆனால் அரசு அதை மறுக்கிறதே?'' என்று செய்தியாளர்கள் அவரிடம் கேட்டனர்.

''கிளிநொச்சி நகரின் தென் பகுதி ஊடாக ஊடுருவ முயன்ற புலிகள் விரட்டியடிக்கப்பட்டனர். கிளிநொச்சி நகரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புலிகள் கைப்பற்றவில்லை. அப்படி அவர்கள் கூறுவது வெறும் பிரசாரமே!'' — என்று அமைச்சர் தெரிவித்தார். (உ-10-3)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் வைத்தே நாற்பது தொன் வெடிமருந்துகளைக் கொண்ட வாணங்கள் விண்ணுக்கு ஏவப்பட்டன.

இலங்கையின் சுதந்திரதினப் பொன்விழாவை ஒட்டி வாண வேடிக்கைகளை நடத்துவதற்காக 40 தொன் எடை கொண்ட வாணங்களை சீனா, ஸ்ரீலங்காவுக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

சுதந்திரப் பொன் விழாக் காலத்தில் அப்போது நிலவிய பதற்ற சூழ்நிலையைக் கருதி வாணவேடிக்கை நிகழ்ச்சி நடத்தப்படவில்லை. திடீரென முன்னறிவித்தல் ஏதுமின்றி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்றிரவு வாண வேடிக்கைக் காட்சிகள் இடம் பெற்றன.

பெரும் முழக்கத்துடன் வாணங்கள் ஆகாயத்தில் திடீரென வெடித்த சத்தத்தைக் கேட்ட தலைநகர மக்கள், தலைநகரில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையம் ஏதோ தாக்கப்படுவதாகப் பதற்றம் அடைந்தனர். தொலைபேசிகள் அலறின; வீடுகளில் இருந்தோர் தொடர்ந்து சத்தம் வரும் திசையை அவதானிப்பதற்காக வீட்டில் செயற்பட்டுக் கொண்டிருந்த தொலைக் காட்சிப் பெட்டிகள், வானொலிகள் போன்றவற்றை நிறுத்திவிட்டு வீதிக்கு ஓடிவந்தனர். அதன் பின்னர் உண்மை புரிய ஆரம்பித்ததும் நகரம் வழமைக்குத் திரும்பியது. (உ-3-10)

## ஓரேயொரு...

(முதலாம் பக்கத் தொடர்)

''இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் உடனடியாக விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். முடிந்தளவு விரைவில் விசாரணைகள் நடத்தி முடிக்கப்படும்.

''விசாரணை அறிக்கை கிடைத்ததும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்''— என்று அமைச்சர் ரத்வத்தை தெரிவித்தார்.

''தற்போது அத்தாஸின் வீட்டுக்கு காவலுக்கு ஒரேயொரு பொலிஸ்காரரே நிறுத்தப்பட்டுள்ளார். இத்தகைய கொலைக்குழு வந்தால் இந்த ஒரேயொரு பொலிஸாரால் அவர்களைத் தடுத்து நிறுத்த முடியுமா?'' — என்று ரத்வத்தையிடம் செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

''பொலிஸார் திறமைசாலிகள். அந்த நடவடிக்கைக்கு ஓரேயொரு பொலிஸ்காரரே போதுமானது'' — என்று ஜெனரல் ரத்வத்தை பதிலளித்தார். இந்தப் பதில் குறித்து பத்திரிகையாளர் பலத்த அதிருப்தி வெளியிட்டனர்.

இதேசமயம் —

அத்தாஸ் பணிபுரியும் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையின் அலுவலகத்துக்குக் காவலாக மூன்று இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர். (உ-10)

## எனது...

(முதலாம் பக்கத் தொடர்)

வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்தது.

அச்சமயம் நான் வீட்டு மாடியில் தொலைக் காட்சி பார்த்துக்கொண்டு இருந்தேன் வந்தவர்கள் அனைவரும் சாதாரண உடையில் இருந்தனர். அவர்கள் அனைவரினதும் கையில் ஒரே மாதிரியான - பிரவுணிங் ரக தானியங்கிப் பிஸ்டல்கள் இருந்தன.

ஒருவர் மேல்மாடிக்கு ஏறி வந்து துப்பாக்கியை 'லோட்' செய்து எனது தலையில் குறிவைத்தார். பின் என்நெஞ்சில் துப்பாக்கியை வைத்து சத்தமிட்டார் எனது எலும்புகளை முறித்து விடுவதாக அச்சுறுத்தினார்.

அந்த குழுவின் தலைவர் போல் இருந்த ஒருவர் மேல் மாடியிலிருந்து கீழே இறங்கி வரும்படி கத்தினார்.

கீழே எனது ஏழு வயது மகளின் அறைக் கதவு திறந்திருந்தது. உள்ளே எனது மகளையும் வீட்டு உதவியாளரையும் வைத்துப் பூட்டுவதற்கு அவர்களில் ஒருவர் முயன்றார். துப்பாக்கியை எனது மகளை நோக்கி அவர் பிடித்திருந்தார்.

ஆயுதம் தாங்கிய இருவர் என்னை அப்போது அச்சுறுத்தினர். அதனால் நான் கீழே இறங்கி வந்தேன்.

நான் கீழே இறங்கி வரவும் மகள் அவர்களிடமிருந்து தப்பி ஓடி வந்து என்னைக் கட்டிப் பிடித்தாள்.

''நீங்கள் யார்?'' அவர்களிடம் கேட்டேன்.

''அதிகம் கதைத்தால் உனது வீட்டைத் தவிடு பொடியாக்குவோம்'' என்று அவர்களில் ஒருவர் கத்தினார்

அப்போது என்ன காரணத்தினாலோ ஒருவர் ஓடிவந்து ''நாங்கள் போவோம்; நாங்கள் போவோம்'' — என்று சத்தமிட்டார். அதனைத் தொடர்ந்து அவர்கள் வெளியேறினார்கள்.

மேற்படி நபர்கள் வீட்டுக்குள் நுழைந்த சமயம் அவர்களுடன் வந்த வேறு பலரும் வீட்டைச் சுற்றியும் வீட்டுப் பிரதேசத்திலும் ஆயுதங்களுடன் நடமாடியதாகப் பின்னர் தெரிந்து கொண்டேன்.

—இவ்வாறு அத்தாஸ்மேலும் தெரிவித்தார். (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழி உங்களிடம் அதன்
ஒளி எங்களிடம்

**எரிக்கணேஷ்**

மூக்குக்கண்ணாடி விற்பனையாளர்
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
(சி–2873)


## கருத்துக் கலசம்

### சமூக நிலையம்

போரினால், பொதுவாகவே ஈழத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வு பல்வேறு துறைகளிலும், பல்வேறு வழிகளாலும் பெரும் பாதிப்புக்களைக் கண்டுள்ளது. சமூக மற்றும் வாழ்க்கைக் கட்டமைப்பின் பிரதான அங்கங்கள் மட்டுமன்றி மக்களின் முன்னேற்றத்துக்குப் பக்கவியல் ஆதாரங்களாக இருந்த அமைப்புகளும் சிதறுண்டும் சிதைந்தும் போயுள்ளன.

இந்த வகையில் கிராம மட்டத்தில் மட்டுமன்றி நகர மட்டத்தில் கூட மக்களை ஒன்று சேர்த்து வைத்திருந்த சனசமூக நிலையங்களும் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் பெரிதும் பாதிப்புற்றுள்ளன. குடாநாட்டில் பல செயல் இழந்துள்ளன.

மக்களின் நாளாந்த தேவைகள் உட்படக் கல்வி, சுகாதாரம், விளையாட்டு, கலை, கலாசாரம் மற்றும் பல துறைகளில் கிராம,–குறிச்சிமட்டங்களில் மக்களுக்குப் பணியாற்றி வருபவை சனசமூக நிலையங்கள்; கிராம அபிவிருத்திச் சங்கங்கள். மக்களால் அமைக்கப்பட்டு, மக்களால் நிர்வகிக்கப்பட்டு, மக்கள் முன்னேற்றத்துக்கு உழைக்கும் அமைப்புகள் என்ற வகையில் அவை சிறப்புடையவை; பயனுடையவையுமாகும்.

அந்தந்தச் சிறுபிரதேசத்தின் —மக்களின்முன்னேற்றத்துக்கு உழைக்க வல்ல முன்னணி அமைப்புகளாக இவை இரண்டும் விளங்குகின்றன.

இந்தச் சமூக அமைப்புகளின் நிர்வாகப் பதவிகளைப் பிடித்துக் கொள்ளும் ஒரு சிலர், அவற்றைத் தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப நடத்துவதும், சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொள்வதும், ஊழல், மோசடிகளில் ஈடுபடுவதும் உண்டு.

அதே போன்று இச்சங்கங்களை நிர்வகிப்பதில் அல்லது கொண்டு நடத்துவதில் ஏற்படும் தகராறுகள், பிணக்குகளால் குறிப்பிட்ட கிராமத்து அல்லது குறிச்சி மக்கள் இரண்டு படுவதும் உண்டு; சண்டை சச்சரவுகள் மூள்வதும் வழமை.

இத்தனை பின்னடைவுகள், பிரச்சினைகள் இருப்பினும் சன சமூக நிலையங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும் மக்களின் அடிமட்ட ஜனநாயக அமைப்புகளாகத் திகழும் சிறப்பைப் புறந்தள்ளிவிட முடியாது. மக்கள் தமது முன்னேற்றத்துக்கும் தமது பகுதி அபிவிருத்திக்குத் தாமே நேரில் பங்குபற்றி உழைக்கும் தன்மையையும் நோக்கற்பாலது.

ஆகையால் இவற்றை அழியவிடாது அல்லது அழித்துவிடாது அவை இயங்க வகை செய்ய வேண்டும்.

சனசமூக நிலையங்களுக்கும், கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கும் நேர்மையான, சமூக நலன் நாடியவர்களை நிர்வாகிகளாகத் தெரிவு செய்து ஒற்றுமையுடன் செயற்பட்டால் கிராம மட்டத்தில் பல பயனுள்ள பணிகளைச் செய்ய வழிபிறக்கும். எல்லாம் மக்களின் கைகளில் தான் உண்டு.

# கொத்துக் கொத்தாகக் கோழிகள் கொன்றொழிக்கப்பட்ட கொடூரம்!

அந்த 'ஒப்பரேஷன்' மிகத் துரிதமாகவும் அதே நேரம் மிகக் கொடூரமாகவும் இருந்தது.

கைகளில் கையுறைகளும் முகத்தில் முகமூடிகளும் அணிந்த ஆயிரத்து முந்நூறு பேர் மிகப்பெரும் அழிவுகளைச் செய்யும் படுகொலைப் பாதகர்களைப் போல கண்மூடித்தனமாக சுமார் 14 லட்சம் கோழிகளைக் மிகவேகமாகக்கொன்றொழித்த 'ஒப்பரேஷன் தான்' அது.

தனது நாட்டில் இருக்கும் கோழிகள்,குஞ்சுகள் அனைத்தையும் ஒரே மூச்சில் கொன்றொழிக்கும் ஹொங்கொங் அரசின் இந்நடவடிக்கைக்கு ('ஒப்பரேஷன் சிக்கன்'?) மதவாதிகளிடமிருந்து ஒரேயடியாக எதிர்ப்புக் கிளம்பியது. ''ஹொங்கொங்கிற்கு ஏதோ அழிவு நேரப் போவதற்கான அறிகுறி இது'' என்று தெரிவித்து சீனாவில் உள்ள பௌத்த பிக்குகள் இந்நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

கொத்துக் கொத்தாக கோழிகளை — குஞ்சுகளை— வதம்செய்வதுகொடூரம்தான்

## ஹொங்கொங்கில் நடந்த பயங்கர 'ஒப்பரேஷன்!

என்றாலும் ஹொங்கொங் அரசுக்கு வேறு வழி புலப்படவில்லை என்பதுதான் உண்மை.

இந்தப் புத்தாண்டைப் பெரும் எடுப்பில் கோழிப் படுகொலையுடன் ஆரம்பிக்கும் நிலை ஹொங்கொங்கில் ஏற்பட்டதற்கான சரித்திரம் கடந்த மே மாதத்தில்தான் தொடங்கியது எனலாம்.

அப்போது, 'ஃப்ளு' போன்ற ஒரு காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட மூன்று வயதுக் குழந்தை ஒன்றைப் பெற்றோர் ஹொங்கொங் ஆஸ்பத்திரி ஒன்றுக்கு எடுத்து வந்தனர். டாக்டர்கள் 'அன்ரிபயற்றிக்ஸ்' மற்றும் 'அஸ்பிரின்' குளிகைகளைக் கொடுத்தனர். காய்ச்சல் குறையவில்லை. பிரபல 'குயின்ஸ் எலிஸெபத்' ஆஸ்பத்திரிக்கு குழந்தை எடுத்துச் செல்லப்பட்டது. குழந்தையின் குருதி மற்றும் நீர்ப்பாய மாதிரிகள் எடுக்கப்பட்டன. ஆனால் அதில் மனிதரில் ஃப்ளுவை ஏற்படுத்துவது தொடர்பாக அறியப்பட்ட வைரஸ்கள் ஏதும் காணப்படவில்லை. ஆனால் நுரையீரலில் பெரும் தொற்று ஏற்பட்டிருப்பதை 'எக்ஸ்—றே' படங்கள் காட்டின.

இறுதியில் மூச்சுத் திணறலுக்கு ஈடுகொடுக்க முடியாது குழந்தை மரணமாயிற்று.

குழந்தையின் மரணத்துக்கு சரியான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாத ஹொங்கொங் மருத்துவர்கள், குழந்தையின் உடற்பாக மாதிரிகளை அமெரிக்காவிலும் நெதர்லாந்திலும் உள்ள நவீன மருத்துவ ஆய்வு கூடங்களுக்கு அனுப்பினர்.

அதே சமயம் செங் ஷா வான் என்ற கோழிச்சந்தையில் நூற்றுக்கணக்கான கோழிக்குஞ்சுகளும் திடீரென இறந்தன.

அது குறித்து விலங்கியல் வல்லுநர்கள் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்த போதுதான் — மேற்படி சிறுவன் மரணமாகி மூன்று மாதம் கழித்து — அந்தச் சிறுவனின் மரணம் தொடர்பான ஆய்வுகூட அறிக்கைகள் ஹொங்கொங் அரசுக்குக் கிடைத்து பேரதிர்ச்சியை ஏற்படுத்தின.

கோழிகளில் புதிதாகத் தோன்றிப் பரவிய 'H5N1' ('எச்5என்1')என்றவைரஸே அத்தகைய வைரஸ் பரவிய கோழியை சாப்பிட்டவர்களுக்குப் பரவி, புதியரக ஃப்ளு நோயை ஏற்படுத்தி, மரணத்தின் வாசலுக்கு அவர்களையும் கோழிகளையும் இட்டுச் செல்கின்றது என்ற உண்மையைத்தான் அந்த அறிக்கைகள் அம்பலப் படுத்தின.

இதற்கிடையில் இத்தகைய ஃப்ளுவினால் பீடிக்கப்பட்ட 16 பேர் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் நான்கு அல்லது ஐந்து பேர் உயிரிழக்கவே ஹொங்கொங்கில் பதற்றம் தொற்றிக் கொண்டது.

1968 ஆம் ஆண்டிலும் ஹொங்கொங் ஃப்ளு என்ற ஒருவகைப் ஃப்ளுவினால் (அது கோழிகள் மூலமாகப் பரவியது அல்ல) 46 ஆயிரம் பேர் இறந்திருந்தனர். இப்போதும் இந்த ஃப்ளுவினாலும் அப்படியொரு நிலைமை உருவாகி விட்டால்?

இந்தப் பயத்தினால் — வேறுவழியின்றி — ஹொங்கொங்அரசு,படுகொலைஒப்பரேஷனைச் செயற் படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

பூங்காக் காவலர்களாகவும் நாய் பிடிகாரர்களாகவும் பணியாற்றிய ஆயிரத்து முந்நூறு பேர் களத்தில் குதித்தனர். பாதிக்கப் பட்ட பகுதியை ஒரு பெரும் வட்டமாகச் சுற்றிவளைத்துக் கொண்டு அங்குள்ள கோழிகள் — குஞ்சுகள் அனைத்தையும் ஒரே மூச்சில் கொன்றொழித்தனர்.

கோழிப்பண்ணைகள், கோழிச்சந்தைகளை முற்றுகையிட்ட அரசின் கோழி அழிப்பு ஊழியர்கள் கையில் கத்தியுடன் சென்று கோழிகளை லபக், லபக் என்று பிடித்து கழுத்தைச் சீவி எறிந்தார்கள். இரத்தம் பீறிட சிறகை அடித்து, அடித்துத் துடிக்கும் கோழியின் முண்டங்கள் இரத்த வெள்ளத்தில் ஓரிடத்தில் போட்டுக் குவிக்கப்பட்டன.

மறுபுறத்தில் கழிவுப் பொருட்களைச் சேகரிக்கும் பைகளுடன்(Garbage Bags) சென்ற மற்றொரு அழிப்புக் குழு, கோழிகளையும் குஞ்சுகளையும் 'லபக், லபக்' என்று பிடித்து உயிருடன் அந்தப் பைகளுக்குள் போட்டு நிறைத்தது. பின்னர் கோழிகள் உயிருடன் இருக்கத்தக்கதாக அந்தப் பொதிகளுக்குள் காபனீரொட்சையிட்டு நிரப்பப்பட்டு, பொதிகள், கட்டப்பட்டன; உள்ளே உயிருடன் இருக்கும் கோழிகள் மூச்சுத் திணறி உயிரிழக்க விடப்பட்டன.

இவ்வாறு கொடூரக் கொலைக்கு உள்ளான கோழிகளின் எடை ஆயிரத்து முந்நூறு தொன். அவ்வளவும் இதற்கென அவசரமாகத் தயாரிக்கப்பட்ட இராட்சதக் குப்பைக் கூடைகளில் திரட்டப்பட்டு, ஒரு பெரிய குழியில் — கூடவே பல விஷகிருமிநாசனிகளுடன் போடப்பட்டு — புதைக்கப்பட்டது.

அரசின் இந்த 'ஒழிப்பு ஒப்பரேஷனிலும்' பல ஓட்டைகள்.

பல இடங்களில் கோழி ஒழிப்பு நடவடிக்கைகளின் கண்களுக்கு மண் தூவி விட்டு, அல்லது 'டிமிக்கி' கொடுத்துவிட்டு கோழிகள், குஞ்சுகள் பல நூற்றுக் கணக்கில் தப்பிவிட்டன. சில இடங்களில் காபனீரொட்சைட்டுடன் பைகளில் பொதி செய்யப்பட்ட கோழிகள் கூட பைகளுக்கு 'கயிறு கொடுத்துவிட்டு' தப்பிவிட்டன.

சில இடங்களில் கோழிகளின் உடல்கள் அடைக்கப்பட்ட பொதிகள் கழிவு இடங்களுக்கு எடுத்துச்செல்லப்படாமல் நாறின; நாய்களும், பூனைகளும் அவற்றை இழுத்துப் போட்டு பரவி, சுகாதாரச் சீரழிவை ஏற்படுத்தின.

இவ்வாறு பல குளறுபடிகளுக்கு மத்தியில் நடத்தி முடிக்கப்பட்ட 'கோழி அழிப்பு' திட்டம் பயன் தந்ததா? ஃப்ளு வைரஸ் பரவாமல் ஒழிக்கப்பட்டதா?— இவற்றுக்கான பதிலை காலம் தான் தரவேண்டும்.

ஆனால் அரசின் இந்த 'ஒப்பரேஷனால்' ஹொங்கொங்கில் உள்ள பல கால்நடைப் பண்ணையார்களுக்கு பெரு நஷ்டம்.

கடந்த மார்ச் மாதம் கால் மற்றும் வாய் தொடர்பான ஒருவகை தொற்று நோய்ப் பரவலுக்கு பன்றிகளில் புதிதாகத் தோன்றியிருக்கும் ஒரு கிருமியே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து தாய்வானில் மூன்று லட்சம் பன்றிகள் கூண்டோடு அழிக்கப்பட்டன. இதன் காரணமாக ஹொங்கொங்கில் பன்றி வளர்ப்பில் ஈடுபட்டிருந்த பல பண்ணையார்களும் தமது வர்த்தகத் துறையை பன்றிப் பண்ணையிலிருந்து

தொகுப்பு
**கவிப்பிரியா**

திருப்பி கோழிப்பண்ணைக்கு இடம் மாற்றினர். அவர்கள் அனைவரினதும் வயிற்றில் அடிப்பது போல இந்தப் புதுவகை கோழி வைரஸ் தோற்றம் பெற்றிருக்கின்றது.

இந்தப் பாரிய கோழி அழிப்பால் ஹொங்கொங்கில் உள்ள கோழி வளர்ப்பாளர்களுக்கு பேரிடி என்றாலும் மறுபுறத்தில் பிற நாடுகளில் இருக்கும் வேறு கோழிப் பண்ணையாளர்கள் நிலைமையைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி பெரும் பணம் பண்ணிக் கொண்டார்கள்.

குளிரூட்டப்பட்ட அல்லது குளிரில் விறைக்க வைக்கப்பட்டிருக்கும் கோழி இறைச்சியில் மேற்படி வைரஸ் உயிர் வாழாது என்று சில ஆய்வு நிபுணர்கள் கூறியதை வைத்துக்கொண்டு, தாய்லாந்தின் கோழிப்பண்ணை நிறுவனம் ஒன்று இப்போது தினசரி இருபதாயிரம்—குளிரில் விறைக்க வைக்கப்பட்ட —கோழிகளின் இறைச்சியை ஹொங்கொங்குக்கு அனுப்பத் தொடங்கியிருக்கின்றது. கோழிகள் கூண்டோடு அழிக்கப்பட்டதால் கோழிஇறைச்சிக்கு ஹொங்கொங்கில் ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டை நன்கு பயன்படுத்திக்கொண்டிருக்கின்றது அந்த நிறுவனம். ★

★ 1918 — 1919 இல் பரவிய இதே போன்ற ஒரு ஃப்ளுவினால் இரண்டு கோடிப் பேர் உயிரிழந்தனர்.

★ 1976 இல் அமெரிக்காவின் நியூஜேர்ஸியில் வேறு ஒரு வகை ஃப்ளுவினால் பல டசின் இராணுவத்தினர் பாதிக்கப்பட்டனர்; ஒருவர் உயிரிழந்தார்.

★ இந்த நூற்றாண்டில் 1900, 1918, 1957, 1968 ஆம் ஆண்டுகளில் இவ்வாறு புதிய புதிய வைரஸ்கள் தோன்றி மனித குலத்துக்கு எச்சரிக்கை மணி அடித்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுஹார்ட்டோவின் ஆட்சிக்கு எதிராக

# இந்தோனேசியாவில் கலவரங்கள்

கடுமையான பொருளாதார நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்டுள்ள இந்தோனேசியாவில் ஏற்பட்டு வரும் அரச எதிர்ப்புக் கலவரங்கள் 77 வயது நிரம்பிய ஜனாதிபதி சுஹார்ட்டோவின் ஆட்சிக்கு அச்சுறுத்தலாக மாறிவருகின்றன.

உடல் நலம் குன்றி உள்ள சுஹார்ட்டோ, பதவியில் இருந்து விலகி சுலபமான ஆட்சி மாற்றத்துக்கு வழி வகுக்கவேண்டும் என்ற கோரிக்கை சமீப காலமாக ஆளும் கோல் கார் கட்சிக்குள் (GOLKAR) வலுப்பெற்று வந்தது.

சுஹார்ட்டோ பதவி விலகலாம் என்ற ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன.

எனினும் இந்த ஊகங்களுக்கு எல்லாம் ஆப்புவைப்பது போன்று ஏழாவது தவணைக்கும் (மேலும் 5 வருடங்கள்) ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட சுஹார்ட்டோ இணங்கிஇருப்பதாக ஆளும் கோல்கார் கட்சி அறிவித்துள்ளது.

சுஹார்ட்டோவின் 6ஆவது தவணை பதவிக்காலம் எதிர்வரும் ஜூலை மாதம் முடிவடைகிறது. மீண்டும் அவர் போட்டியிட எடுத்த முடிவு துயரம் தரக்கூடிய அதே சமயம் தவிர்க்க முடியாதது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

கடந்த 33 வருட காலமாக பதவியில் இருக்கும் சுஹார்ட்டோ தனக்கென ஓர் அரசியல் வாரிசை உருவாக்கவில்லை. அவர் உடனடியாகப் பதவிதுறக்கும் பட்சத்தில் ஆளும் கட்சிக்குள் அதிகாரப்போட்டி ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.



சுஹார்ட்டோ

## பொருளாதாரம் வீழ்ச்சி அடைய குடும்ப ஆதிக்கமும் காரணம்

### வங்குரோத்து நிலைக்கு காரணம் என்ன?

சனத்தொகையைப் பொறுத்தும் விஸ்தீரணத்தைப் பொறுத்தும் ஆசியாவிலேயே மூன்றாவது பெரிய நாடு இந்தோனேசியா. இதன் சனத்தொகை 20 கோடி ஆகும். உலகிலேயே பெரிய இஸ்லாமிய நாடு. சிறந்த மூலவளங்களை மட்டும் அல்ல கடும் உழைப்பாளர்களையும் கொண்ட நாடு இது.



இந்தோனேசியாவில் கலவரங்களில் ஈடுபட்டோரை அடக்குவதற்கு பொலீஸார் தயாராகின்றனர்.

இப்படியான நாடு இன்று வங்குரோத்து நிலைமையை அடைவதற்குக் காரணம் என்ன?

நாட்டின் வளங்களில் பெரும் பகுதி சுஹார்ட்டோ குடும்பத்தின் கையில் இருப்பதே நாடு வங்குரோத்து நிலையை அடைய முக்கிய காரணம் ஆகும்.

நாட்டின் விவசாயம், கைத்தொழில், சுரங்கத் தொழில் முதல் தொலைத் தொடர்பு, வங்கி, தோட்டத்துறை வரை சுஹரார்ட்டோவின் புதல்வர்களின் ஆதிக்கத்திலேயே இருந்து வருகின்றன.

வெளிநாட்டவர் ஒருவர் விமானம் மூலம் இந்தோனேசியாவின் நலைநகர் ஜகார்த்தா செல்வாரானால் அவர் பயணம் செய்யும் எயர் பஸ் சுஹாரீட்டோவின் மகனின் செம்பதி (SEMPATI) எயர் லைன் கம்பெனியினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட தொன்றாகவே இருக்கும்.

அவர் இறங்கும் விமான நிலையம் சுஹார்ட்டோவின் மற்றொரு புதல்வரின் பொறியியல் கம்பனியால் நிர்மாணிக்கப்பட்டதாக இருக்கும். அவர் பயணம் செய்யும் டாக்சி, அவர் தங்கும் 5 நட்சத்திர ஹையட் (HYATT)

**உலக உலா**
**என்.பி.சீலன்**

ஹோட்டல் எல்லாம் சுஹார்ட்டோவின் புதல்வர்களுக்கும் புதல்விகளுக்கும் சொந்தமானவையே.

சிகரெட் ஒன்றைப் புகைத்தாலும் இந்தோனேசியாவில் புகழ் பெற்ற கிரரெக் (KRETEK) சிகரெட்டாகவே அது இருக்கும். சுஹார்ட்டோவின் மற்றும் ஒரு புதல்வர் இந்த கிரரெக் கம்பனியை நடத்துகிறார். சாதாரணமாக கடைகளில் போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீரை வாங்கினால் அதுவும் அப்படியே.

ஆசியாவிலேயே சிறந்த ஒரு ஜனநாயக நாடாக இந்தோனேசியா உருவாகி வருவதாக சுஹார்ட்டோ அடிக்கடி கூறுவார். ஆனால் சுஹார்ட்டோ குடும்பத்தினரால் உலகிலேயே ஊழல் நிறைந்த நாடுகளில் ஒன்றாக இந்தோனேசியா மாறி வருகிறது.

### சீனரின் கையிலும் நாட்டு வளங்கள்

சுஹார்ட்டோவின் தலையீடில்லாவிடில் தானாகவே இரண்டு வீத வளர்ச்சி பெறக் கூடிய இந்தோனேசியாவின் பொருளாதாரம் தற்பொழுது அதலபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

தற்பொழுது ஏற்பட்டு வரும் அரச எதிர்ப்புக் கலவரங்கள் சீன எதிர்ப்புக்கள் கலவரங்களாக உருவெடுத்து வருவது சுஹார்ட்டோவுக்கு மற்றொரு நெருக்கடி ஆகும்.

இந்தோனோசியாவில்உள்ள சிறுபான்மையினரான சீன வம்சாவளியினர் நாட்டின் சில பொருளாதாரத் துறைகளில் குறிப்பிடத்தக்க ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

1965 ஆம் ஆண்டு இடம் பெற்ற சீன எதிர்ப்புக் கலவரங்களில் 5 லட்சம் சீனர்கள் இந்தோனேசியாவில் கொல்லப்பட்டனர். சீனர்கள் தமது சொத்துக்களைச் சுரண்டுவதாக இந்தோனேசியர்கள் கருதுகின்றனர்,

### சுஹார்ட்டோவை வீழ்த்த முடியாத அரசமைப்பு

இந்தோனேசியாவில் சுஹார்ட்டோவினால் உருவாக்கப்பட்ட அரசமைப்புப் படி, நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் 5 வருடங்கள் ஆகும். 5 வருடங்களுக்கு ஒரு தடவை ஜனாதிபதியைத் தெரிவு செய்யவேண்டும்.

சுஹார்ட்டோவினால் பஞ்ச சீல (PANCHASHEELA) கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசமைப்பு, தேர்தல் மூலம் எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்பை அறவே இல்லாமல் செய்து விட்டது.

இந்தோனேசிய நாடாளுமன்றத்தின் முழு உறுப்பினர்கள் எண்ணிக்கை 1000

(XIஆம் பக்கம் பார்க்க)

# வளைகுடா நெருக்கடியைத் தளர்த்த

# கோபி அனானின் உதவி பெற முயற்சி

பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கியுள்ள நேரத்தில் பதவி துறக்கவும் அவர் தயார்இல்லை.

பொருளாதார நெருக்கடியிலிருந்து ஓரளவு விமோசனம் பெற சமீபத்தில் சர்வதேச நாணயச்சபை இந்தோனேசியாவுக்கு 4000 கோடி டொலரை வழங்கி இருந்தது. இந்தோனேசியாவில் பொருளாதாரச் சீர்திருத்தங்களை செய்வதற்கு சுஹார்ட்டோ ஒப்புக்கொண்டபின்பே இந்த நிதியை நாணயச்சபை வழங்க இணங்கியது.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் சர்வதேச நாணயச் சபைக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற சுஹார்ட்டோவுக்கு அவகாசம் கொடுக்குமா என்பது கேள்விக் குறியே.

நாணயச்சபையின் இந்த நிதி உதவி இந்தோனேசியாவின் ஆண்டு வருமானத்தில் அரைப்பங்கு ஆகும். இந்தோனேசியப் பொருளாதாரத்தில் பெரும் ஏகபோகம் செலுத்திவரும்சுஹார்ட்டோ குடும்பத்தின் ஆண்டு வருமானமும் இதே அளவுதான் என்று மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

வளைகுடா நெருக்கடிக்குத் தீர்வு காணும் முயற்சிகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

ஐ. நா. பொதுச்செயலாளர் கோபி அனானின் மத்தியஸ்தத்தைப் பெறுவதற்கு ரஷ்யாவும், ஈராக்கும் முயற்சி எடுத்து வருகின்றன.

பிரச்சினையில் சம்பந்தப்பட்ட நாடுகள் அழைப்பு விடுத்தால் மத்தியஸ்தம் வகிக்க தயாராக இருப்பதாக கோபி அனான் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீது தாக்குதல் நடத்துவதற்கான இறுதி நேர முஸ்தீபுகளில் அமெரிக்காவும் அதன் சகாவான பிரிட்டனும் ஈடுபட்டுள்ள சமயம் நெருக்கடியைத் தளர்த்தும் இறுதி நேர முயற்சியாக இது கருதப்படுகிறது.

வளைகுடாப் பிரச்சினை தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தேடும் முயற்சியில் அமெரிக்கா துரிதமாகஈடுபட்டு வருகிறது. அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் கோஹன் வளைகுடா நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

சவூதி அரேபியாவின் எதிர்ப்பை அடுத்து ஈராக் மீதான தாக்குதலுக்கு சவூதி அரேபியாவைப் பயன்படுத்தும் நோக்கத்தை அமெரிக்கா கைவிட்டுள்ளது. தற்பொழுது குவைத்துடன் பாஹ்ரைனும் இந்த விவகாரத்தில் அமெரிக்காவுக்கு உதவ முன்வந்துள்ளது.

வளைகுடா நெருக்கடியில் ரஷ்யா தனது நிலைப்பாட்டில் உறுதியாக நின்றால் அமெரிக்காவின் எந்த ஒரு தாக்குதலையும் நிறுத்திவிட முடியும் என்று ஈராக் கருதுகிறது. வளைகுடாவில் அமெரிக்கா தனது நல உரிமைகளைப் பேண விரும்பினால் ஈராக்குடன் அது பேச்சு நடத்தலாம் என்று ஈராக் வெளிவிவகார அமைச்சர் [illegible] தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடி காரணமாக இஸ்ரேல் மட்டும் அல்ல ஈராக்கின் நட்பு நாடான பலஸ்தீனமும் பதற்றம் அடைந்துள்ளது.

இஸ்ரேல் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதல் நடத்தும் பட்சத்தில் ஏவுகணைகள் தவறுதலாக பலஸ்தீன ஆட்சிப் பிரதேசத்துக்குள்ளும் விழலாம் என்று யஸீர் அரபாத் அஞ்சுகிறார்.

இரசாயன ஆயுதங்கள் பிரயோகிக்கப்படும் பட்சத்தில் அதில் இருந்து தப்புவதற்கான ஆயத்தங்களை பலஸ்தீனமும் மேற்கொண்டு வருகிறது.

இஸ்ரேல் ஏற்கெனவே ஆயிரக்கணக்கான முகமூடிகளை மக்களுக்கு விநியோகித்துள்ளது. மேலும் இரண்டு லட்சம் முகமூடிகள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இவற்றை விநியோகிப்பதற்காக இஸ்ரேலில் 37 இராணுவ நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இஸ்ரேலில் தற்பொழுது மூன்று லட்சம் வெளிநாட்டுத் தொழிலாளர்களும் கணிசமான அளவு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் உள்ளனர். இவர்களைப் பாதுகாப்பது அவசியம் என்று இஸ்ரேல் பிரதமர் நத்தன்யாகு கருதுகிறார்.

1991 வளைகுடா யுத்தத்தின் போது ஈராக்கின் பெரும்பாலான நீண்ட தூர ஏவுகணைகள் அழிக்கப்பட்டு விட்டன. எனினும் ஐ. நா, ஆயுதப் பரிசோதனைக் குழுவினர் அனுமதிக்கப்படாத சதாம் ஹுசேய்னின் எட்டு மாளிகைகளில் ஏதாவது ஒன்றில் இத்தகைய ஏவுகணைகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம என்று சந்தேகிக்கப்படுகிறது.

1991 வளைகுடா யுத்தத்தின் போது இஸ்ரேல் மீது 39 ஸ்கட் ஏவுகணைகளை ஈராக் ஏவிஇருந்தது.

தற்போதைய நிலையில் கோபி அனானின் மத்தியஸ்தம் மூலமே நெருக்கடியை தளர்த்த முடியும் என்று நம்பப்படுகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேறி வரும் உலகில்

ஒருவன்—ஒருத்தி கோட்பாடுகள் ஒருபுறம். இது மிகப் பழைய வாதம் என்ற காலம் மலையேறிப்போய் இப்போது மீண்டும் அதை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம்.

மண் தின்பதைமனிதன்தின்றால் என்னஎன்றநவீன கேள்விகள்— முளைக்கு முன்பே இக் கலாசாரம் மனித குலத்தை முற்றாக வேரறுத்து விடுமோ என்ற ஏக்கங்கள் வேறு.

இன்று மேற்கு நாட்டுப் பழக்க வழக்கங்கள் ஆசிய நாடுகளில் பரவிவரும் அசுர வேகத்தில் அந்த நாட்டு வைத்திய வசதிகளோ—எச்சரிக்கை உணர்வோ—பாலியல் பற்றிய அறிவோ—இங்கு பரவுவது இல்லை. இதன் விளைவு—மனித சமுதாயம் அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்படுகின்றது; வறிய நாடுகள் பாலியல் நோய்களுக்குத் தாக்குப் பிடிக்காது திண்டாடும் நிலைமை.

தப்புச் செய்பவர்கள் தண்டனை அனுபவிக்கலாம் என்று விட்டுவிட்டால்—அப்பாவிகளும் அதிகம் பாதிக்கப்படுதலும், தலை குனிதலும் போன்ற—சமுதாயத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாத — நிலைமைகள் தோன்றுவது சங்கடம் ஆகிறது.

மனித வாழ்வில் ஆபத்துக்களை எதிர்நோக்கும் விகிதம் (Risk Ratio) எல்லாத் துறைகளிலும் அதிகரித்தே வருகிறது. வீதி விபத்துக்களுக்குப் பயந்து எவரும் வீதியில் இறங்காமலோ வாகனத்தில் ஏறாமலோ விடுவதில்லை; விமானப் பயணங்களை அச்சம் காரணமாக எவரும் தவிர்ப்பது இல்லை; சிகரெட் புகைக்காமல் விடுவதில்லை. இப்படிப் பல செயல்களை துணிந்து ஆற்றுபவன் மனிதன்.

அதேவேளை யாரும் வில்லங்கத்துக்குப் போய் விபத்தில் மாட்டிக் கொள்வதில்லை; ஒளிவு மறைவாகப் போய் வாகனத்தில் அடிபட்டுக் கொள்வதில்லை. ஆனால் பாலியல் விபத்துக்கள் இதற்கு நேர்மாறானவை.

பெரும்பாலும் அனைவரும் தமது பாலியல் உறவு விவகாரங்களை இரகசியமாகவே மேற்கொள்வது பாலியல் நோய்க்கிருமிகளின் பரம்பலுக்கு வாய்ப்பாகிவிடுகிறது. அதுவும் ஏழை நாடுகளிலும்—கலாசாரம் பற்றி அதிகம் பேசப்படும் சூழலிலும்—மிகவும் இரகசியமாகவே நோய் பரவி விடுகிறது.

உலகளாவிய ரீதியில் பார்த்தால் பாலியல் சர்ச்சைகள் பெரிய புள்ளிகளையே ஆட்டிப் படைக்கின்றன. துறவிகளின் ஆச்சிரமங்களிலே பாலியல் துஷ்பிரயோகம் என்ற சேதி இப்போதெல்லாம் அடிக்கடி காதுக்கு எட்டுகிறது.

இருவருக்கு இடையில் மட்டும் ஆயுள் முழுவதும் உறவு பிசகாமல் இருக்குமானால் பாலியல் மிகவும் சுவாரசியமான மென்மையான—புனிதமான—விடயம்தான். அங்கேயும்கூட பல எச்சரிக்கையான காப்பு நடவடிக்கைகள் அவசியம் தேவைப்படுகின்றன.

### துப்புரவு அவசியம்

எப்போதும் பாலுறுப்புகளைத் துப்புரவாக வைத்திருப்பது அவசியமாகிறது. சாதாரணமாகவே நோய்த் தொற்று இலகுவில் ஏற்படத்தக்க வகையில் இவை மென்மையாக —பாதுகாப்புக் கவசமான தடித்த தோலால் போர்க்கப்படாதவையாக இருப்பதே இதற்கு முக்கிய காரணம் ஆகிறது. அதுவும் ஆண்களைவிட பெண்களின் உறுப்புக்கள் கூடுதலாக நோயை வாங்கிவிடத்தக்க அமைப்புள்ளவை.

சாதாரணமாகச் சிந்திக்கும்போதே கவர்ச்சியாகத் தெரிந்தாலும் — மாயை மறைத்தாலும் — பாலியலில் அசிங்கங்களுக்குக் குறைவே இல்லை. இருட்டில் நடக்கும் விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்தால் கொஞ்சம் வயிற்றைக் குமட்டும் அளவுக்கு அசிங்கங்கள் கூடவாக விளங்கும். இதற்கிடையில் பலரோடும் உறவு—பலரகத்திலும் உறவு என்ற நிலை வந்து—இடையே வைரசுக்களும் பக்ரீறியாக்களும்கூட விளையாடத் தொடங்கினால் நிலைமை என்னாகும்?

இந்த உடல் — மலஞ் சோரும் (அழுக்குகள் வடிகின்ற) ஒன்பது வாயில் குடில் —என எப்போதோ விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அருமையான— அசிங்கமான—விளக்கம்.

இந்த எண்ணம் மனதில் இருக்க—இயன்றவரை எப்போதும் துப்புரவாக இருக்கப் பழகுவதும்—பாலியல் துணையை மாற்றாமல் பார்த்துக்கொள்வதும் மிகவும் அவசியமாகிறது. எனவே பழைய கொள்கைகளுக்குத் திரும்பித்தான் ஆகவேண்டும்.

**-அம்பிகா-**

பருத்தி ஆடை மறைந்து போய் நவீன ஆடைகள் புகுந்தாலும் காலநிலை மாறாமல்தானே இருக்கிறது! புழுக்கமும் வியர்வையும் இறுக உடுத்த உடலையே அவித்துவிடத் துடிக்கிறது. தோலை மென்மையாக்கி தொற்றுக்களை ஏற்படுத்த முனைகிறது. இந்த நிலைமையில் பல பட்டு ஆடைகளால் இறுகப் போர்த்தியிருக்கும் பாலுறுப்புக்கள் வெந்து விடுகின்றன. பகல் முழுவதும் அயராத உழைப்பில் இந்த ஆரோக்கியத்தைக் கவனிக்க நேரம் இருக்காது. அடிக்கடி சுத்தம் செய்வதும் சாத்தியம் ஆகாது.

இதனால் ஏற்படும் வஞ்சகம் இல்லாத கடி, காயங்கள், நீர் வடிதல் போன்றவைகூட காலப்போக்கில் தீவிரமான பாலியல் நோய்களைத் தந்துவிடுகின்றன. தொற்று ஏற்படும் வாய்ப்புக்களை அதிகரித்து விடுகின்றன.

சிலருக்கு அடுத்தவரைத் தொட்டாலே அலர்ஜி (ஒவ்வாமை); முட்டினாலே தேகம் தடித்துவிடுகிறது. தேவை இல்லாமல் அடுத்தவர் உடலோடு உரசுவது அசிங்கம் ஆகிறது; வியர்வை குமட்டுகிறது. இந்த நிலைமையில் பாலுறவு என்ற போர்வை மட்டும் ஏனோ பல அசிங்கங்களை மறைத்து விடுகிறது. உறவாடுபவர்களின் உடல் வாயில்கள்—உயிர்ச் சுவர்கள்—உடற் திரவங்கள் சங்கமிக்கின்றன. இவற்றை ஆய்வுகூடப் பரிசோதனைக் குட்படுத்தினால் நிலைமை தெளிவாகத் தெரியும்.

எனவே கண்ட கண்ட இடங்களிலெல்லாம் கை போடுவதை விட்டு விட்டு மனமும்—தேகமும் முதிர்ந்த நிலையில், ஒருவன்— ஒருத்தி என்ற பழைய கொள்கைக்குத் திரும்புவோம்; பாலியலைப் புனிதமாக்குவோம்.

### நோய்த்தடுப்பு

நோய்த் தடுப்பு[illegible] புதிய உத்திகள் கூட [illegible] தடுக்க எவ்வளவு தூரம் உதவும் என்ற கேள்வி பலத்த சந்தேகங்களையே கிளப்பி இருக்கிறது.

பாலியல் நடவடிக்கைகள் பற்றிய சரியான தகவல்களை முழுவதும் வெளிப்படுத்த மனிதன் தயாரில்லை. எனவே இந்த விடயத்தில் கருத்துக் கணிப்புக்களை பெருமெடுப்பில் நடத்தவும் முடியாது. நோய்ப் பரம்பல் காலம் பிந்தியே தென்படுதலாலும் அதற்கிடையில் பலரக உறவுகள் சந்திப்பதாலும் நோயின் தன்மையை — நடவடிக்கைகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்தலும் கடினமாகி விடுகின்றது.



உறவுக்கு உடனடிப் பலனாக சுகம் கிடைக்கிறதே தவிர, காலம் கடந்துதான் நோய் வெளிப்படுகிறது. எய்ட்ஸ் ஒன்றுதான் வந்து வாழ்க்கையைச் சீரழிக்க வேண்டும் என்றில்லை. வெறும் வாய்ப்புண் ஒன்றே போதும் அதிலிருந்து ஏற்படும் தொற்று பாரிய பாலியல் பிரச்சினையாக விரிவடையக் கூடும்.

எனவே உந்தும் மனதினதும் உடலினதும் வேகத்தைச் சற்று கட்டுப்படுத்தி நின்று நிதானித்துச் செயற்படத்தான் வேண்டும். காப்புறைகளைப் பயன்படுத்தி எயிட்ஸிலிருந்து தப்பிவிடலாம் என்ற கருத்தும் இப்போது அடிபட்டுப் போய் விட்டது.

# பாலியல் பின்னடைவுகள்.

காரணம் உமிழ் நீரிலும், பெண் உட்கொள்ளை முனையும் ஆண் தாதுக்களிலும் கூட எய்ட்ஸ் தொற்று ஏற்படலாம். எனவே வாய்வழி உறவுக்கும் காப்புறைகள் விதந்துரைக்கப்படுகின்றன.

விதைப்பைத் தோலின் காணப்படும் நுண்ணிய காயங்கள் பெண்உறுப்புடன் மோதுவதை காப்புறைகள் தடுப்பதும் இல்லை. இதுவும் காப்புறைகளை நம்பி எய்ட்ஸைத் தடுக்க வருபவருக்கு உலை வைத்து விடுகிறது.

நிலைமை இவ்வாறு இருக்கையில் காப்புறைகளில் திருப்தியே இல்லை எனக் கருதும் பலரும் இவற்றைப் பயன்படுத்துவதே இல்லை என்றால் நோய் பரவும் விகிதம் தான் என்னாவது?

அகோரமான உணர்ச்சியுடன் கண்டபடி உறவில் கலப்பவர்கள் உறவின் போது ஏற்படும் வலி — வேதனை— பற்றி எல்லாம் கவலைப்படுவதில்லை. அவ்வேளைகளில் ஏற்படும் காயங்கள் தொற்று ஏற்பட மட்டும் வழி கோலுவதில்லை. நீண்ட காலப் பாலியல் பிரச்சினைகளையும் தோற்றுவித்து விடும்.

வேண்டாத கர்ப்பத்தை [illegible] தடு காப்புறைகளை பயன்படுத்தாதபோது சிக்கலில் மாட்டிக் கொள்கிறார்கள்.

சாதாரணமாக வாய்ப்புண் உள்ள வேளைகளில் வாயில் முத்தம் இடுதலையும், உறவுக்கு வாயைப் பயன்படுத்தலையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் வாயில் உள்ள கிருமிகள் பாலுறுப்புக்களுக்கு பரவுதலையும், பாலுறுப்பில் உள்ள சீரியஸான வைரசுக்கள் வாய்ப்புண் ஊடே உடலுக்குப் பரவுதலையும் தடுக்க இயலும்.

பாலுறுப்புக்களில் எரிவு அல்லது அரிப்புத் தன்மை தென்பட்டால் அது தொற்று ஏற்பட்டமைக்குரிய அறிகுறி ஆகும். இது சாதாரண வைரசுக்களால் ஏற்படக் கூடும். இவ்வேளைகளில் உறவு கொள்வது அடுத்தவருக்கும் தொற்று ஏற்படவே வழி கோலும்.

தோல் மென்மையாகி சிவந்தும், பருக்கள் போட்டும் அல்லது வெடித்து புண்ணாகியும் இருக்கும் வேளைகளில் உறவு கொள்வதும் நிலைமைகளைச் சிக்கலாக்கக் கூடும். ஆணுக்கு இப்படியான அறிகுறிகள் விதையில் அல்லது சூழ உள்ள பிரதேசங்களில் தென்படும் போது பெண் இலகுவில் இந்த நோய்க்கான வைரசுகளைப் பெற்று விடுகிறாள்.

இயற்கையிலேயே பெண் உறுப்பு மென்மையாகவும் ஈரலிப்பாகவும் இருப்பது நோய்களை இலகுவில் வாங்கிக் கொள்ளவே வழி கோலுகிறது. ஆண்களைவிட பெண்கள் இவ்வகை தொற்றுக்களை ஏற்கும் வாய்ப்பு 10 மடங்கு அதிகம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். இது எல்லாப் பாலியல் நோய்களுக்கும் பொருந்தும்.

எனவே பெண்கள்தான் இயன்ற அளவு எச்சரிக்கை உணர்வோடும் —வேண்டாத உறவுகளைத் தவிர்க்கும் வகையிலும் வாழப் பழக வேண்டும்.

சில வேளைகளில் தொற்று ஏற்பட்டமைக்கான அறிகுறிகள் வெளிப்படாமல் ஊமைத்தனமாக இருக்கலாம். அவ்வேளையிலும் தனது உறவுத் துணைக்கு, நோயாளி நோயைக் கொடுத்துவிட முடிகிறது.

இரவிலும் இருளிலும் உறவாடுபவர்களும், பாலுறுப்புக்களைப் பார்த்து ஆராயாமல் உறவாடுபவர்களும் விரைவில் நோயைப் பெறும் வாய்ப்புகளை அதிகம் கொண்டிருக்கின்றார்கள். நோய் நிலைமையைத் தெரிந்திருந்தும் உணர்ச்சி வேகம் அசட்டை செய்ய வைத்து விடுகின்றதும் அடுத்தவருக்கு தெரிந்தோ தெரியாமலோ தனது நோய் நிலைமையைத் தெரிவிக்காமல் உறவில் சுகம் கண்டு நோயைக் கொடுத்து விட்டுப் போகும் துரோகிகள் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பலருக்கு இந்த அழற்சி போன்ற நோய்க்குறிகள் தென்படுவதில்லை. அவற்றை அவதானிக்கவும் ஆராயவும் அவசர வாழ்வில் நேரமும் கிட்டுவதில்லை. தனதும் அடுத்தவரதும் பாலுறுப்புகளை தொடுபவர்கள் கூட நோய்த் தொற்றைப் பெற்று விடுகிறார்கள். இவ்வகைத் தொற்றுக்களுக்கு HSV - 1, HSV – 2 வைரசுக்களே காரணமாகின்றன.

வாய்ப்புண் 90 வீதமானவர்களில் ஆபத்தைத் தருவது இல்லை. ஆனால் வாய்ப்புண் ஏற்படும் வேளைகளில் பாலுறுப்புக்களுடன் தொடர்பு ஏற்பட்டால் இந்த HSV - 1 அல்லது HSV - 2 வைரசுக்கள் வாயில் தொற்றி விடுகின்றன. பின்பு வாயிலிருந்து பாலுறுப்புகளுக்குத் தொற்றிவிடும்.

இப்போது பெரிதாகப் பேசப்படும் எய்ட்ஸ் பரவவும் வைரசுக்களே காரணம் ஆகின்றன. இந்த HIV வைரசுக்களின் வலு பற்றி ஏற்கெனவே எய்ட்ஸ் பற்றிய சட்டுரையில் விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தோம்.

எந்தப் பாதுகாப்பு முறைகளையும் மீறி வைரசுக்கள் பாலுறவின் போது அடுத்தவருக்குத் தாவி விடுகின்றன. உடற்திரவங்களில் இவை அதிகம் காணப்படுதலும், பாலுறவின் போது பல வகை உடற்திரவப் பரிமாற்றங்கள் நடைபெறுதலுமே இவை வேகமாகத் தடையின்றிப் பரவக் காரணமாகின்றன.

சிலவேளைகளில் பாலுறுப்புக்களில் தென்படக்கூடிய அல்லது தென்படாத warts வகைக் கட்டிகள் தோன்றக் கூடும். இவை நோவுஅற்றனவாக இருக்கலாம். ஆனால் புற்றுநோய் போன்றதீவிர நோய்களுக்கு அடிகோலக்கூடிய இவ் warts பாலுறவின் போது அடுத்தவரின் உறுப்புக்களில் தொற்றிக்கொள்கிறது. இவற்றை உடலில் விட்டுவைக்கவும் முடியாமல் வைத்தியர்களிடமும் போய் சொல்லிக்கொள்ளவும் முடியாமல் பலரும் திண்டாடுகிறார்கள்.

பக்ரீரியாக்களால் பரவும் மேகநோய் (VD) மிக நீண்ட கால வரலாற்றைக் கொண்டது. மனிதகுலம் உள்ளவரை தவறுகள்—கள்ளத் தொடர்புகள் — கட்டுப்பாடில்லா உறவுகள் தொடரும்; அவற்றின் ஊடே தானும் வாழ்ந்தே தீருவேன் எனக் கங்கணம் கட்டி நிற்கிறது இது.

Treponema Pallidum என்ற பக்ரீரியாவே மேக நோய் ஏற்படக் காரணம் ஆகிறது. இது ஈரலிப்பான உடல் இழையங்களினூடே ஆளிலிருந்து ஆளுக்குப் பரம்பி விடுகிறது. அதுவும் பெண்களின் பாலியல் இழையங்களில் மிகவும் சுலபமாகத் தொற்றிவிடுகிறது. மனித உடலுக்கு வெளியே இக் கிருமிகள் உயிர்வாழ மாட்டா.

இந்த நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதும் சுகாதாரத் துறையினர் முதலில் ஆராய்வது அவர்கள் உறவு வைத்திருந்த இடங்களைப் பற்றித்தான்! அத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லோரும் சரியான தகவல்களை வழங்குவதும் இல்லை. தகவல்களின்படி அந்தந்த இடங்களையும் ஆள்களையும் தேடிப்போனால் அங்கே நோய்க்கான குணங்குறிகளைக் காணலாம். இப்படியான ஆராய்ச்சிகள் பல மனிதர்களைச் சங்கிலித்தொடராக இணைக்கும்போது சம்பந்தப்பட்டவர்கள் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைகிறார்கள். பல நம்பிக்கைத் துரோகங்கள் வெளிப்படுகின்றன.

காதலுக்கு எதிரி என எய்ட்ஸ் வைரசுக்களை அல்லது VD பக்ரீரியாக்களை யாரும் திட்டிவிடுதல் நியாயம் ஆகாது. இவை பெரும்பாலும் தவறான பாலுறவின் மூலமே பரவச் செய்கின்றன. பெரும்பாலும் களவைக் காட்டிக் கொடுக்கும் காட்டிகள் அவை.

ஆயுள் முழுவதும் ஒருவரோடு மட்டுமே உறவு வைத்துக் கொள்ளுபவர்களுக்கு இப்பாலியல் நோய்கள் பற்றிய அச்சஉணர்வு எழத் தேவையில்லை. எனினும் அவர்கள் சுகாதாரத்தை பேணும் வகையில், உடலைச்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞனை நோக்கி காலத்தின் அழைப்பு

தீந்தமிழ் சுவைமறைந்து மெல்லெனச் சாகும் வேளை
தீங்கவி படைத்த நீயும் எழுந்திடு கவிஞ!—நாளை
கற்பனை காதல் விரம் பழங்கதை பாடிப் பாரில்
அற்பனாய்ப் போகுமுன்னம் எழுந்திடு புதுமை செய்ய.

முந்தையர் பாடிவைத்த முடிவிலாச் செல்வம் அந்த
செந்தமிழ்க் காரிகைக்கு உயிரென ஆகுமுந்தன்
சந்ததி ஏச(ம்) முன்னர் காலத்தின் கோலம் பாடு
சஞ்சலம் ஏன் உனக்கு தமிழ் அதன் உயிர் வளர்க்க.

பண்டைய புலவரைப்போல் பரிசிற்காய் பாடவேண்டாம்
தண் தமிழ் நிலையை தமிழன் தலைக்குனிவதனை—இந்த
பண்டைய மண்ணின் கோலம் பாழ்பட்ட செய்தி தன்னை
கண்ணிலாக் குருடர் காணக் கவியினில் பாடும் ஐயா.

கண்ணகி சீதை கற்பின் பெருமைகள் போதும்—தமிழ்க்
கன்னியர் கற்பிழந்த கதையினைப் பாடி வையும்
கயல் விழி அழகு போதும் மழலையை இழந்த தாயின்
நீர்விழி கூறும்சோகம் நீண்டிடு முன்னம் பாடும்.

அன்பதன் பிணைப்பை பாசப் பெருக்கினை மாந்தர்கூடி
இன்புறும் நிலையைப் பேசிப் பயனில்லை கண்டீர்—இன்று
பிரிவினால் வாடும் எங்கள் பிள்ளைகள் உள்ளம் பாடும்
உறவுகள் கூடும்காலம் உதித்திடப் பாடல் பாடும்.

தன்மானம் செத்துவிட்ட தமிழினச்சிறப்பைத்—தீயால்
செவ்வானம் போற்சிவந்த தமிழ்மண்ணின்வனப்பைச் சூழும்
போர்மேக வடிவழகை உயிர்போன உடற்கடலை
பார்த்திடு பாடு உள்ளக்குமுறலைக் கொட்டு சொல்லில்

நாமறிந்த நாடிறந்தகதை நாமழிந்தகதை—அன்று
ஊரழிந்து உறவிழந்த கதை நமதழிந்தகதை—இன்று
போர் நடந்து பொலிவிழந்தகதை பரிதவித்தகதை—நாளை
பார் மறந்து போகுமுன்னம் பாடிவைத் திடுகஅதை.

இறந்திட்ட தமிழ்மண்ணின் இறப்பில்லாப் பெருங்கதையை
இழந்திட்ட உறவுகளின் கல்லறையில் எழுதிவையும்
வடிந்திட்ட குருதிமையால் எலும்பெழுத்தாணி கொண்டு
வடித்திடும் வரலாறாகும் வாசிக்கும் உலகம் நாளை.

—நவநீதன்—

# ‘எயிட்ஸ்’!

எயிட்ஸ் எனும் சொல்லின் பொருளை
எழுதினால் தமிழில்—‘உதவி’
வைத்தியத் துறையிந் நோயில்
வருந்தினால் செய்க—‘உதவி’

உடலினால் உதவி செய்யின்
உடன்வரும் இந்நோய் என்று
மடமையில் வாழ்க்கை ஒட்டும்
மாந்தரே, எழுக இன்று!

நோயினால் கண்ட பலரை
நொடியிலே ஒதுக்கி வைத்தல்
ஆய்கையில் நோயைக் கூட்டும்—
ஆதலால் வெறுக்க வேண்டாம்!

அவசர தேவை வந்து—காவி
அவர்தரும் இரத்தம் மூலம்
பவத்திலே இந்நோய் பரவி
பலரினை முடித்த துண்மை!

மனைவியை விட்டு வேறோர்
மாதினை நாடிச் சென்றால்
குணநலன் கெடுவ தோடு—நோய்
குருதியில் சேரக் கூடும்!

வயதுகள் கூடிப்போனால்—மனைவி
‘வழியை நீமாற்று’ என்றால்—கணவன்
தவறுகள் செய்யச் செல்வான்—அதை
தவித்தலே உனது கடமை!

உடலியல் அறிவில்லாது—தப்பு
உணர்வினால் வழிகள் மாறும்
இளம்பயிர் காக்க என்றும்
எடுத்துச் சொல் உடலின் கூறும்.

ஆணொடு ஆண்கள் சேரல்
அவளொடு பெண்கள் புணரல்—அன்று
தேனென இருத்தல் கூடும்—ஆனால்
தேவையோ? உணரும்...பாரும்!

தொற்றினால் பலநாட் சென்று—தன்
தோற்றதை வெளியில் காட்டும்
வற்றலை போல அன்று! சும்மா
மாறியும் திட்டம் தீட்டும்!

ருசிக்குநீர் பலதைத் தொட்டால்
துன்பமாய் ஆகக்கூடும்—உடற்
பசிக்கென ஒன்றை மட்டும்—தினம்
பாவிப்பின் ‘வைரஸ்’ திட்டும்!

ஒழுக்கமாய் வாழ வேண்டும்—அந்த
ஒருத்தியைச் ‘சுற்ற’ வேண்டும்—இதனால்
பழுக்கின்ற வயதில் கூட—நிதமும்
பரவசம் காண ஏலும்!

— கி. வாயுபுத்திரன் —

# செல்லாக் காசு!

நேற்றுவரையில்லாத
நெஞ்சுறுதி!
வாட்டமதைக் காணாத
வாய்வீரம்!
பொருளினைத் தேடிப்
பொழுதினைப் போக்கும்
பொய்யுள்ளம்!
தனிமையிலே தன்னிலையைத்
தானுணர்ந்து மறுகும்
தாழ்வுணர்ச்சி!
இவையெல்லாம்...
இருள்கண்டு மயங்கி
இல்லாததைத் தூற்றும்
இழிநெஞ்சங் கொண்டோரின்
இலக்கணங்கள்!
இவர்கள்...,
நில்லாத முதுகெலும்பை
நிமிர்த்தினாலும்,
பொல்லாத நாவைத்தான்
புரட்டினாலும்,
செல்லாத பெயர்தன்னைச்
செதுக்கினாலும்...
எங்கள் பேனாக்கள்
எழுதுவதை என்றும்
எதிர்க்க முடியாது!

— உடுவில் அரவிந்தன் —

# வந்ததும் வராததும்!

கோழி வந்தது
முட்டை வந்தது
ஹொண்டாவோடு
யமகா வந்தது
பயணிகள் செல்ல
பஸ் பல வந்தன
நிரந்தரமான
நிம்மதி வரவில்லை.

வகை வகையாய்
சோடா வந்தது
வாசமுள்ள பவுடரும்
பூச வந்தது
விஸகியோடு பிரண்டி வந்தது
குடித்தவருக்கு வெறியும்
வந்தது
சத்தியமான
சமாதானம் வரவில்லை.

சீனி, மா வந்தது
சினிமா வந்தது
திரையரங்கில்
படமும் வந்தது
பார்த்தவர்க்கு
பரவசம் வந்தது
நித்தியமான
நிம்மதி வரவில்லை.

ரெலிபோன் வந்தது
ரெலெக்சும் வந்தது
ஹலோ எனக் கதைக்க
கிலோவில் காசும் வந்தது
மின்குமிழ்கள் ஒளிர
மின்சாரம் வந்தது
சமாதானம் வரவில்லை
சந்தோஷமும் வரவில்லை.

—துரை. சீலன்—

# நீ பாடு!

அண்ட வெளிகளில்
கண்ட கோள்களால்
அதிசயமோ?
அங்கும்—
ஆயுதங்களை
அரங்கேற்ற நினைக்கும்
ஆறறிவு ஜீவியே!

அசிங்கங்களின்
அத்தியாயத்தை
அப்புறப்படுத்து!

இருக்கும் பூமியின்
இத(ய)த்தைத் பார்!

சிட்டுக் குருவியும்
சிலிர்க்கும் காற்றும்
முட்டும் பனியும்
முழுமை நிலாவும்
மொட்டும், மலரும்
மட்டற்ற மகிழ்வே!

பொக்கிஷம் இங்கு
பொலிந்து இருக்குது

புல்லாங்குழல் கொண்டு
பூமியைப்பாடு!
இதயத்தின் நாதத்தால்
இயற்கையைப் பாடு

வாழ்க்கையில்
வசந்தத்தை
வரவேற்றுப்பாடு.

— [illegible] —

# அந்த நாள் ஞாபகம்

புளியங்காய் பறித்துப் பூரித்துப் புளுகமுடன்
பள்ளிக்கூடத்தில் வாய் புளிக்கப் பொச்சடித்து...
களிப்பாய்க் கதைபேசிக் கதிரையினை இழுத்துவிட்டு
கிருபாவை விழவைத்துத் தூக்கிவிட்டுச் சிரித்தபடி...
துளியாய்ச் செறிந்து விழும் தூறலிலே நனைந்துபின்னர்
தலை முழுக்க ஈரமுடன் காய்ச்சலெனப் படுத்திருந்த
ஒளிர்நாள்கள் இனிவருமா? ஒத்தடங்கள் தந்திடுமா...?
ஒன்றுமில்லை என்று எங்கோ குரலொன்று ஒலிக்கிறது...

கண்ணாடி ரீச்சர் வாய்பாடு கேட்டவுடன்
கையெண்ணிச் சொன்ன அந்தக் கணப்பொழுதும்...
எண்ணத்தில் தோன்றியதை எழுத்தில் பொறித்துவிட்டு
‘றிப்போட்’ வரும் நாளைக் காத்திருந்த பொழுதுகளும்
வண்ணப் பூச்சிகளாய் விளையாடி மகிழ்ந்திருந்த
வசந்த காலமெல்லாம் இலை உதிர்ந்து போனாலும்...
பண்ணாய் பாடி வைக்க நினைக்கின்றேன்! பழக்கமில்லை
பாதி வரியினிலே வடிவம் பிறழ்கிறது!

விளையாட்டுத் திடலினிலே வீரத்தை உயிர்ப்பித்து
களைக்காமல் ஓடவெனச் ‘சந்துரு’வைப் ‘பூரணி’யை
‘சாந்தி’யைத் துணிவேற்றிச் சாத்திவிட்ட வெற்றிகளை
களையாற்றக் குளுக்கோசும், குளிர்நீரும் பரிமாறி
‘கண்ணனு’க்கு கமோன் சொல்லிக் கூச்சலிட்ட நினைவுகளை
வளைக்குள் ஒடுங்கிவிட்ட இந்நாளில் நினைக்கின்றேன்
எந்நாளும் இந்நினைவை மறக்கத்தான் முடியவில்லை!

மாங்காய்க்குக் கல்லெறிந்து அகப்பட்ட மாதவனை...
மாதுளையின் சிரிப்பொளிரும் மாதினியை...
ஆங்கோர் மாலையிலே மனம் ரசித்த கிரிக்கெட்டை...
அதை ஆடி நின்ற ஆதவனை... கண்ணில்
தூங்கும் விழிநீரைத் துடைத்தெறிந்த புஷ்பாவை...
துயர நிமிடத்தை இனிதாக்கும் இளங்கோவை...
தேங்கி இருக்கின்ற தேவநினைவுகளைச்
சேர்த்து வைத்துள்ளேன்! சிதற விடமாட்டேன்!

கவியுரைத்த மேடைகளை... எழுத்தை வளமாக்கக்
களமமைத்துத் தந்த தமிழ்த்தினத்துப் போட்டிகளை...
தவிதவித்துக் காத்திருந்த பரீட்சை முடிவுகளை...
திணறடித்த கணக்குகளை...
பவித்திரமாய்ப் போற்றி வந்த கல்லூரித்தாய் நினைவை...
பழம் பெருமைப் பொக்கிஷத்தை...
குவித்து வைத்துள்ளேன் உள்ளே மூலையிலே
எந்நாளும் அந்நினைவு குழம்பத்தான் விடமாட்டேன்!

கச்சான் ஆச்சியிடம் வாங்கிய சுருள்களையும்,
காலிப் பேப்பரிலே கப்பல் செய்ததையும்,
பச்சைச் சட்டையினை வடிவென்று ‘பஜி’ சொல்ல
பத்துத் தடவை அதைப் பலர் பார்க்கப் போட்டதையும்,
அச்சந் தவிர்த்தந்த ஊர்வலத்திற் சென்று பின்னர்
அம்மாவின் சின்ன அடி வாங்கிப்பின் அழுததையும்
துச்சமென நினைக்க முடியவில்லை இன்றெனக்கு
மிச்சமிருப்பது நினைவுகளே வேறில்லை!

—தாட்சாயணி—

# அழுகை விடு! சிரிப்பை உடு!

சிரிதம்பி! கொஞ்சம் சிரித்திடடி என்தங்காய்!
இறந்த காலத்தை
எண்ணி நிலைகுலைந்து
நிகழ்காலம் தன்னை நிர்மூலம் ஆக்கிவிட்டு
திகைத்து ஒடுங்குகின்ற செய்கைகளைத் தீயிலிடு!
பழைய இடி விழுந்த பாழ்நினைவைத் தலைமுழுகு!
அழுத விழிநீரெம்
அகம் முகத்தை மூழ்கடிக்க
சுழிபிடித்திழிதல் தவறு! எதிர் நீச்சலிடு!
சுதிப் பதிகந்திட்டு,
சூரியனைத் தொட்டுப்பார்,
கொதிக்கும் அவன்கூட்டில் குளிர்காய்ந்து
புத்துயிர் கொள்.
நேற்றுத் துயர்சுமந்து நேர்மை தலைகுனிந்து
கூற்றின் குடிலாயெம் கொட்டில் எரிந்ததுதான்,
ஏற்று விடு.
இன்று புதிதாய் இறகுஅணி.
எங்கும் பறப்பதற்கு ஏற்ற துணிவுபெறு.
நாங்கள் அழுதபடி நாரி முறிகையிலே
ஓங்கி உயர்கின்ற
உலகத்தை உற்றுப்பார்.
இழப்பை உயிர்ச்சுடரால் எரித்துப் புதுச்சரிதச்
செழிப்பெழுது.
இந்தச் சிதை நெருப்புள் மொட்டுவிரி.
நாளையென்ற ஒன்றுளதே...
நம்பி அதை வெற்றி கொள்ள
காலெடுத்து வா இன்று; கண்ணீரை நெய்யாக்கி
வாழ்வுக் கொளி காட்டு.
வாடுகிற நாற்றுகளில்...
பசுமை யெழவேண்டும்; பால்வேண்டாம் நீரூற்று.
சிரிதம்பி!
கொஞ்சம் சிரித்திடடி என்தங்காய்
வருங்கால மேனும் எங்கள் வசமாகும்
வரலாறு வேணும்!
அழுகை விடு... இனி சிரி நீ!

— த.ஜெயசீலன் —

## கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவியும் ஏமாந்த கழுதையும்!

ஓர் ஊரில் குருவியும் கழுதையும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. இரண்டும் சேர்ந்து பயிர்செய்யலாம் என்று குருவி சொன்னது. கழுதையும் அதற்கு ஒப்புக் கொண்டது.

யாருக்கு என்ன பங்கு என்பதைக் குருவியே சொன்னது.

முதல் பயிரில் குருவிக்கு மேல் பகுதியும் கழுதைக்குக் கீழ்ப்பகுதியும் என்று முடிவானது. முதல் பயிரில் குருவி லாபம் அடைந்தது; கழுதை ஏமாந்து போனது.

இரண்டாம் பயிரில் கழுதைக்கு மேற் பகுதியும், குருவிக்குக் கீழ்ப் பகுதியும் என்று முடிவானது. இரண்டாம் பயிரிலும் குருவி லாபம் அடைந்தது; கழுதை ஏமாந்தது.

மூன்றாம் பயிரில் குருவிக்கு நடுப்பகுதி தருவது; கழுதைக்கு மேல், கீழ் பகுதிகள் இரண்டும் தருவது என்று முடிவானது.

மூன்றாம் பயிரிலும் குருவி லாபம் அடைந்தது. கழுதை ஏமாந்தது.

அப்படி என்னதான் பயிரிட்டன? பதில் சொல்லுங்கள் பார்ப்போம்.

(விடை XI ஆம் பக்கத்தில்)

கிருஸ்ணசாமி கஸ்தனி
(ஆண்டு 5,
மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசலை.)

# கணக்கில் நீங்கள் புலியா?

1. நான்கு இலக்கமுள்ள ஓர் எண். முதல் இலக்கம் கடைசி இலக்கத்தின் பாதி. இரண்டாவது இலக்கம் மூன்றாவது இலக்கத்திலும் மூன்று குறைவு. மூன்றாவது இலக்கமோ முதல், கடைசி இலக்கங்களின் கூட்டுத் தொகையை இரண்டால் வகுத்தால் வருவது. அப்படியானால் அந்த நான்கு இலக்கமுள்ள எண் யாது?

2. ஒருகுடியானவனிடம்சில ஆடுகளும் கோழிகளும் இருந்தன. அவற்றின் தலை, கால்களின் மொத்த எண்ணிக்கை 99. ஆடுகளைப் போல இரண்டு மடங்கு கோழிகள் இருந்தன. குடியானவனிடம் இருந்த ஆடுகள் எத்தனை? கோழிகள் எத்தனை?

3. எட்டு மரங்கள் நேர் கோட்டு வரிசையில் உள்ளன. ஒவ்வொரு மரத்துக்கும் உள்ள இடைவெளி 3 மீற்றர். அப்படியானால் முதலாவது மரத்துக்கும் எட்டாவது மரத்துக்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு?

4. ஐந்து தட்டுகளில் மொத்தம் நூறு ரூபா உள்ளது. ஒவ்வொன்றிலும் சமமான அளவு பணம் இல்லை. முதல் இரண்டு தட்டுகளிலும் மொத்தம் 52 ரூபா உள்ளது. இரண்டாம், மூன்றாம் தட்டுகளில் சேர்த்து 43 ரூபாவும் மூன்றாம் நான்காம் தட்டுகளில் சேர்த்து 34 ரூபாவும் நான்காம் ஐந்தாம் தட்டுகளில் சேர்த்து முப்பது ரூபாவும் உள்ளன. ஒவ்வொரு தட்டிலும் இருந்த பணம் எவ்வளவு?

(விடை XI ஆம் பக்கத்தில்)

# அச்சமூட்டும் கரடி

கொடுமை நிறைந்த விலங்கினங்களில் கரடியும் ஒன்று. இது காடுகளிலும் மலைப்புறங்களிலும் வாழும். புலி போல் வேகமாகப் பாயவோ சிங்கத்தைப் போல் வீரமாகச் சண்டை செய்யவோ கரடியினால் முடியாது. எனினும், கரடி அச்சந்தரும் விலங்குதான். இது சிறிய விலங்குகளையும், மக்களையும் கொன்று தின்னும்.



பனிப்பிரதேசங்களில் வெள்ளைக்கரடி

கரடி ஏறக்குறையப் பன்றியைப் போன்றிருக்கும். கரடியின் உடல் முழுதுப் மயிர் அடர்ந்திருக்கும்; இதன் நகங்களும், பற்களும் கூர்மையானவை; முகம் சிறிது நீண்டிருக்கும்.

**பிராணிகள் உலகம்**

கரடியின் தோல் தடித்துக் உறுதியாகவும் இருக்கும். ஏறக்குறைய ஐந்தடி உயரமும், ஆறடி நீளமும் இருக்கும். கரடிகள் பெரும்பாலும் கறுப்பு நிறமே. குளிர் நாடுகளில் வெள்ளைக் கரடிகளும் உண்டு.

சிங்கத்தைப்போல் கரடிகள் குகைகளில் தங்குவதில்லை; பார்வைக்குக் கரடி அச்சந்தரக்கூடிய உருவ அமைப்பை உடையது. இது குட்டி போட்டுப் பால் கொடுக்கும்.



கறுப்பு மயிர்கள் அடர்ந்த கரடி

சில கூத்தாடிகள் கரடிகளைப் பிடித்து ஆட்டம் காட்டுவதும் உண்டு. பழகிய கரடி நாட்டியம் ஆடும்; பல கூத்துக்களும் செய்யும். கரடிகள் அடர்ந்த புதர்களில் மறைந்திருக்கும் போது, அவற்றை எளிதில் கண்டுபிடிப்பது இயலாது.

கரடிக்கு மரம் ஏறத்தெரியாது. மிகு விரைவாக ஓடவும் இதனால் முடியாது. கரடியால் பொதுவாக மக்களுக்குப் பயனில்லை; மக்களைக் கண்டால் கொன்று தின்றுவிடும் இயல்புடையது.


பரட்டைத் தலையுடன் பார்வைக்கு அருவருப்பாகவும், அச்சமூட்டும்படியாகவும் விளங்குபவர்களைக் 'கரடி போன்றிருக்கிறாயே? ஏன்? என்று கேட்பதுண்டு.





# உங்களுக்குத் தெரியுமா?

I. கீழ்வரும் மூன்று படங்களில் ஒவ்வொன்றிலும் மொத்தம் எத்தனை முக்கோணங்கள் உள்ளன என்று உங்களால் கண்டு பிடிக்க முடிகின்றதா?


1.



2.



3.



(விடைXIஆம் பக்கம் பார்க்க)

# நமது உடலில்....

★ மனித உடலில் தொழில் அற்றுப்போன 90 உறுப்புக்கள் காணப்படுகின்றன.

★ நமது உடலின் பகுதிகளில் குருதி பாயாத பகுதி கண்ணின் கருமணியே ஆகும்.

★ நமது உடலில் உள்ள எலும்புகளிலே மிகச் சிறியது நடுக்காதிலுள்ள ஏந்தியுரு எலும்பு ஆகும். இதன் நீளம் மூன்று மில்லி மீற்றரே ஆகும்.

★ நாம் பிறக்கும் போது 270 எலும்புகளுடன் பிறக்கின்றோம். ஆனால் இறக்கும் போது நமது உடலில் 206 எலும்புகள் மட்டுமே இருக்கும். மீதி எலும்புகள் நாம் வளரவளர ஒன்றோடு ஒன்று இணைந்து விடுகின்றன.

★ சிரிப்பதற்கு மனித முகத்தில் ஏழு தசைகள் மட்டுமே செயற்படுகின்றன. ஆனால் கோபப்படுவதற்கு 43 தசைகள் இயங்க வேண்டும்.

★ நமது முள்ளந்தண்டில் 33 எலும்புகள் உள்ளன. ஆனால் இவற்றில் சில இணைவதால் 26 எலும்புகள் இருப்பது போன்றே தெரியும்.

-பி. பிரேமகாந்த்
(சென். யோவான் கல்லூரி)

# கண்டுபிடியுங்கள்!

பின்வரும் தகவல்களை வைத்து அவை கூறும் சொற்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

1. நான்கு எழுத்துக்களைக் கொண்ட இதன் மூலம் கடினச் சொற்களுக்கு விளக்கம் அறிவர். நடு இரண்டெழுத்தும் நீங்க பெரிதாகி விடும். மூன்றாவது எழுத்து நீங்க எல்லாவற்றையும் இழந்தவன் ஆகிவிடும். முதலெழுத்தும் மூன்றாவது எழுத்தும் நீங்க வேகத்தைக் குறிக்கும். கடினச் சொற்களை அறிய உதவும் அப்பொருள் யாது?

2. கூடுதலாக மக்கள் பயன்படுத்தும் வாகனம் ஐந்து எழுத்துக்களைக் கொண்டது. முதல் இரண்டெழுத்தும் மிதிக்கும். இறுதி மூன்று எழுத்தும் பொருள்களை ஏற்றிச் செல்ல உதவும். முதலெழுத்தும் இறுதி எழுத்தும் சேர்த்தால் வறுமை ஆகிவிடும். மக்கள் அதிகம் பயன்படுத்தும் அந்த வாகனம் எது?

3. குழந்தைகள் ஒருவரை ஒருவர் கேட்டு மடக்குவது இந்த நான்கு எழுத்தினால். இறுதி இரண்டெழுத்தும் சிறுவர்கள் விரும்புவது. ஏன் பெரியோர்களும் கூட விரும்புவர். நடு இரண்டு எழுத்தும் நீங்க பழங்களின் ஒரு பகுதி வரும். சிறுவர்கள் விளையாட்டாக கேட்டு மகிழ்வது எது?

4. தலைககு மேல் இருப்பது; நான்கு எழுத்துக்களை கொண்டது. முதலெழுத்து நீங்க நோ தரும். இரண்டாவது எழுத்து நீங்க பசுக்கள் நிற்குமிடம் வரும். தலைக்கு மேல் இருப்பது எது?


5. இவன் காலத்துடன் ஓடுபவன். ஐந்து எழுத்துக்களைக் கொண்டவன். முதல் இரண்டு எழுத்தும் கௌவும். இறுதி மூன்று எழுத்தும் உறைக்கும். முதலெழுத்தும் இறுதி இரண்டெழுத்தும் சேர்ந்து உடல் உறுப்பாகும். காலத்துடன் ஓடுவது எது?

6. தற்போது எல்லாம் இது இரவில் வரும். ஓரிருநாள்களில் இதைக் காணுவதோ கடினம். நாலெழுத்து கொண்டது. இறுதி இரண்டு எழுத்தும் பாயும்; கடிக்கும். முதல் மூன்று எழுத்தும் வேட்டையாட உதவுவது. நடுஇரண்டு எழுத்தும் நீங்க ஆணுமல்லாமல் பெண்ணுமல்லாமல் ஆகிவிடும். இரவில் வருவது என்ன?

(விடை XI ஆம் பக்கத்தில்)

—வானம்பாடி யோ. தினேஸ்குமார்—
(ஆண்டு10, ஹாட்லிக் கல்லூரி)

# வார்த்தை விளையாட்டு




சிறுவர், சிறுமியரே......! இது ஒரு வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாகஎப்படி வேண்டுமானாலும் எத்தனை தடவைவேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ் வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது முப்பது வார்த்தைகளாவது உங்களால் உருவாக்க முடியுமா என்று பாருங்கள்.

(விடைகள் XI ஆம் பக்கத்தில்)

# உயிர்எழுத்தின் உண்மை

அகவிருள் அகற்று!
ஆஸ்திகம் பேசு!
இடுக்கண் களை!
ஈட்டல் நன்று!
உக்கிரம் விலக்கு!
ஊதியம் பெருக்கு!
எத்துவது கேடு!
ஏகனை வணங்கு!
ஐந்தெழுத் தோது!
ஒத்திகையே உயர்வு
ஓதலே மேன்மை!
ஔவித்தல் அழிவே!

தொகுப்பு:
யோகராஜ் ஹம்ஸானந்தி
(ஆண்டு5 ,கரவெட்டி மாணிக்கவாசக வித்தி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பப்பட்டோர் பேறுபெற்றோர்!

அன்று மாலையில் சூரியன் வழக்கம் போலத்தான் மேற்குத் திசையில் வீழ்ந்து மறைந்தான்· ஆனால் அன்றைய இரவு மட்டும் வழக்கமான இரவாக இருக்கவில்லை· யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியிலுள்ள மக்களின் மனதில் வேதனையையும், பய உணர்வினையும் அதிகரிக்கச் செய்யும் ஓர் இருள் சூழ்ந்த இரவாகவே அது அமைந்து விட்டது. கடவுளாலும் கைவிடப்பட்ட பாவிகள் போல......

அவர்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள்? உக்கிரப் போரின் உச்சக்கட்டத்தில், மனமெல்லாம் இறுகிப் போன நிலையில், ஒரே ஒரு பாதைதான் அவர்களுக்கெனத் திறந்திருந்தது; ஒரே ஒரு முடிவுதான் அவர்கள் எடுக்கக் கூடியதாக இருந்தது யாராலும் நம்ப முடியாத நிகழ்வொன்று கண்ணெதிரே நிகழ்ந்து கொண்டிருந்தது......

இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னே தொண்ணூற்றியைந்தின் ஒக்ரோபர் மாதத்து முப்பதாம் திகதி இரவின் நினைவுகளில் சங்கீதா மூழ்கியிருந்தாள். ''பிரபல பாடகர் மரணம்'' என்ற பத்திரிகைச் செய்திதான் அவளை அந்த நினைவலைகளில் மூழ்க வைத்திருந்தது. அந்த இடப்பெயர்வின் போதுதான் அவனை அவள் கடைசியாகச் சந்தித்திருந்தாள். அந்த இசைக்குயிலின் மரணம் எல்லோரையும் போல் அவளையும் பாதிக்கவே செய்தது.

சங்கீதாவுக்கு சங்கீதமென்றால் கொள்ளை விருப்பம். எங்கெங்கே இசைக்கச்சேரிகள் இடம் பெறுகின்றனவோ அங்கெல்லாம் அவளைக் காண முடியும். அவனையும் முதன் முதலாய் ஓர் இசைக்கச்சேரியில் வைத்துத்தான் நேரில் சந்தித்தாள். வானொலியில் அவன் பாடல்களைக் கேட்பதென்பதே அவளுக்கொரு சுகானுபவந்தான். அவனது அழுத்தமான வெண்கலக்குரலுக்கு இணையாக இன்னொரு குரலை யாராலும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது.

யாழ். இளங்கலைஞர் மண்டபத்தில் ''இதோ இவர் தான் அவர்'' என்று அவன் அறிமுகம் கிடைத்த போது அவள் திகைத்துப் போனாள். அவன் சாரீரத்தினை அனுபவித்துக் கேட்கும் போதெல்லாம் அவனொரு நடுத்தர வயதுக்காரனாகவும், ஓரளவு பருத்த சரீரம் உள்ளவனாகவும் இருப்பானென்று அவள் அவனது தோற்றம் பற்றிய உருவகம் ஒன்றை தன்மனதுள் உருவாக்கி வைத்திருந்தாள்.

நேரில் கண்டபோது அவன் உருவத்துக்கும் அவனிசைக்கும் பாடல்களுக்கும் எந்த வகையிலும் சம்பந்தமில்லையென்றுதான் அவளுக்குத் தோன்றியது.

ஏறக்குறைய தன் வயதை ஒத்தவனாகவோ அல்லது ஒன்றிரண்டு வயதுகள் கூடுதலாக உள்ளவனாகவே தான் இருப்பான் போலிருந்தது. கள்ளமில்லாமல் அவள் முகம் பார்த்து வெள்ளையாய் சிரித்தான். அவளை மிகவும் பெரிய மனிதனாக இதுவரையிலும் தான் கற்பனை செய்து வைத்திருந்தமை பற்றி அவள் அவனிடம் சொன்ன போது, அவன் தனது வெண்கலக்குரல் அதிரப் பலமாகச் சிரித்தான்.

தான் மிகவும் சின்ன மனிதனாகத் தெரிகிறேனோ என்று பொய்யான கவலையுடன் கேட்டான். கேட்கும் போதே அவன் தன்னுடலை இன்னும் சற்றுக்குறுக்கி வைத்துக் கொண்டிருந்தான். இவளும் தன் கடைக்குட்டி மகன் போல அவனிருப்பதாகக் கூறி சற்றும் விட்டுக் கொடுக்காமல் மெய்யான முகபாவனையுடன் நின்றாள். அவளது மூத்த மகனாக இருப்பதற்கே தான் பொருத்தமானவன் என்றும்... தன் வயது இருபத்தியைந்து என்றும்... இசையும் தமிழும் தன்னிரு கண்கள் போல என்றும்... ஒரு கை தேர்ந்த நடிகன் போல நாடக பாணியில் தன்னை அறிமுகம் செய்து கொண்டான்.

**- சந்திரா தனபாலசிங்கம் -**

அதன் பின்னால் வானொலியில் அவன் பாடல்களைக் கேட்கும் போதெல்லாம் அவன் முகமும் அவள் நினைவுக்கு வரும். இயல்பான சந்திப்புகள் பரஸ்பரம் இருவருக்கும் ஒருவரோடு ஒருவருக்கான நல்லெண்ணத்துக்கு வழிவகுத்தது. அவன் ஒரு தலை சிறந்த பாடகன். பாரதியார் பாடல்களை அவன் குரலில் கேட்கும் போது அதை நாளெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம் என்றிருக்கும்.

தொண்ணூற்றுநாலின் நடுப்பகுதியில் ஒருநாள் அவன் அவளிடம் மனம் விட்டுப்பேசினான். நாட்டில் போர் மேகங்கள் கலைந்து போய் விடும் ஒரு சூழல் வரும்போல் உள்ளது. என்றும் அதனால் மக்களின் நிம்மதியான வாழ்வு உறுதி செய்யப்படும் என்றும் சொன்னான். உண்மையான சமாதானத்தை வரவேற்பதில் யாருமே பின்நிற்கமாட்டார்கள் என்று உணர்சியுடன் கூறினான்.

குண்டுகளற்ற விமானங்கள் வானத்தில் பறக்க வேண்டும் என்றும...பயபீதியற்ற மனித முகங்களைத் தரிசிக்க வேண்டுமென்றும்...மலர்கள் மலர்வது போன்ற இயல்பான மென்மையுடன் புதியதோர் உலகம் சிருஷ்டிக்கப்பட வேண்டும் என்றும் அவளும் ஆசைப்பட்டாள்... கனவுகண்டாள்.

ஆனால்...இருள் சூழ்ந்த இரவில் நிகழத் தொடங்கிய அந்தத்தவிர்க்க முடியாத இடம்பெயர்வுதான் உண்மை என்றானது. சங்கீதா உடைந்து போனாள். அவளால் எதையும் எளிதாக ஏற்றுக்கொள்ள முடியாமல்இருந்தது. சொந்த இடத்தினை விட்டுப்பிரிவதென்பது எவ்வளவுகொடுமையானவிஷயம் ஆயினும் எல்லோரும் போன பின்னால் அங்கே இருந்தென்ன செய்வது? உள்ள நிலைமையை அப்பா விடம் எடுத்துச் சொன்னாள் சங்கீதா.

நீண்ட வாக்குவாதங்கள், சொற்போர்களுக்கு மத்தியில் தான் அவளுடன் புறப்படுவதற்கு அவர் சம்மதித்தார். இருந்தாலும் கொஞ்சமும் அவர் விரும்பாத ஒரு காரியத்தை கட்டாயப்படுத்தி செய்வித்தபோது அதுவே அவரது உயிருக்கு உலையாகப் போகிறது என்பதை அச்சமயத்தில் அவளால் உணர முடியாமல்போனது.

அப்பாவின் துணையுடன் அந்த நள்ளிரவு வேளையில் அவள் நடக்கத் தொடங்கினாள். அந்த வேளையிலும் ஷெல் சத்தங்கள் எல்லோரையும் துரத்துவது போல் எங்கோ கேட்டுக்கொண்டுதானிருந்தது. ஏற்கெனவே இடம் பெயர்ந்து நொந்து போயிந்தவர்கள் தொடக்கி வைக்க மிகுதிப் பேரும் அவர் வழி தொடர்ந்து கொண்டிருந்தனர். நாவற்குழி போகும் நல்லூர்—செம்மணி வீதி, சனக்கூட்டத்தினால் நிரம்பிவழிந்து கொண்டிருந்தது. அரியாலை வீதிக்கும் அதே நிலைதான் என்று பேசிக்கொண்டார்கள். மழைபெய்து கொண்டிருந்தது.

கூட்டத்திற்குள் சிக்குண்டு அப்பா விழிபிதுங்கிப் போனார். வீடு திரும்பும் எண்ணத்துடன் அடிக்கடி பின்னால் திரும்பிப்பார்த்தார். அலையலையான மக்கள் வெள்ளம் கரைபுரண்டு வந்து கொண்டிருந்தது. எப்படித் திரும்பிப் போக முடியும்? தள்ளாடி நடந்து கொண்டிருந்தவருக்கு மூச்சு விடுவது சிரமமாக இருந்தது.

அப்பாவுக்குரிய மருந்தைக் கூட அவசரத்தில் எடுக்க மறந்து வந்தது நினைவுக்கு வந்தது. உடுப்பு மட்டும்தான் வாழ்வின் தேவை என்பது போல வாரிக்கட்டிக்கொண்டு வந்திருந்தது அவளுக்கு இப்போது தாங்க முடியாத சுமையாக இருந்தது. இரண்டு காலடிகள் எடுத்து வைப்பதும் அடுத்த கட்ட நடைக்காக இரண்டு மணி நேரம் கூடக் காத்திருக்க வேண்டியிருப்பதும்...அவளுக்கே முடியாமல் இருந்தபோது... அப்பா பாவம்!

எப்படியோ அடுத்தநாளின் மாலைப் பொழுதில் அவர்க

(X ஆம் பக்கம் பார்க்க)



# சஞ்சீவி சிறுகதைகள்

# யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட உத்தியோகத்தர்களில் சிறிசேனாவும் ஒருவர். யாழ்ப்பாணம் செல்ல விருப்பமானவர்கள் யார் என்று அரசாங்கம் கேட்ட பொழுது பல அதிகாரிகள் தங்கள் பெயர்களைக் கொடுக்க வில்லை பயத்தில். ''உங்கள் எல்லாரையும் பத்திரமாகப் பிளேனில்கொண்டு போய் இறக்கி ஒரு இடத்தில் பாதுகாப்பாக வைத்திருந்து, மீண்டும் பிளேனில் ஏற்றிப்பத்திரமாகக்கொண்டு வந்துஇறக்குவோம்'' என்று அரசாங்கம் உத்தரவாதம் அளித்த பொழுது தான் பலர் பெயர் கொடுத்தனர். சிறிசேனாவும் பெயர் கொடுத்தார். அரசாங்க நிர்ப்பந்தத்தில் மாத்திரமல்ல, கடமை உணர்விலும் கூடத்தான்!

இலங்கையில் சாதி, இனமத பேதங்கள் ஒன்றும் கிடையா. இலங்கையர் எல்லோரும் ஒரே இனம். எல்லாரையும் பாகுபாடு காட்டாது ஒரேமாதிரியாக நடத்த வேண்டும். அந்த இலட்சியத்தை அடையத்தான் அரசாங்கம் பாடுபட்டுக் கொண்டுவருகின்றது. போரினால் சிதைந்துவிட்ட இந்த நாட்டை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும். அறுந்துபோன இன உறவுகளை மீண்டும் புதுப்பிக்க வேண்டும். அதற்கு ஒரே மருந்து அரசாங்கத்தின் தீர்வுப் பொதிதான். அதை எப்படியும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அமுல் படுத்த வேண்டும். அதற்கு முதல்படி, யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது. இந்தத் தேர்தலை நல்லபடியாக நடத்தி யாழ்ப்பாண மக்களை தேர்தலில் பங்குபற்றச் செய்து விட்டால், பிறகு படிப்படியாக தீர்வுத் திட்டத்தையும் அமுல் செய்து விடலாம். அதைத் தமிழ் மக்கள் ஏற்கச் செய்துவிடலாம். பிறகு ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்புவது கஷ்டமாக இராது. எமது தாய் நாடாகிய இந்த இலங்கைத்தீவு பிளவுபடாமல், காப்பாற்ற வேண்டியது எமது கடமை இல்லையா? அதைக் காப்பாற்றலாம், காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வில் தான் அவர் வரச் சம்மதித்தார்.

சிறிசேனாவிற்கு வயது அறுபதை அண்மித்துக் கொண்டிருக்கிறது. அடுத்த வருடம் ஓய்வு பெறுகிறார். நன்றாகப் போந்துபொலிந்த தேகம். சிரிக்கும் முகம். தலை முழு நரை. அதில் நடுவில் பொட்டல் வெளி.

அவருக்கு நீண்ட நாள்களாகவே ஒரு ஆசை: ஓர் முறை வடக்கே போய்யாழ்ப்பாணத்தைப் பார்க்க வேண்டும்என்று இடையில் ஏதேதோ நடந்து அவரது திட்டத்தை நிறைவேறவிடாமல் செய்து கொண்டிருந்தன. முதலில் கலியாணம். பிறகு வருஷம் ஒன்றாக நான்கு பிள்ளைகள். பிள்ளைகளது [illegible] ணிக்கை கூடக் கூட [illegible]லைகளும் கூடிக்கொண்டு வந்ததால் யாழ்ப்பாணம் போகும் திட்டத்தைத் தள்ளிப் போட்டுக்கொண்டு வந்தார்.

முதலில் 58, பிறகு 77, அதன்பிறகு 83. அதன்பிறகு ஆயுதப்போராட்டம் தானே! 83 இல் கொழும்பு நகரில் தமிழருக்கு நடந்த கொடுமைகளைக் கண்ணால் பார்த்த — ஆயுதப்படைகளைத் தவிர்ந்த—எந்தச் சிங்களவராவது யாழ்ப்பாணம் வரத் துணிவாரா? நான் அங்கு போன இடத்தில் எனக்கு ஏதாவது நடந்துவிட்டால், எனது மனைவி மக்களை யார் பார்ப்பார்கள்?— என்று கடைசியில் தனது திட்டத்தைக் கைவிட்டு விட்டார். யாழ்ப்பாணத்தில் அப்படி என்ன உலக அதிசயமா இருக்கிறது போய்ப் பார்ப்பதற்கு?

கடைசி நேரத்தில் இப்படி ஒரு சந்தர்ப்பம் தானாகவே வந்து சேர்ந்திருக்கிறது. அரசாங்கமே பிளேனில் கூட்டிக் கொண்டு போய், கொண்டு வந்து விடுமாமே! இதை [illegible] இல்லை; இனிவரப்போவதும் இல்லை! நாட்டுக்கு — அரசாங்கத்திற்குச் சேவை செய்கிறதுமாகிறது, யாழ்ப்பாணத்தைப் பார்க்கிறதுமாகிறது! பெயர் கொடுத்து விட்டார்!

அந்த நேரத்தில்தான் கண்டி தலதாமாளிகையின் முன்னால் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. நாட்டிலுள்ள மிகவும் புனிதமான பௌத்த ஆலயம். நாட்டின் நடுவில் உள்ள, மிகவும் பாதுகாப்பான இடமாகக் கருதப்படுகின்ற கண்டி நகரம். அன்னியரான போத்துக்கீசர், ஒல்லாந்தராலேயே கண்டியைக் கைப்பற்ற முடியவில்லை. ஆங்கிலேயர் கூட முதலில் பெரிய கஷ்டப்பட்டார்கள். பின்பு உள்ளூரவர்களான சில கண்டிச் சிங்களப் பிரதானிகளது

**- அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை -**

உதவியுடன்தான் அவர்களால் கண்டியைக் கைப்பற்ற முடிந்தது. அத்தகைய கண்டி நகருக்குள் பயங்கரவாதிகள் நுழைந்து குண்டை வெடிக்க வைத்து விட்டார்களா? நினைத்துப் பார்க்க ஆத்திரம் ஆத்திரமாக வந்தது! அதே வேளை ஆச்சரியமாகவும் இருந்தது!

அவர் ஓர் உண்மையான பௌத்தர். புத்தபகவானது போதனைகளைக் கடைப்பிடிக்க முயல்பவர். ''கோபம் கொள்ளாதே! பழிவாங்க நினைக்காதே! எல்லோரிடமும் அன்பு காட்டு! அமைதியாக இரு! பற்றற்ற நிலையில் நின்று உன் கடமையைச் செய்!'' என்ற புத்தபகவானது போதனைகளை திரும்பத்திரும்ப தனக்கே சொல்லி மனதைச் சாந்தப்படுத்த முயன்று கொண்டிருந்தார். இருந்தாலும் மனித மனது கேட்கிறதா? அதில் விட்டு விட்டு ஆத்திரம் பீறிக் கொண்டுதான் இருந்தது.

கொழும்பிலிருந்து விமானத்தில் பலாலி கொண்டு வந்து, அங்கிருந்து பஸ்ஸில் கொண்டு வந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் விட்டார்கள். சிறீசேனாவைப்போலவே இன்னும் பல சிங்கள உத்தியோகத்தர்கள் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்தனர். அதிகமானவர்கள் கொழும்புக்காரர்.

அடுத்தநாள் காலை தேர்தல். சிறீசேனாவிற்கு பருத்தித்துறையில் தேர்தல் கடமை. நீண்ட தூர பஸ் பிரயாணம். பலாலியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பொழுதும், யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை போய்வரும் பொழுதும் அவர் யாழ்ப்பாணத்தைப் பார்த்தார்.

பனை, தென்னை, கமுகு, மா, பலா, நெல்லி, வாழை, வீடுகள், வேலிகள், மதில்கள், வெளிகள், பற்றைகள்...

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுமைகள் இறந்துவதில்லை

## மு. சிவநேசன்

சஞ்சீவி குறுநாவல்

பாகம் – 5

சுந்தரம் மாமாவோடை என்ன பிரச்சினை எண்டு சுபி கேட்பாள். அவளுக்கு வரலாறு சொல்லி நான் களைச்சுப் போயிட்டன். அதெல்லாம் பழைய கதை.

என்ரை அப்பு பெரிய புகையிலை வியாபாரி. புகையிலை வாங்கிறது; விற்கிறது: கொழும்புக்கு சிப்பம் கட்டி அனுப்பிறது;— இப்படி ஏக தடல் புடலான வியாபாரம். எல்லாத்துக்கும் தரகர் வேலை — உதவி எல்லாம்— சுந்தரம் மாமாதான்.

அவரை நம்பி நம்பி அப்பு புகையிலையைக் கட்டுகிறது. அவர் அது கழிவு; இது நட்டம் எண்டு கணக்குக்காட்டி நல்ல கொமிஷன் அடிச்சு எல்லாத்தையும் பவுணாக்கிப் பதுக்கிறது. இப்படியே நம்பி நம்பி அப்பு தேயத்தேய அவர் வளர்ந்து வளர்ந்து வந்தது எங்களுக்கெல்லாம் விளங்கினதுதான்; கடைசி வரையும் அப்புவுக்கு விளங்க வில்லை.

எங்கடை குடும்பத்திலை நான்தான் மூத்தபிள்ளை. அடுத்து ரெண்டு தம்பிமார். கடைசித் தங்கச்சி விமலா. எனக்குப் படிக்கிற காலம் நிறையப் பொறுப்பு. வீட்டு வேலையள் ஏராளம். வேலையாட்களும் ஏராளம். சுந்தரம் மாமாவடை கடும் சட்டங்கள் ஒரு புறம். படிப்பு என்பது ரெண்டாம் பட்சம்தான்.

நான் ஏ. எல். படிக்கிற நேரம். வீட்டிலை நிலைமை மோசமடையுது. கறையான் கோதின மாதிரி வீட்டுப் பொருளாதாரம் முழுதையும் சுந்தரத்தார் கோதிவிட்டார். மரம் பொறியுற நிலைமை. இப்பவும் அப்புவுக்கு மாமாவிலை முழுக்க முழுக்க நம்பிக்கை. அவன் சகோதரம் துடிப்பானதானே எண்ட நிலைப்பு.

அம்மாவிடை கழுத்திலை அப்பு கட்டின இருபத்தொரு பவுண் கொடி, அதைவிட ஆளுக்கு ஒரு செயின், ஒரு சோடி காப்பு மீதம் போக எல்லாம் ஒவ்வொண்டாக சுந்தரம் மாமாவுக்கே வித்து வித்து வியாபாரத்திலை முதலிட்டதுதான் அப்பு செஞ்ச வேலை. இனி கொடியிலை கைவைக்கிற கட்டம். மாமாவைப் பற்றி — தன் கூடப்பிறந்த சகோதரம்பற்றி — அம்மா விளங்குது. அப்புவுக்கு விளங்குகிறபாடில்லை.

'என்ர உயிரே போனாலும் கொடியிலை கைவைக்க நான் இடம் தரமாட்டன். வியாபாரத்தை விட்டிட்டு வேற தொழில் பாருங்கோ......' — இது அம்மா.

'அரைப்பவுண் தாலியிலை தான் அத்தானோடை உயிர் தங்கி நிற்குது. உந்தக் கொடி வெறும் பகட்டுத்தான். நாளைக்கு கள்ளரிட்டை அகப்பட்டால் உது தாலியையும் சேர்த்தெல்லோ கொண்டு போகும்......' இது சுந்தரம் மாமா.


'மாமாதான் கொடியை வாங்கி மடக்கிவிடத் தாளம் போடுறார். அவர் எப்பிடியும் வெண்டிடுவர்'... இது என் எண்ணம்.

'கெடுகுடி சொற்கேளாது. நீ கொடியை நம்பிக்குடு. நாளைக்கு கொண்ணன் மாதிரி இது உதவுமே......!' — அப்பு.

இப்பிடி இழுபறிப்பட்டும் கொடியைத்தான் கைவிடவே மாட்டேன் என்ற பிடிவாதம்......அம்மா வென்று விட்டா. இனி இப்பிடியும் இருக்காவிட்டால் மாமா வாலாட்டுவார் என நான் நினைத்துக்கொண்டேன்.

அடுத்தநாள் அப்புவும் மாமாவும் ஒன்றாகக் கொழும்புக்கு ரயில் ஏறுகினம். எனக்கு ஏ. எல். நெருங்கிக் கொண்டிருக்கு. 'நீ கவனமாக படிச்சு பாஸ் பண்ணு கமலா. மேலையும் படிக்க வேணும்' சொல்லும்போது அப்புவின் கண்களில் நீர் திரண்டது.

முதல்நாள் இழுபறியில் மாமாவுக்கும், அம்மாவுக்கும் மனத்தாங்கல். மாமா சிரிச்சுப் பழகினாலும் மனசில அடியிலை ஒரு மூலையிலே வன்மம் இருக்கும். சரியான நேரம் வரயுக்கை அது வெளிப்பட்டுப் பாயும். அம்மாடை கொடி பறிபோகும். அம்மா இதிலை தோற்றே தீருவா. அப்புவுக்கு தோல்வியும் ஒண்டுதான் வெற்றியும் ஒண்டுதான்.



இப்பிடி எங்கடை அம்மா அப்புவை ஆட்டின சுந்தரத்தார் — சேர்த்த சொத்து எங்கை? வீடு வாசல் எங்கை? பிள்ளையள் தொடர்பு இல்லை. மாமி செத்துக் கன காலம் ஆச்சு! தனிமனுசனா வயசு போன காலம் தவிக்கிறார். நான் ஏ. எல். படிக்கிற காலம் அந்த ஆட்டம் போட்டவர்; சுபியடை ஏ. எல்லுக்குள் ஓஞ்சு போனார்.

அடுத்த மாதம் எனக்கு சோதினை தொடங்குது. குமர் பெண் பிள்ளையளுக்கு ஏன் படிப்பு என அடிக்கடி சுந்தரத்தார் அப்புவை ஏசிறது. அப்பு என்ரை படிப்பிலை மட்டும் விட்டுக் கொடுக்கேல்லை.

மனச் சுமையோடை தான் என்ர படிப்பு போகுது. கொழும்பாலை வந்த மாணிக்கம் தம்பியை கூப்பிட்டு சொன்னாராம். அவன் என்னட்டை வந்து இரகசியமாஆலோசனைகேட்டான்.

'கொப்புவுக்கு கொஞ்சம் சுகமில்லை. சுந்தரம்தான் வைத்தியம் பாக்கிறது. சொல்ல வேண்டாம் எண்டு வழிக்குவழி சொன்னவை. ஒரு ஆளுக்கு எண்டாலும் சொல்லா விட்டால் எனக்கும் எல்லோ பழி நாளைக்கு'

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒரு நாள் அப்புக்குத் தடிமன் — காச்சல் எண்டு கேள்விப்பட்டு அறிய மாட்டம். இப்ப பாவம் துடிச்சுப் போகும். அம்மாவும் பக்கத்திலை இல்லை.

நான் ஸ்கூல்ஆல் வரும் போது அம்மா கடிதம் எழுதிக் கொண்டு இருந்தா. அப்பு கொழும்புக்குப் போய் 3, 4 மாதம் ஆச்சாம். செலவுக்கு காசு அனுப்ப இல்லை. எல்லாம் சுந்தரம் வறுகவிட்டு சும்மா வருவர். இப்ப வீட்டிலை காத்தையே குடிக்கிறது?

''அம்மா இப்ப எழுதாதை! அப்புக்கு ஏதோ சுகமில்லை எண்டு மாணிக்கம் அண்ணை சொன்னவர். மாறட்டும்.''

''எடி எங்க ஸ்கூல்ல வந்தா சொன்னான்? ஏன் எனக்குச் சொல்ல இல்லை. அவன் வந்து ஒரு கிழமை ஆச்சே. நீ படிப்பைப் பார்'' — எண்டுவிட்டு அம்மா கடன் பட்டு ஆரையோ பிடிச்சு கொழும்பிலை போய் இறங்கி விட்டா.

''இங்க ஆருக்கும் தடிமன் எண்டால் ஊரிலை இருந்து ஆளுங்கள் ஓடியாறதா?'' — கண்டதும் சுந்தரத்தார் அம்மாவை கேட்டது இது தானாம். ''கமலா படிச்சுக் கிழிச்சிட்டாளா?'' — எண்டும் கேட்டவராம். அம்மா அழுதாவாம்.

அவரெடை பிள்ளையளுக்கு படிப்பு எண்டால் வெகுதொலைவுதான், ஏதோ பணம் பண்ணினால் சரி. இதுக்காக நாங்களும் படிக்காம இருக்கிறதா?

அண்டைக்குப் பின்னேரம் ஆஸ்பத்திரிக்கு அம்மாவை

புறுபுறுத்தப... அப்புவை ... அடுத்தநாள் ... ஏத்தி வீட்டு... டார்.

அப்பு படு... காட்சி அ... பிழியுதாம். ... போய் தன்... தேத்தண்ண... குடுக்க இவ... ஆறுதலா க... ரிக்க இல்லை...

அப்பு கண்... ''கவலைப்ப... காமாட்சி. ... சோதினை ... வருஷம் பி... பதினைஞ்சு ... ஊருக்கு வ... ரத்துக்கும் ... வேலை. ... கஷ்டம் த... சொன்னவர...

போன ... அம்மா ரயி... வீட்டுக்கு வ... நடந்ததெல்... அழுது ஒப்... மாமாவிலை... சலா வந்தது... அப்புவையு... வையும் நா... வேணும் பே...

கண்டறிய... சோதினை ... நிக்குது? ... தொடங்குது... ஆசைக்கு ... வேணும். ... வருஷப்பிறப... வந்திடும்.

இனி மாம... கூட்டுயாவா... எண்டு நா... குச் சொல்... வன் யாவா... கட்டிப் பற... இவரை நம்... ரானதுதான்... செய்ய எ... ஏலாதே?

பயணக்... நேற்றுப்போ... பிய அம்மா... ணியை நீ... லிலை ஏ... வந்து நிக்கு...

படலைை... கொண்டு ... தான் வாறா... வோடை ... காலையிலை... டவர்......

(தொ...

---

# தொடுகை உணர்வு மூலம் உணரும் அற்புதம்...

சுக வாழ்க்கைக்கும் நன்னடத்தைக்கும் தொடுகை ஒரு தேவையாகக் கருதப்படுகின்றது. தொடுகையானது மனித தொடர்பின் முதலாவது அம்சமாகும். இது ஒருவகையில் 'அமைதியான குரல்' ஆகும். இந்த ஆதரவு ஒரு தேவை.

உதாரணமாக தொடுகை கிடைக்கப்பெறாத குழந்தைகள் மனவளர்ச்சி குன்றியவர்களாக வளரக் கூடும்; துயர உணர்வால் வாடவும் சில சமயம் மரணிக்கவும் கூடும்.

> சுகமஞ்சரி— காலாண்டு சஞ்சிகையின் 1997 சித்திரை இதழில் 'தொடுகை ஒரு மனித கருவி' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை இது.

அன்னையின் அரவணைப்பில் குழந்தை பாதுகாப்பையும் மனத்திடத்தையும் பெற்று வளர்கின்றது. குழந்தைகள் பெற்றோரின் தொடுகையை வரவேற்கின்றன. தண்டனைக்குரிய தொடுகை கூட, தொடுகை இல்லாதிருப்பதை விட நன்று.

குரங்குகளில் செய்த ஆய்வுகளின்படி தாயினால் வளர்க்கப்படாத குட்டிகளின் மூளையப் பகுதியில் நோ, அமைதியின்மைக்கான பிரதேசங்கள் அதிகம் பெருத்துக் காணப்பட்டன. எனவே செழுமையான உளவிருத்தியில் தாயின் தொடுகை முக்கிய பங்கினை வகிக்கிறது.

தொடுதலானது தனியே குழந்தைகளுக்கு மட்டும் தேவையானது அல்ல. வயது வந்தோருக்கும், நோயுற்றோருக்கும் தொடுகை நல்ல ஆதரவளிக்கின்றது. இன்றைய சூழ்நிலையில் பிள்ளைகளின் அருகாமையின்மையால் நோய்வாய்ப்படும் பெற்றோரும், அதிகம் நோயுற்ற போது பிள்ளைகளின் அருகாமைக்காக ஏங்குபவரும் பலர்.

பாலியல் கல்வி சார்பான நூல்களும் மனித தொடுகையில் கவனஞ் செலுத்தியுள்ளன. ஆயினும் இவை காம சம்பந்தமான, சிங்காரமான, மகிழ்ச்சியை ஏற்படுத்தும் தொடுகை உணர்வுகளையே ஊன்றிக் கருதியுள்ளன எனினும், மனித இடைத்தொடர்பில் தொடுதல் தேவையை உணர்த்தியுள்ளன.

பொதுவாக பெண்கள் ஆண்களைவிட அதிக தொடுதலை வழங்குவர்; இத்தொடுகையை சாதாரண வாழ்வில் உணர்ந்து மகிழ்வர். ஆயினும் ஆண்கள் தொடுதலை பாலியல் ரீதியில் உணர்வதுண்டு. சில ஆய்வுகளின்படி, பெண்கள் அதிக தொடுதல் தூண்டலைப் பெறுவதனால் அதிக தூண்டற்பேற்றை காட்டுகின்றனர் எனக் காட்டப்பட்டுள்ளது. பாலியல், பாலியல் அல்லாத தொடுகைக்கான ஆண், பெண் இருபாலாருக்கும் இடையிலான உண்மையான வேறுபாடு இன்னமும் அறியப்படவில்லை.

ஒருவரைத் தாண்டிச் செல்லும் போது அவரின் மீது தொட்டு அகன்றால், அத்தொடுகை உணர்வு கொடுக்கப்பட்ட விடயம் மறக்கப்பட்டாலும் அவரைச் சந்தித்தது ஞாபகத்தில் நன்கு பதியும். பிரச்சினைகளின் மத்தியில் அல்லது ஆழ்ந்த துயரத்தில் அல்லது வருத்தத்தில் அல்லது விபத்து, இறப்பு போன்றவற்றின் மத்தியில் உள்ள ஒருவருக்கு ஒரு சிறிய தொடுகை அதிக அர்த்தத்தைக் கொடுக்கும். எம் கலாசாரத்தில் மரணச் சடங்கிலும் தொடுதலின் [illegible] உறவில் தொடுதல் பரிசோதனைத் தொடர்புகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. நோயாளியின் நாடித் துடிப்பை அறிதல், பாதிக்கப்பட்ட உடல் அங்கங்களைப் பரீட்சித்துப் பார்த்தல் என்பவற்றில் தொடுகை முக்கிய கருவியாக அமைகின்றது. தொடுகை தகாத முறையில், திருப்திகரமற்றதாக அமையின், நோயாளி— மருத்துவர் உறவு எதிர்மறையாக அமைந்துவிடும். நோயாளி மருத்துவருடன் ஒத்துழைக்க மறுப்பார். நோய்க்கான சிகிச்சை முறைகளை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படும். எனவே மருத்துவர் நோயாளியின் வயது, பால் தன்மைக்கேற்ப தொடுகைத் தேவையை அறிந்திருத்தல் வேண்டும்.

மருத்துவ விஞ்ஞானத்தில் முதலாந்தர கவனிப்பில் தொடுகையின் முக்கியத்துவத்தையும், தேவையையும், விருத்தியினையும் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். மருத்துவக் கல்லூரிகளில் தொடுகை பற்றிக் கற்பிக்கப்படுகின்றது.

அநேகமாக தொடுகை என்பது உடலியல் தொடுகையை உணர்த்தும். ஆயினும், ஒருவர் மற்றவருடன் தொடர்பு கொள்ளும் முறையிலுள்ள உளவியல் சமூகவியல் உணர்வியல் பிணைப்பையும் தொடுதல் எனலாம். உணர்வியல் தொடுகை உடற் தொழிலியல் வழக்கில் உயிரின் உணர்வுமிக்க தொடர்பாகக் கருதப்படும்.

தொடுதல் முறை எப்படியானது, எதனால் வழங்கப்படுகின்றது என்பது ஒருவர் வாழும் நாட்டின் கலாசாரத்திற்கேற்ப அமைந்து விடுகின்றது. இது சந்ததிக்குச் சந்ததி வேறுபட்டுச் செல்லும். புற்றுநோயாளர் போன்றோரிடம் தொடுகையை வழங்கத் தயங்கும் சமுதாயமும் உண்டு. சில வளர்ச்சிப் பருவங்களில் தொடுகை இலகுவாக அமையும்.

வெளிநாடுகளில் ஒருவரை வழியனுப்பும் போது கைகுலுக்குதல் ஒரு வழக்கமாகும். அல்லது தோளைத் தட்டிக்கொடுப்பர். ஒருவரை ஆரத்தழுவுதலும் சில இடங்களில் வழக்கிலிருந்து வருகின்றது. ஒருவரின் கைகுலுக்கல் முறை அவரின் விருப்பத்தையும் அண்மைத்தன்மையையும் காட்டும். ஒருவரின் கையை இரு கைகளினாலும் பற்றி ஒற்றிக் கொள்ளலும். முத்தமிடலும் சர்வதேச உறவில் அதிகரித்து வருகின்றது.

விருந்தினரை... வைத்தலி... மானது.

நல்ல வ... லாதது வி... நின்றது பே... ஷணை மு... தலும், ... தொடர்புக... தலும் மிக ... தன. இதே... வரும் நோ... முறையில் ... வேண்டும்.

தொடுகை... சாரத்திற்கே... கொள்ளக் ... ஏற்றுக் கொ... தாகவோ அ... தகாத தொ... பெண் அமை...

பின் வேறு... காணும் போ... பம் ஏற்படு... துவப் பயிற்... வொரு ... அர்த்தத்தை... நன்கு விள...

வேண்டும்.

ஒருவர் தொ... மையை, ... உணர்ந்து ...

(XI ஆம் ப...

கம்சானந்தி சிவநா...

(3 ஆம் வருடம், யாழ்.மருத்துவ பீ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

த்தபடி கூட்டிப்போய்
வ காட்டின மாமா
நாள் காலமை ரயில்
ீட்டுக்கு அனுப்பிவிட்

படுக்கையிலைகிடந்த
அம்மா நெஞ்சை
ாம். மினைக்கட்டுப்
தன்ர கையாலை ஒரு
ண்ணியாதல் வச்சுக்
இவன் விடவில்லை.
ா சுகம் துக்கம் விசா
ல்லை.

கண் கலங்கினதாம்.
லப்படாமல் போ
சி. கமலாவுக்கும்
னை நேரம். சித்திரை
பிறக்கிற நேரம்.
ஞ்சு நாள்ளை நான்
த வந்திடுவன். சுந்த
கும் ஊருப்பட்ட
. நீயும் நிண்டால்
தானே.''—எண்டு
னவராம்.

ன அடுத்த நாளே
ரயிலேறிமத்தியானம்
கு வந்துஇறங்கிட்டா.
தெல்லாம் அழுது
ஒப்பிச்சா. எனக்கு
விலை எரிச்சல் எரிச்
ந்தது. நானே போய்
வயும் பாத்து மாமா
நாலுகேள்வி கேட்க
ம் போலை இருந்தது.
—றியாத ஏ. எல்.
னை எல்லோ குறுக்கை
? வாற கிழமை
ங்குது. அப்புவின்ரை
கு அதைச் செய்ய
ம். அதுக்கிடையிலை
பிறப்புக்கு அப்புவும்
ம்.

மாமவோடை உந்தக்
ாவாரம் வேண்டாம்
நான்தான் அப்புவுக்
சால்லுறது. அவன
ாவாரத்திலை கொடி
பறக்கிறான். அப்பு
நம்பிக் குட்டிச் சுவ
தான் மிச்சம். தனியச்
என்ன அப்புவுக்கு
?

ணக்களையிலை—
ப்போய் இன்று திரும்
ம்மாவுக்கு தேத்தண்
நீட்டுறன். வாச
ஏதோ வாகனம்
கிக்குது.
லையைத் திறந்து
டு சுந்தரம் மாமா
ாறார். அட அப்பு
வந்திட்டாரோ?
யிலை ரயிலேத்தி விட்
....
(தொடரும்)

னரை வழியனுப்பி
தலிலும் முக்கிய
.
வழியனுப்புதல் இல்
விருந்து இடையில்
போலாகும். சம்பா
முடிவில் கைகுலுக்கு
, வியாபாரத்
ர்புகளில் கை குலுக்கு
மிக முக்கியம் வாய்ந்
இதே போல் மருத்து
நோயாளியை நல்ல
ில் வழியனுப்புதல்
ம்.
டுகை ஒருவரின் கலா
ிற்கேற்ப ஏற்றுக்
ளக் கூடியதாகவோ,
கொள்ள முடியாத
ா அமையும். ஆணின்
தொடுகையினால் ஒரு
அமைதி குழம்பியிருப்

ங்கள்!

வேறு ஆண்களைக்
போதும் அதே குழப்
ற்படும். எனவே மருத்
யிற்சியிலும் ஒவ்
தொடுகையினதும்
த்தை மருத்துவர்
விளங்கியிருத்தல்

நாதன்
வ பீடம்.)

ம்.
ர் தொடுகையின் தன்
, வலிமையை
து நேரான பாதை
ும் பக்கம் பார்க்க)

# விஞ்ஞானிகள் தேடும் ஞானம்

மேலை நாடுகள் பலவும் இன்று விஞ்ஞானத்தில் முன்னேறி இருக்கின்றன. கடந்த நானூறு ஆண்டுகளில் அங்கு நிகழ்ந்துள்ள சாதனைகள், மனிதனின் வாழ்க்கை முறையையே மாற்றி இருக்கின்றன. மனிதனுக்குப் பதிலாக எதையும் செய்யக் கூடிய இயந்திரங்களை மனிதன் கண்டுபிடித்து விட்டான். இது இயந்திர ஆட்சி நடக்கும் உலகம்.

ஆனால் அந்த விஞ்ஞானிகள் — அந்த முன்னேற்றத்தை அனுபவிக்கும் மேலைநாட்டு மக்கள்— இன்று மன அமைதிக்காக மெய்ஞ்ஞானத்தை நாடி வருகிறார்கள். சில நூறு ஆண்டுகளுக்கு முன் கிடைத்த இந்தப் புதிய சாதனங்கள் நிம்மதியைத் தரவில்லை. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்துமதம் போற்றிக் காப்பாற்றி வைத்துள்ள உப நிஷத சாரங்களில் கிடைக்கும் அமைதியைத் தேடி வருகிறார்கள்.

விஞ்ஞானத்துக்கும் மெய்ஞ்ஞானத்துக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. இரண்டிற்கும் உடல் உழைப்பும் உள்ளப் பக்குவமும் ஒத்துழைக்க வேண்டும். இரண்டுமே அறிவின் எல்லையைத் தொட விரும்புகிறவைதாம். விஞ்ஞான தத்துவங்களைச் சொன்னால் யாரும் ஏற்றுக் கொள்வதில்லை; நிரூபித்தால் தான் ஒப்புக் கொள்வார்கள். நமது இந்துமதத்தில் உள்ள பழம் பெரும் நூல்களும் அப்படிப்பட்டவை தாம். அவற்றின் பொருளுக்கு விளக்கம் தந்த, ஆதிசங்கரர் போன்ற பெரியோர்களும் எதையும் அப்படியே ஏற்றுக் கொள்ளச் சொல்லவில்லை. 'எது? ஏன்? எப்படி...? என்று கேள்விகளைக் கேட்டுப்பார். பதிலைப்

## விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

புரிந்துகொள். அப்போதுதான் நீ அதன்வழி நடப்பது எளிதாக இருக்கும்' என்று நமது நூல்கள் சொல்லுகின்றன. உபநிடதங்கள் பலவற்றிலும் உண்மைகள், கேள்வி பதில் வாயிலாகத்தான் விளக்கப்படுகின்றன. அதனால் தான் இன்று விஞ்ஞானத்தில் முன்னேற்றமடைந்த நாட்டு மக்களை நம்முடைய ஆன்மீக ஞானம் பெரிதும் கவர்ந்திருக்கிறது.

ஒரு குழந்தை இந்த உலகத்தில் பிறந்ததும், ஏதும் புரியாத குழப்பத்தில் தவிக்கிறது. அதனால் தன்னைச் சுற்றி உள்ள குரல்களை அடையாளம் கண்டு கொள்ள முடிவதில்லை. கண்கள் சுற்றிப் பார்த்து அலைகின்றன. மெல்ல மெல்ல அது ஒரு முகத்தை அடையாளம் கண்டு கொள்கிறது; ஒரு குரல் அதற்குப் புரிகிறது. அது தன்னுடைய அம்மா என்று தெரிந்து கொள்ளுகிறது. அம்மாவின் மூலம் அப்பாவையும் தெரிந்து கொள்ளுகிறது. பிறகு படிப்படியாக உலகத்தைத் தெரிந்து கொள்ளுகிறது. ஐம்புலன்களின் வழியாக, அது கொஞ்சம் கொஞ்சமாக உலகத்தைத் தெரிந்து கொள்ளுகிறது!

இன்று விஞ்ஞானத் துறையில் நாம் அடைந்துள்ள முன்னேற்றம் முழுவதும் இந்த ஐம்புலன்களின் மூலம் கிடைத்தவை தாம். சிறு குழந்தை உலகத்தைப் புரிந்து கொள்ள முயலுவதைப்போல, நாமும் நமது எல்லைகளுக்கப்பால் உள்ளவைகளைப் புரிந்து கொள்ள முயன்றோம். கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்த நாள்முதல், மனிதன் உலகில் பல இடங்களையும் கண்டு பிடித்து முன்னேறி விட்டான். வடதுருவத்தையும், தென்துருவத்தையும் எட்டிவிட்டான். பூமிக்கு வெளியே உள்ள சந்திரனுக்குப் போய் வந்துவிட்டான். பிற கிரகங்களை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறான். இப்படி மனிதனுடைய விஞ்ஞான அறிவு, குழந்தை தனது சிறுவயதில் உலகைப் புரிந்துகொள்ளத் தொடங்கியதைப் போல, படிப்படியாக வளர்ந்திருக்கிறது. ஆனால், அறிவு வளர்ச்சியில் இவை முதற்படிகளே. இந்த அறிவு அவ்வளவும் ஐம்புலன்களால் உணர்ந்து (Sense – Data) சேகரித்துக் கொண்டவைகளே. இவற்றுக்கு அப்பால் ஓர் அறிவு இருக்கிறது. ''அதைத்தான் நாங்கள் தேடிக் கொண்டிருக்கிறோம். அதை இந்தியா மட்டுமே தெரிந்து வைத்திருக்கிறது; பலஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்து உலகத்தாருக்கு அளிக்க முன்வந்திருக்கிறது'' என்கிறார் மேலை நாட்டு விஞ்ஞானி கிரேவால்டர்,

இன்றைய விஞ்ஞானிகளிடையே ஒரு தத்துவம் உண்டு. எந்தக் கண்டு பிடிப்பும் நிரந்தரமானது அல்ல. தரையில்வேகமாகச் செல்ல வழி கண்டுபிடித்த பிறகு, வானத்தில் வேகமாகச் செல்ல வழி கண்டு பிடித்தான். பிறகு அதுவும் போதாது என்று விண்வெளியில் பறந்து பூமியை விட்டே செல்ல விண்வெளிக் கப்பலைக் கண்டுபிடித்தான். உடல் நோயைத் தீர்க்க மருந்துகளைக் கண்டுபிடித்தவன் இன்று உயிரின் தத்துவம் என்ன என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறான். எப்போதும் முன்னால் ஓர் அடி வைத்துச் செல்லவேண்டும். 'முன்னேறு!' என்பதே விஞ்ஞானிகளின் தாரகமந்திரம். நோர்வே நாட்டில் வடதுருவத்துக்குச் செல்ல ஒரு நூதனக்கப்பலை உருவாக்கினார்கள். அதற்குப் பெயர் என்ன தெரியுமா? 'முன்னேற்றம்' என்பதுதான்!

இந்தத் தத்துவத்தை நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் உருவான நமது உபநிடதங்களும் கூறுகின்றன.'எந்த நிலையிலும் அப்படியே நிலைத்து நின்று விடாதே! எழுந்திரு! விழித்து நோக்கு! புறப்படு!' என்பது உபநிடதவாசகம். 'அடைய வேண்டிய எல்லையை அடையும் வரை அமைதி கிடைக்காது. அதுவரை நீ உன்னையே தொடர்ந்து மேன் மேலும் ஆராய்ந்து தெளிவுபடுத்திக் கொள்!' என்று கூறுகிறது.

விஞ்ஞானத்தின் மூலம் இவ்வளவு புதுமைகளைக் கண்டு பிடித்து விட்டோம். அது போதுமா? தொட்டும், கேட்டும், பார்த்தும், சுவைத்தும் உணரக் கூடிய இந்தப் பொருள்களை நாம் புரிந்துகொள்ள வைப்பது எது? நம்முடைய மனம். அதை இயக்குவது யார்? அதன் பின்னே இருக்கும் சக்தி என்ன? அந்தப் பின்புலத்தின் தத்துவம் என்ன? இந்த ஆராய்ச்சியில்தான் இன்று விஞ்ஞானிகள் இறங்கி இருக்கிறார்கள். இதை உணராதவகையில் அவர்களுடைய ஆராய்ச்சியில் ஆழ்ந்த பண்பு (In-depth-study) கிடைக்காது என்று அவர்கள் எண்ணுகின்றார்கள். மனிதன் தனது பார்வையை உள் நோக்கித்திருப்ப விரும்புகிறான் இன்று. இதைப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது மதம்—அதன் அரிய நூல்கள் தந்த அறிவு—சாதிக்கின்றது. சுருங்கச் சொன்னால், இன்றைய விஞ்ஞானம் மனிதனைச் சுற்றி உள்ள பௌதிகநிலையை ஆராய்ந்திருக்கிறது. நமது மதம் தந்த மெய்ஞ்ஞானம் மனிதனை ஆராய்ந்திருக்கிறது. அது ஆராயமுற்பட்டது மனிதனின் தத்துவ ஞானம். (Scienc of Man).

இயற்கையில் நாம் இன்று காணும் பொருள்கள் அன்று முதல் இன்றுவரை மாறாமல் அப்படியே இருக்கின்றன. ஆனால் மனிதனோ, உலகின் கோடிக்கணக்கான ஆண்டுகள் வளர்ச்சியில் வெகுதூரம் மாறி, வளர்ந்து, முன்னேறி வந்துவிட்டான். உலகின் வளர்ச்சியில் இவ்வளவு தூரம் முன்னேறிய மனிதனையே ஒரு சோதனைப் பொருளாக்கி ஆராய்ந்து பார்க்கிறது இந்து மதம்.

''மனிதனைத் தெரிந்து கொள்ளுவது என்பது அரியகலை. அதுவும் அவனுடைய உள் மனதைப் புரிந்து கொள்ளுவது என்பது மிக நுட்பமான கலை. அதன் வெளி விளிம்பைக்கூட நமது விஞ்ஞான முன்னேற்றங்கள் இன்னும் தொடவில்லை'' என்கிறார் ஜான் ஹக்ஸ்லி. ''நம்மைச்சுற்றி உள்ளவற்றையெல்லாம் ஆராய்ந்து விட்டோம். ஆனால் நம்மையே நாம் புரிந்து கொள்ளவில்லை. அதனால் தான் நமக்கு அமைதி கிடைக்கவில்லை!'' என்கிறார் அவர்.

விஞ்ஞானி மனிதனையும் ஆராய்ந்திருக்கிறான். ஆனால் அது ஓர் அளவுடன் நின்றுவிட்டது. மனிதனின் உடற்கூறுகள், நரம்பு மண்டலங்கள், புலன்களின் அமைப்புகள் எல்லாவற்றையும் அவன் ஆராய்ந்து விட்டான். ஆனால் இவையெல்லாம் மேலாகத் தெரியும் வெளிப்படையான தோற்றங்களைப் பற்றிய அறிவேயாகும். மேலும் இவற்றையெல்லாம் இயக்குகிற உள்மனம் எப்படிப்பட்டது? உடம்பில் உள்ள கோடிக்கணக்கான அணுக்களை இயக்கும் மிகப்பெரிய சக்தி உடல் வடிவத்தில் எங்கே இருக்கிறது? அதை மனிதன் விஞ்ஞான மூலம் கண்டுபிடிக்க முடியவில்லை.

-லட்சுமி-

இந்துமதம் தந்த வேதாந்தம், முழுக்கமுழுக்க அந்த அபூர்வ ஞானத்தைப் பற்றியே சொல்லுகிறது. மனிதனுக்கும், கண்ணுக்கும் அறிவு எல்லைக்கும் புலப்படாத புதியசக்தி, அதன் புதிய வடிவம், அதன் புதிய விழிப்பு, இதை அவர்கள் எடுத்துக்கூறி இருக்கிறார்கள். அதை நாடித் தேடி உணரும் தத்துவத்தையும் விளக்கி இருக்கிறார்கள். அதன் அழிவற்ற தன்மையையும் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அழியக்கூடிய பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சியை மட்டுமே செய்தான் விஞ்ஞானி. அழிவற்ற ஆத்மாவையே ஆராய்ச்சிப் பொருளாக்கிக் கண்டுபிடித்துச் சொன்னவர்கள் நமது முன்னோர்கள். அதுவே இந்துமதத்தின் தனிச் சிறப்பு.

தன்னைத்தானே உணர்ந்து கொள்வது (sell awareness) என்பதுதான் இன்றைய விஞ்ஞானத்தின் புதிய பிரச்சினை; மிகப்பெரிய பிரச்சினை. 'மூளை எப்படி இயங்குகிறது? அதில் என்றும் அழிவில்லகமல் இயங்கும் சிந்தனா சக்தி எங்கிருந்து வருகிறது? அதை ஆக்கபூர்வமாக வளர்த்து உருவாக்குவது எப்படி?' இதையே இன்று அவர்கள் நாடுகிறார்கள். அவர்களுக்குப் புதிய ஞானமாகத் தென்படுவது இந்த ஆராய்ச்சி.

''சண்டிதேவி மகாத்மியம்' இந்த சக்தியை விவரிக்கிறது. ஐம்புலன்கள் தரும் அறிவுக்கு மேலே போய் எல்லையைத் தொட வழி காட்டுகிறது. 'நான் யார்? என்னை நான் புரிந்து கொள்வது எப்படி...? அதன்பின் நான் எப்படிச் செயற்பட வேண்டும்?' இதைச் சொல்லிக் கொடுக்கிறது? உபநிடதநூல்களும். கீதையும் இந்த ஆன்மீக வழியை நமக்குக் காட்டுபவை.

சிறுகுழந்தைக்கு அறிவு கிடைத்ததும் அதன் சக்தி பெருகி விடுகிறது. தன்னைவிடப் பல மடங்கு பெரிய மிருகங்களை அது அடக்குகிறது; மிரட்டிச் செயற்படுத்துகிறது. பார்க்கத் தெரியாமல், கேட்டுப் புரிந்து கொள்ளத் தெரியாமல், இருந்த குழந்தை, தன்னைச் சுற்றி உள்ள உலகத்தைத் தன்வசப்படுத்த முயலுகிறது. இந்த வளர்ச்சியைத் தந்தது எது? கையும், காலும், வாயும் அல்ல; மிருகங்களுக்கும் அவை உண்டு. இந்த அறிவுக்குப் பின்புலனாக இருப்பது ஆத்மஞானம். அதுவே அறியாக் குழந்தையைப் பக்குவம் பெற்ற மனிதனாக்குகிறது.

மனிதனுக்கு மட்டும்தான் இந்த வளர்ச்சி உண்டு. சிங்கமும் புலியும் உருவத்தில்தான் வளருகிறது. இந்த ஆன்மீக வளர்ச்சி அவற்றுக்குக் கிடையாது. சாதாரண உடல் அமைப்பிலிருந்து பிரிந்து வளரும் புத்திதான் மனிதனின் சிறப்பு. சிங்கத்துக்கும், புலிக்கும் அந்தப் புத்தி வளர்ச்சி கிடைத்து விட்டால், அப்புறம் மனிதன் அவற்றை மிஞ்சமுடியாது!

இரண்டாவது உலகயுத்தம் முடிந்த பிறகு பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் ஒரு கட்டுரை எழுதினார். ''உலகயுத்தம் வெற்றிகரமாக முடிந்துவிட்டது. புதிய ராட்சத இயந்திரங்கள், கருவிகள் அழிவுச் சக்தியின் மூலம் வெற்றியைத் தேடிந்தந்து விட்டன. ஆனால், மனிதனின் முன்னேற்றத்துக்கு அவை என்ன செய்ய முடியும்? இயந்திரத்துக்கு மாலை போட்டு, பெட்டுவைத்து, 'நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும் உன்னில் ஒரு பகுதியாக — ஓர் ஆணியாக ஒரு மறையாக — நானும் இயங்கவேண்டும்!' என்று மனிதன் கேட்டுக் கொள்ள முடியுமா? இயந்திரங்களின், இராட்சத சக்தியின் அடிமையான பின் மனிதனுக்கு நிம்மதி கிடைக்குமா? ஆன்மீக சக்திதான் அதற்கு வழிகாட்ட முடியும்!'' என்று அதில் குறிப்பிட்டார் ரஸ்ஸல்.

நமது வேதாந்தங்களும், உபநிடதங்களும் இந்த ஆன்மீக வளர்ச்சிக்குத் தேவையான அறிவைத்தான் கொடுக்கின்றன. 'ஆத்ம வித்யா' என்ற அந்த மெய்ஞ்ஞானம், இன்று மிக வளர்ச்சியடைந்த விஞ்ஞானத்தை விட உயர்வானது; உயிருள்ளது; மனிதனுக்கு மட்டும் அமைந்த சிறப்பான பேரறிவைப் பயன்படுத்துவது. அதனால்தான் இன்று உலகெங்கும் உள்ள மக்கள், விஞ்ஞான வளர்ச்சியின் முழுப்பயனையும் பெற்று அனுபவித்த மக்கள் மன அமைதியை அளிக்கவல்ல, இந்து மதத்தின் இந்த ஞானத்துக்காக, ஓடி வருகிறார்கள்!

நன்றி: சுவாமி ரங்கநாதானந்தாவின் 'Spiritual Life In Our Scientific Age' என்ற சொற்பொழிவு.

## தாய்ப்பால் மகிமை

தற்பொழுது தாய்மார்கள் குறுகிய காலத்திலேயே தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தி விடுகிறார்கள். இத்தகைய தாய்மார்களை நம்பியே சில மருந்துக் கொம்பனிகள் புட்டிப்பாலைத் தயாரித்து வருகின்றன.

ஒரு தாய் தனது குழந்தைக்கு சுமார் இரண்டாண்டுகள் தாய்ப்பால் கொடுக்கலாம்.ஆனால் இவர்கள் விரும்புவதில்லை. காரணம், தாய்மார்களின் மார்பழகு அழிந்துவிடுமாம்.

இப்படித் தயாரிப்பு மாவுகளை நம்பி குழந்தைகளை வளர்த்தால் குழந்தைகள் தமது பருவ காலத்தில் இயற்கையின் எதிர்ப்புச் சக்திய இழந்துவிடும்.

தாய்ப் பால் கொடுக்காத தாய்மார்களுக்கு மார்புப் புற்றுநோய் வருவதாகத் தற்போதுவரும் மருத்துவக் குறிப்புக்கள் கூறுகின்றன.

தாய்மார்களுக்கு தாய்ப்பால் அதிகம் சுரந்து வந்தால் மார்பழகு குறைந்து விடாது. தாய்ப்பால் அதிகம் சுரக்க, கிராமங்களில் வசிக்கும் தாய்மார்கள் அன்றாடம் சோறு வடிக்கும் கஞ்சியில் சிறிதளவு உப்புச் சேர்த்து நாளும் குடித்து வருகின்றனர். இதனால் குழந்தைக்குத் தேவையான அளவு பால் கிடைக்கும். மார்பழகும் குறைந்துவிடாது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தூய் வெள்ளம்

வீட்டைக் கைவிட்டு ஓடுகிறான் ஒருவன். காட்டுக்குப் போகிறானாம். தவம் செய்யப் போகிறானாம். வேடிக்கையாக இல்லையா?

2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்கூட வள்ளுவர் இதனை ஏற்கவில்லை. மனைவி மக்களை தவிக்கவிட்டு —இனியசுற்றத்தை ஏங்க விட்டு நம்பி வந்தவர்கள் எல்லோரையுமே கைவிட்டு — அவன் துறவு பூணுகிறானாம்,

தனது உருப்படியான தொழில் முயற்சி களைக் கைவிட்டு அடுத்தவருக்காகச் செய்யும் அறத்தையும் மறந்து போதலை நியாயப் படுத்த முடியுமா?

அப்படிப்பட்டவன் ஒரு சுயநலக்காரன். தனது ஆன்மமேம்பாட்டுக்காகவும் தனது நிம்மதிக்காகவும் இப்படி உலகினை நட்டாற்றில் விடுதலை அனைவரும் மேற்கொண்டால் நிலைமை என்னாகும்?

அறவழி நின்று இல்வாழ்வு வாழ்பவன் பிறவழியில்போய் பெறப் போவது என்ன? சாதிக்கப்போவது என்ன?

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போய்ப் பெறுவது எவன். —0046

குடிக்காமல் வாழ்வது சுலபம். அளவோடு குடிப்பது தான் கடினம். மனக்கட்டுப்பாடு கடும் முயற்சியே.

பாசங்களை அறுத்து ஐம்புலன்களை அடக்கி முற்றும் துறந்து தவம் செய்து விடலாம்.

இல்வாழ்வில் இயல்போடு இணைந்து முறைதவறாது அளவோடு வாழ்வது இலகுவான காரியம் ஆகாது.

'வைத்தால் குடும்பிசிரைத்தால் மொட்டை' எனஇரு அந்தங்களிலும் நிற்பது வாழ்க்கை ஆகாது. ஓர் எல்லைக்குக் கட்டுப்பட்டு அளவோடு வாழ்க்கையில் போகங்களை அனுபவிப்பது சிறந்தது. எப்படியும் வாழலாம் என நினைப்பவர்களைவிட இப்படித்தான் வாழ வேண்டும் என முயல்பவன் தலை சிறந்தவன்.

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.
—0047

—(இல்வாழ்க்கை)

—அம்பிகைபாகன்—

# இந்த வார இராசி பலன்

## [14- 02 - 1998 முதல் 20 - 02 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| சூ. வி செ புத கே | இராசிச் சக்கரம் | | |
| | | | ரா |
| வெ | | | சந் |

மாற்றம்:

14 – 2 – 1998 இல் கன்னி இராசியில் சந்திரன் மாறுகின்றார். 20– 2– 1998 இல் மகரம் இராசியில் வெள்ளி மாறுகின்றார்.

இந்தியா, இலங்கையில் அரசியல் சூறாவளியால் வடதிசைகளில் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள் தென் திசைகளில் மாற்றங்களையும் கொந்தளிப்புக்களையும் கொடுக்கும் பலன்காணப் படுகின்றது. பெண் அரசியல்வாதிகளின் செல்வாக்கு மக்கள் மத்தியில் அதிகரிக்கும். இயற்கை, செயற்கை அழிவுகளைக் கொடுக்க இடம் உண்டு. மேற்குலகம் மத்திய உலக நாடுகளான ஈராக், இஸ்ரேல், அரபுப் பிரதேசத்தில் செல்வாக்குப் பெற்று அழிவுகளை ஏற்படுத்தும். கிழக்கு நாடுகள், ரஷ்யா, சீனாபோன்றவை மேற்கு நாடுகளை எதிர்க்கும் நிலை உருவாகும். நியாயமற்ற ஏகாதிபத்திய நாடுகளின் கொள்கையால் உலக மக்கள் கவலைப் பட வேண்டிய நிலை உருவாகும்.

மேடம்: கலசம் பிறந்து தானே நியாயம் பிறக்கும். எதையும் தாங்கிச் செயற்படவும். புதிதாகத் தொடங்கும்போது கொஞ்சம் செலவுகள் கொடுக்கும். அதன் பின்பு வருமானம் வரும் பொழுது மகிழ்ச்சி தானே வரும். தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் போட்டுத்தான் பலதைப் பெறமுடியும். காசு விடாமல் நாலு பேர் ஆதரவு தந்து அலுவல்கள் நடக்குமா? கைகால் உளைவு, அதனால் வீட்டில் கோபதாபங்கள் ஏற்படும். எதிர்ப்பாலார்கள் நல்லதைச் சொல்லமாட்டார்கள். குடும்பச் சொத்துவழிகளால் புதிய செய்திகள் வரும்.

பிரயாணங்களைத் தவிர்க்கவும். பிரயாணத்தில் /கள்வரால் தொல்லைகள் ஏற்படலாம்.

★ அதிர்ஷ்டநாள்: புதன்.

இடபம்: ''தருமம் தலை காக்கும்'' என்பதற்கிணங்க உங்கள் பலவீனம், கஷ்டங்கள் தடுக்கப்பட்டு, குறைக்கப்படும் இயல்புகளை அடைவீர்கள். தொழில்ஸ்தானத்தில் நல்லதும், கெட்டதும் மாறி மாறி நடக்கும். அடிக்கடி களைப்பு, இளைப்பு, சளி, நரம்பு சம்பந்தமான ரோகங்கள் கொடுக்கும். சாப்பாட்டில் கூடிய கவனம் எடுக்கவும். நண்பர்களை நம்ப வேண்டாம். பெரியவர்கள் உதவி செய்வார்கள். வீடு, வாகனம், தொழில் ஸ்தானங்களில் மாற்றங்கள் சகஜம். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும்.

அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

மிதுனம்: இக்காலத்தில் நிதானமாக அவசரப்படாது செயற்படவும். எதிர்ப்பாலாருடன் அன்பாக நடந்து கொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் தலைக்கு மேல் வேலைகளும், பல புதிய பொறுப்புக்களும் கொடுக்கும். பொருள் விஷயங்களில் இக்காலத்தில் மிகக் கவனமாக இருக்கவும். ஏமாற்றமும், களவும் சிலருக்கு கொடுக்கும். பொருள்களில் அவதானமாக இருக்கவும். தூர இடங்களுக்குப் போவதைத் தவிர்க்கவும். தேவையற்ற விஷயங்களைக் கதைத்து வீண் உபத்திரவங்களைத் தேடிக்கொள்ளல் வேண்டாம்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

கடகம்: ஏன் அடிக்கடி கலக்கமடைகின்றீர்கள்? கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலையா? நிதானமாக செயற்படவும். எதையும் நுட்பமாகக் கிரகித்து சமாளித்துக் கொள்ளும் திறனுடைய நீங்கள் புத்தி சாதுரியமாக நடந்து கொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகிக் கருவாகும். நாம் எதையும் போராடித்தான் பெற முடியும். மனதில் உள்ளதை இரகசியமாகச் செயற்படுத்தப் பாருங்கள். படபட வெனப் பலருக்கும் சொல்லி விட்டுக் கவலைப்படுவீர்கள். அதனால் வீண் [illegible] கள் உங்களைச்சுற்றி [illegible] மிடும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி.

சிங்கம்: காலத்திற்குத் தகுந்த கோலமாகச் செயற்படுங்கள். உங்கள் காசு இல்லாவிட்டாலும் பிறரின் காசில் உங்கள் செல்வாக்கும், சொல்வாக்கும் செயற்படும். தொழில் ஸ்தானத்தில் பல பிரச்சினைகள் வந்தாலும் நீங்கள்தான் ராஜா. உங்கள் சொல்லுக்கு எவரும் தலை சாய்த்தபடி இருப்பார்கள். தலைக்குமேல் பிரச்சினைகள் அலை அலையாக வரத்தான் செய்யும். தைரியமாக எதிர் கொள்ளுங்கள். தெய்வபக்தி, சக்தி அத்தனை துன்பங்களையும் துடைத்தெறிந்துவிடும். நெஞ்சில் சளி, வயிற்றில்நோ, முதுகுவலி, உஷ்ணபீடை என ஏதாவதொரு தொல்லை நோயாக வந்து வருத்தும். வைத்தியம் செய்யுங்கள்; சுகம் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

கன்னி: எதிலும் மந்தம், தாயாருடன் போராட்டம். அடிக்கடி கோபித்தல், சோம்பேறித்தனம் மாறி மாறிஏற்படும். எதிலும்செயற்படாத்தன்மை இருந்தாலும் வருங்காலத்தில் நல்ல வாய்ப்புக்கள், நன்மைகள் கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் பெரியவர்கள் கோபிப்பர். சமாளித்துக் கொள்ளுங்கள். கொஞ்சம் நிதானமாகப் பேசிக் காரிய மாற்ற முயலுங்கள். எடுத்த வீச்சில் எல்லா அலுவல்களும் எல்லோருக்கும் நடக்காது. எமது புத்திசாதுரியத்தாலும் பிறரின் உதவிகளாலும் காரியங்கள் பலருக்குக் கை கூடுவது உங்களுக்குத் தெரியும் அல்லவா?

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

## மகாதேவா ஜோதிடம்


நல்லூர்

துலாம்: நீங்கள் இந்த வாரத்தில் எதிர்ப்பாலாருடன் நல்லமாதிரி நடக்கவும். உங்களுக்கு மறைமுக எதிர்ப்புகளைச் செய்பவர்களே உங்களைக் கண்டு பயப்படுவர். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் சகஜம். தாயாருக்கு அல்லது தாய் வழி வழியினருக்கு நல்லதல்ல. விதிவசப்பட்ட பலன்கள் சிலருக்கு சோதனை — [illegible]

(XI ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 37



சொற்சிலம்பம் இல. 37
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..................................................

விலாசம்: ..................................................

..................................................

.................. இங்கே வெட்டுக ..................

முடிவு திகதி; 20 — 02 — 1998

### இடமிருந்து வலம்

1. இது செய்யுள் தொடை. 4. நவக்கிரகங்களில் ஒன்று. 6. மாற்றம். 8. அந்தரி. 9. நிர்வகிப்பவன். 11. ஆற்றைக் கடக்க உதவும். 12. ஏச்சு. 13. மெல்ல உதவும். 16. இரண்டு. 17. தாய்ப்பாலுக்கு அடுத்தது. 20. ஏழல். 21. பழு. 22. பாண்டவரின் தாய். 23. மழை காலம்.

### மேலிருந்து கீழ்

1. பகையாளி. 2. இரும்பில் பிடிப்பது. 3. கைத் தொண்டு. 4. உழைத்துப் பெறு. 5. அழகு. 7. குதிரை. 8. மெல்லிய—தட்டையான-உலோகம். 10. நூறாயிரம். 11. வெற்றிக்கு முதல் படி. 13. பாயத் தயாராகு. 14. 'பிரேத' அல்லது 'தேய்கின்ற'. 15. ஓர் இசைப்பாட்டு வகை. 18. வெறுமன என்று பொருள்படும். 19. பாவம். செய்தவன். 20. வாதிடுபவன்.

### சொற்சிலம்பம் 35 — முடிவுகள்

**இடமிருந்து வலம்**

1. மாநகரசபை. 7. மகுடி. 8. மாங்கனி. 10 தலை. 11. கிடை. 12. நாம். 13. களி. 15. தேன். 16. வாணி. 17. வாயு. 18. வகுதி. 20. தங்கம். 21. ராகம். 23. அணில். 24. கொம்பு.

**மேலிருந்து கீழ்**

1. மாமன். 2. நகு. 3. கடிதம். 4. சமா. 5. பைங்கிளி. 6. மேனி. 9. கடை. 12. நாகு. 13. கணிதம். 14. தேயும். 15. தேவதை. 17. வாகனம். 19. திராணி. 22. கல்.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: ருக்மணிதேவி ஆறுமுகம், சிவன் வீதி, ஆவரங்கால்.

★ இரண்டாம் பரிசு: தியாகராசா சுதாமாறன், விக்ரோறியா கல்லூரி, சுழிபுரம்.

★ மூன்றாம் பரிசு: இ. கௌஷா, லவ் லேன், உடுவில், சுன்னாகம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 36 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்...

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓ! இதுதான் யாழ்ப்பாணமா? இதற்கும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் அதிக வித்தியாசம் இல்லை. இடையிடையே ஷெல்லடியில் உடைந்த வீடுகள் மதில்களையும், குண்டுவீச்சில் தரைமட்டமாகிவிட்ட வீடுகளையும் கூட அவர் பார்த்தார். அவை தென்னிலங்கையில் காணாத காட்சி.

ரோட்டுகள் சரியில்லை. புது பஸ் என்றாலும் குலுங்கிக்கொண்டுதான் ஓடியது. குண்டு குழிகளில் விழுந்து எழும்பும்போது உள்ளே இருந்தவர்கள் எல்லோரையும் ஒரு முறை தூக்கிப் போட்டது. முதலாவது கிடங்கில் பஸ் விழுந்து எழுந்த பொழுதுதான் கண்ணிவெடியில் சிக்கிவிட்டேனோ என்று சிறீசேனா கலங்கிப்போனார். அவர் மட்டுமில்லை. பஸ்ஸில் இருந்த மற்றவர்களும்தான்! பிறகு கை கால்களைத் தடவிப் பார்த்து எல்லாம் சரியாக இருக்கக்கண்டு, ஆளை ஆள் பார்த்துச் சிரித்தனர்!

தேர்தல் கடமை செய்த இடத்தில் சிறீசேனாவிற்கு யாழ்ப்பாணத் தமிழரான சிறீதரன் என்பவர் அறிமுகமானார். அவர் யாழ்ப்பாணத்தில் வேலை பார்ப்பவர். முன்பு தென்னிலங்கையில் வேலை செய்ததினால் சிறீதரனுக்கு சிங்களம் நன்றாகப் பேச வந்தது. இருவரும் அரசாங்க பாஷையிலேயே பேசிச் சிரித்து நண்பராயினர். தனது யாழ்ப்பாணம் பார்க்கவேண்டும் என்ற ஆசையை புதிய நண்பனிடம் வெளியிட்டார் சிறீசேனா.

''...சரி, தாராளமாக் கூட்டிக் கொண்டுபோய்க் காட்டுகிறேனே யாழ்ப்பாணத்தை!'' என்றார் சிறீதரன்.

''ஆமிக்காறரைக் கேட்கலாம. அவங்களுக்கு எங்களைக் கூட்டிக் கொண்டு போய்க் காட்டநேரமில்லை. இனி அவங்கள் தாங்கள் விரும்பிய இடங்களைத்தான் காட்டுவாங்கள். நாங்கள் பாக்கவிரும்புற இடங்களைக் காட்டமாட்டாங்கள். அவங்கள் இடத்துக்குப் புதுசு. இடங்களும் தெரியாது. நீங்கள் எண்டா பாக்கவேண்டிய இடங்களையும் காட்டி, அதுகள்பற்றிய விளக்கங்களையும் தருவியள்!''

''ஓம் சிறிசேனா, நான் உங்களைக் கூட்டிக்கொண்டு போய் காட்டவேண்டிய இடங்களைக் காட்டி, அது பற்றிய விளக்கங்களையும் தாறனே!''

''...நாளைக்கு ஒரு நாள் தான் யாழ்ப்பாணத்திலை நிக்கிறம். சனிக்கிழமை காலை ப்ஃபிளையிற்''

யாழ்ப்பாணம் என்ன சின்ன இடம்தானே! அதிலும் சில இடங்களுக்குப் போக அனுமதி இல்லை. நாளைக்கே எல்லா இடங்களையும் காட்டிவிடுறன்.''

''அப்ப வாகனம்?';

''...தூர இடங்களுக்குப் போகப்பயம். இனி சென்றியளும் இருக்கு. 'எங்கபோற' எண்டு கேட்டுக் கொண்டு நிப்பாங்கள். நாங்கள் கிட்ட உள்ள இடங்களாகவே பாப்பம். நான் என்ரை சைக்கிளிலை உங்களைக் கூட்டிக் கொண்டு போய்க்காட்டிறன். காலமை வெள்ளண மத்தியகல்லூரி வாசலுக்கு வாறனே. என்னை உள்ளுக்கு விடாங்கள்...''

''நீங்கள் சரியா எட்டு மணிக்கு கேற்றடிக்கு வாருங்கோ சிறீதரன். நான் வந்து உங்களைச் சந்திக்கிறன்.''

''சரி''

அடுத்தநாள் காலை சரியாக எட்டுமணிக்கு சிறீதரன் கேற்றடிக்குப் போக சிறிசேனா வந்து அவரது சைக்கிள் பாறில் ஏறிக் கொண்டார். சுற்றுலாப் பயணம் ஆரம்பமானது. முதலில் மத்திய கல்லூரிக்கும் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் இடையில் உள்ள வீதியால் போனார்கள்.

''இஞ்சைபாருங்கோ இந்த ரண்டு கல்லூரிக் சட்டிடங்கள் எல்லாம் உடைஞ்சு போச்சு!''

''திருத்திக் கொண்டிருக்கினம்''

''முந்தி எல்லாமே உடைஞ்சு கிடந்தது''

''...அப்ப பிள்ளையள் எப்பிடிப் படிச்சுதுகள்?...''

''...அந்தக் கட்டிடங்களுக்கை இருந்துதான்!''

''கெட்டிக்காரப் பிள்ளையள் தான்!...''

அடுத்து வேம்படி வீதியில் வலப்பக்கமாகத் திரும்புகின்றனர்.

''பாருங்கோ, இந்த வீதியை... எல்லா வீடுகளுமே உடைஞ்சு போச்சு ஷெல்லடிலை. பெரிய பெரிய வீடுகள். பெரிய பிரமுகர்கள் எல்லாம் இருந்த வீடுகள். இப்ப மனிசர் இருக்கேலாது!''

இவற்றில் மனிதர்கள் வாழ முடியாது என்று சிறீதரன் சொன்னாரே! இங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே மக்கள் இந்தக் கூரை இல்லாத வீடுகளில்? காய்ந்து கறுத்தமேனிகள், பரட்டைத் தலைகள், அழுக்கேறிய கந்தல் ஆடைகள், ஆடைகளே இல்லாத குழந்தைகள்... அந்த கந்தல்களைத் தோய்த்து காற்றில் பறக்கக் கட்டி விட்டிருக்கிறார்கள்.

,,இவர்கள் யார்?...''

''இவர்கள்தான் அகதிகள்! முந்தி சொந்த வீடு வாசல்லை இருந்து கௌரவமாகத் தொழில் செய்து பிழைத்தவர்கள். அந்த இடங்களை ஆமி பிடிச்சதாலும், வீடுகள் உடைஞ்சு போனதாலும், போக இடமில்லாமல் இஞ்சை வந்து இந்தக் கூரை இல்லாத வீடுகளிலை குடியிருக்கிறார்கள்! காற்றில் பறக்கிற இந்தக் கந்தல்கள்தான் அவர்களுடைய தேசியக்கொடி! அகதிகள் இருக்கிறார்கள் எண்டதுக்கு அடையாளம்''

இப்படியும் மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா, சிறீலங்காவில்? சிறீசேனா வாயடைத்துப் போனார்.

சைக்கிள் கண்டி வீதிச் சந்தியைச் சென்றடைகிறது.

''...இதென்ன கட்டடங்கள்ஒண்டையும்காணேல்லை. எங்கும் இடிபாடுகளும் அழிவுகளும், எனக்கு இரண்டாம் உலக மகா யுத்தத்துக்குப் பிறகு ஜேர்மனியை எடுத்த படங்கள்தான் ஞாபகம் வருது!''

''...இஞ்சை போர் நடந்து கொண்டிருக்கு. இதுகளெல்லாம் போரினால் அழிஞ்ச இடங்கள்!''

சைக்கிளை வலப்பக்கமாகத் திருப்புகிறார் சிறீதரன்.

''...இதென்ன யாழ்ப்பாணத்தைக் காட்டுறன் எண்டு சொல்லீட்டு, ஒரு காட்டுக்கை கூட்டீட்டுப் போறியளே? நான் யாழ்ப்பாணத்திலை காடே இல்லை எண்டல்லவோ கேள்விப்பட்டிருந்தன். இஞ்சை பாத்தாச் சரியான காடு, புதர்கள், செடி கொடியள், புல்,பூண்டுகள்...?''

''மிஸ்ரர் சிறீசேனா; யாழ்ப்பாணத்திலை உள்ள முக்கியமான இடங்களைத் தானே உங்களுக்குக் காட்டுறம் எண்டு சொன்னனான்? இதுதான் யாழ். நகரின் இருதயம். அழகான முக்கியமான கட்டடங்கள் எல்லாம் இஞ்சைதான் இருந்தன முன்னொரு காலத்திலை. யாழ்ப்பாணத்தைப் பாக்க விரும்புறவை எல்லாரையும் கட்டாயமாகக் கூட்டியந்து இந்த இடத்தைக் காட்ட வேணும்...''

''...அப்பிடியா? அப்ப பாப்பம்...''

''இதிலைதான் எங்கடை மியூசியம் (தொல்பொருட் காட்சியகம்) இருந்தது. இப்ப அது எங்கை எண்டே தெரியேல்லை''

கொழும்பில் உள்ள பெரிய மாடிக் கட்டடமும் அதில் உள்ள பொருள்களும் சிறிசேனாவின் மனக் கண்ணில் தெரிந்தன.

''...இதுக்குப் பக்கத்திலை தான் எங்களுடைய நீதிமன்றங்கள் இருந்தன...''

''...எத்தனை மாடிகளைக் கொண்ட எவ்வளவு வசதியான கட்டடங்கள் கொழும்பில்!'' என்று எண்ணிப் பாராமல் இருக்க முடியவில்லை சிறீசேனாவால்.

''...இது எங்களுடைய மாநகர மண்டபம்.''

''மாநகர மண்டபமா? அத்திவாரத்தைக் கூடக் காணேல்லையே!''

கொழும்பு ரவுண் ஹோலுக்கு அடுத்தபடி பெரிய அழகான நகர மண்டபம் இதுதான்! போராலை எங்களுக்கு நகர மண்டபமே இல்லாமல் போச்சு! நகர மண்டபத்துக்கு முன்னாலை யாழ்ப்பாணத்தின் ஒரே ஒரு பூங்கா! சுப்பிரமணியம் பூங்கா.''

''பூங்காவா? இது காடல்லோ? மரங்களும் செடி கொடியளும் பற்றையளும்...?''

''முந்திப் பூங்கா; இப்ப காடு!''

''இதென்ன இந்தத்தூண். கம்பீரமாக உயர்ந்து நிக்குதே!,'

இதுதான் தந்தை செல்வா (எஸ். ஜே. வி. செல்வநாயகம்) நினைவுத் தூண்! இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலை இருந்து தமிழரது சுதந்திரத்திற்காகத் தொடர்ந்து பாடுபட்டவர் அவர். அதாலை தான் நாங்கள் அவருக்கு நினைவுத் தூண் நிறுவிவைச்சிருக்கிறம். இதைப் பாத்த மாத்திரத்திலை எல்லோருக்கும் அவருடைய ஞாபகம் வரும்'''

''......அதிலை ஒரு பழைய கட்டிடம் தெரியுதே! அது என்ன?''

''...அதுதான் யாழ்ப்பாணக் கோட்டை. போத்துக்கீசர் கட்டியது. ஒல்லாந்தர் இருந்து ஆண்டது. பாக்கப் போறியளா?''

''...வேண்டாம் அது காலனித்துவ ஆட்சியின் சின்னம்!''

''...இதிலைதான் யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையம் இருந்தது. இப்ப அடித்தளம் மட்டும்தான் இருக்கு.''

''...நல்லது, அங்காலை போகலாம்.''

''இனித்தான் முக்கியமான கட்டடம். வரலாற்றுப் புகழ் பெற்ற யாழ்ப்பாண நூல் நிலையம்!''

ஓ! இது தான் 1981 ஆம் ஆண்டு யூ. என். பி. அரசாங்கத்தாலை எரிக்கப்பட்ட நூல் நிலையமா?

''...அதேதான்!''

''...இதை எங்களுடைய அரசாங்கம் திரும்பவும் அமைச்சுத்தாறம் எண்டு சொல்லுதே?''

''பேப்பரிலை நிறைய எழுதப்படுது. வானொலியிலையும், ரி. வி. யிலும் தினமும் சொல்லப்படுது. ஆனா இதுவரைலை ஒண்டும் நடக்கேல்லை. அரசாங்கம் ஒரு வேளை கட்டிடங்களைத் திருத்தி, நூல்களையும் வாங்கிப்போடக் கூடும். ஆனா அழிந்துபோன நூல்கள் போனவைதான்! இது வெறும் கட்டிடங்களும் புத்தகங்களும் இல்லை. இது எங்களுடைய மார்பிலை விழுந்து விட்ட பலமான அடி. இதை எங்களாலை லேசிலை மறக்கமுடியாது!''

''விளங்குது! விளங்குது சிறீதரன்! எங்கடை பகுதியிலும் நூல் நிலையங்கள் இருக்கு. நானும் புத்தகங்களை வாசிக்கிறனான்!''

''இதுதான் யாழ்ப்பாணத்தின் திறந்தவெளி அரங்கு. இதிலைதான் நல்ல கலை நிகழ்ச்சியள் எல்லாம் நடக்கிறது. இலங்கையின் அரசியல் தலைவர்கள் எல்லோரும் இந்த மேடேலை ஏறிப் பேசியிருக்கினம்.''

''இப்ப வெறும் இரும்புக் கம்பியளும் தகரங்களும் தான் இருக்கு?''

சைக்கிள் ஓடிக் கொண்டிருக்கிறது.

''இது யாழ்ப்பாண விளையாட்டரங்கம். இது முனியப்பர் கோயில். இது றீகல் தியேட்டர். யாழ்ப்பாணத்து இளைய சந்ததிக்கு சினிமாத் தியேட்டர், தியேட்டரிலை படம் காட்டுறது எப்படிஎண்டதுகளெல்லாம் தெரியாமல் வந்துட்டுது!''

...அப்பிடியா? பெரிய அதிசயம்தான்!...''

''...இது தான் வீரசிங்கம் மண்டபம். இதிலும் பல கலை விழாக்கள், அரசியல் இலக்கியக் கூட்டங்கள், மாநாடுகள் நடக்கிறது வழக்கம். இப்ப எல்லாம் கரிக்கட்டிகள்!',

''இதென்ன ஒன்பது தூண்கள் நட்டிருக்கு?''

''1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலை அகில உலக தமிழாராய்ச்சி மாநாடு நடந்தது. இந்த இடத்திலை நடந்த கூட்டத்திலை பொலீசார் பூந்து அடிச்ச அடிலை ஒன்பது பேர் செத்துப் போனார்கள். அவங்களுடைய ஞாபகார்த்தமாகத் தான் இந்தத் தூண்கள் நடப்பட்டிருக்கு.''

''இதென்ன ஒருபாரிய கட்டடத்தின் அழிவுகள்!''

,'இதுதான் எங்களுடைய பெரிய தபால்கந்தோர். சிறீலங்கா அரசாங்கங்கள் எங்களுக்கு ஒரு கச்சேரி, ஒரு தபால் கந்தோர், ஒரு புகையிரத நிலையம் எண்டு மூன்று பெரிய கட்டடங்களைத்தான் தந்தன. புகையிரத நிலையமும் குண்டுபோட்டு அழிஞ்சு போய்க் கிடக்கு. போய்ப் பாக்கப் போறியளா?''

''வேண்டாம்! வேண்டாம்! இதைப் பார்த்ததே போதும்!''

ஓ... இது என்ன? அதே காட்சிகள், காய்ந்து உலர்ந்த மனிதர்கள். எண்ணெய் காணாத தலைகள். அழுக்கு ஆடைகள். அரை நிர்வாண மனிதர்கள். முழு நிர்வாண குழந்தைகள்... வரிசையாக உடைந்து கிடக்கின்ற கடைகளில் குடும்பம் நடத்துகிறார்கள். விறகு கொத்துகிறார்கள். சோறு சமைக்கிறார்கள், ஆடை தோய்க்கிறார்கள், சண்டைகள் பிடிக்கிறார்கள்.. மனிதர்கள் மட்டுமா? ஆடு, மாடுகள், நாய், பூனைகள், கோழிகள்...''

,'இது என்ன சிறீதரன்?''

''இது ஒரு மினி அகதி முகாம். இருக்க வீடில்லாதவர்கள் எல்லாரும் வந்து இந்தக் கடைக் கட்டடங்களில் குடியேறீட்டார்கள்...''

''இவர்களையெல்லாம் மீளக்குடியேற்றி விட்டதாக அரசாங்கம் சொல்லுதே?''

''இவர்களை யாரும் குடியேற்றேல்லை. அவர்கள் தாங்களாகவே வந்துஇதிலை குடியேறீட்டார்கள். இதிலும் பாக்கப் பெரிய அகதி முகாம்களெல்லாம் இருக்கு. ஆயிரக்கணக்கான அகதியள் வாழுற இடங்கள். பெரும் கொட்டில்கள். மூண்டுவரியமாக வேயப்படாத கொட்டில்கள்! பாக்கப் போறியளா?''

''வேண்டாம். இந்தக் காட்சிகளையே பாக்கச் சகிக்கேல்லை. பிறகு அந்தக் காட்சியள் எல்லாம் நினைவிலை கிடந்து மனதை உறுத்தும். இரவைக்கு நித்திரையும் வராது. இதே சகிக்கேல்லை. நாற்றம் மூக்கைத் துளைக்குது. வாருங்கோ கெதியா அங்காலை போயிடுவம்.''

சத்திரத்துச் சந்தியால் சென்றிதாண்டிக் கிழக்குப் பக்கம் திரும்புகின்றனர்.

''ஓ! இது தான் யாழ்ப்பாணநகரின் சந்தையா? எங்கள் நாட்டுகிராமப் புறச் சந்தை மாதிரியல்லோ இருக்கு?''

''முந்தி இதிலையும் ரண்டு பெரியசந்தைக் கட்டிடங்கள் இருந்தன. 77இலும் 81 இலும் பொலீஸ்காறர் அதுகளை இடிச்சுட்டாங்கள். அதன் பிறகு இப்பிடித்தான்! இஞ்சைபாருங்கோ! இதுதான் எங்களுடைய நவீன சந்தை!''

''அது கூட உடைஞ்சு தொங்குதே!''

''குண்டுபோட்டவர்கள் சரியாகப் போடாததாலை, ஒரு பகுதி உடைஞ்சு தொங்குது! சரியான இலக்காகப் போட்டிருந்தா, குறை சொல்ல இடமிராது! கட்டிடமே சரி.''

முதல் முறையாக சிறிதரன் சிரித்தான்.

''ஓ! இது தான் யாழ்ப்பாணத்தின் பஸ் நிலையமா? புத்தம் புது பஸ்களோடை அழகாய்

(XI ஆம் பக்கம் பார்க்க)

---

# துன்பப்பட...

(V ஆம் பக்கத் தொடர்)

ளால் நாவற்குழியை வந்தடைய முடிந்தது. சாதாரண நாளாக இருந்திருந்தால் ஒரு இரண்டு மணிநேரமே போதுமோ...

நாவற்குழியில் வைத்து ஒரு சைக்கிள்காரனை வாடகைக்குப் பிடித்து விட்டாள். அப்பாவை அதில் ஏற்றி சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இறக்கி விடும்படி சொன்னாள். பாடசாலை வந்து அவள் அப்பாவுடன் சேர்ந்து கொண்டபோது மீண்டும் நள்ளிரவுப் பொழுதாகிப் போனது. சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் போய் இருக்கும்படி யாழ்ப்பாணத்தில் வைத்து அவன் சொல்லிவிட்டிருந்தான்.

சிறியதோர் இடம்பிடித்து அப்பாவை அதில் உறங்க விட்டு, இரவு முழுவதும் அவள் விழித்திருந்தாள். அவர் உறங்குவதாகத்தான் அவள் நினைத்துக்கொண்டிருந்தாள். ஆனால் ...விடிந்ததும்...அவர் எழுந்திருக்கவில்லை!

எப்படியோ அவன் வந்து சேர்ந்ததும்... அப்பாவின் காரியங்களைக்கனகச்சிதமாக நிறைவேற்றி வைத்ததுவும்... எல்லாம் கனவில் நடப்பவை போல நடந்தேறின. அப்பாவுக்கு ஆண் வாரிசு இல்லாத குறை அன்றவனால் தீர்ந்தது.

தனக்கு அறிமுகமானதோர் குடும்பத்துடன் அவள் தங்குவதற்குரிய ஏற்பாட்டினை செய்து கொடுத்தான். அச்சமயத்தில் மீண்டும் ஒரே ஒரு தடவைதான் அவன் சங்கீதாவைக் கண்டு பேசியிருந்தான். அவளது இருப்பிட வசதி குறித்து விசாரித்தான். தளராத மன உறுதியே தடம்புரளாத வாழ்வுக்கு வழி என்றான். சமாதானம் என்றால் சண்டை, சண்டைதான் சமாதானம் என்று சொல்லி அவளைச் சிரிக்க வைக்க முயற்சி செய்தான். அவளால் சிரிக்கமுடியவில்லை.

சிறிய மீன்களைப் பேரிய மீன்கள் விழுங்கி விடுவதைப் போல் சிறு துன்பங்களைப் பெருந்துன்பங்கள் விழுங்கி விடுமென்றும், தன் துன்பங்கள் என்பது சிறு மீன்கள் போன்றவையென்றும் நாட்டின் அவலமான போர்ச் சூழலே பெரிய திமிங்கிலம் என்றும் அவள் நினைத்தாள்.

இயேசு நாதரும் மனுக்குலத்தோரின் மீட்புக்காகவே தான் துன்பப்பட்டு சிலுவை சுமந்து மரித்தார்.

உயிர்த்த ஞாயிறாக அவன் தந்து சென்ற பாடல்கள் அவளிடம் உண்டு.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்...

(X ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கே!''

இதுவரையும் அழிவுகளையே பார்த்துக் கொண்டு வந்த சிறீசேனாவின் கண்களுக்கு இந்தக் காட்சி அழகாகத் தெரிந்ததில் வியப்பில்லை.

''அழகா? இந்த இடமும் முந்திப்பெரிய கிடங்காகத்தான் இருந்தது. மழை காலத்திலை குளம் மாதிரித் தண்ணிநிற்கும். அந்தக் குளத்துக்கைதான் பஸ்கள் வந்து நிக்கும். மக்கள்நீந்திப் போய் அவற்றில் ஏறுவார்கள்! இந்தப்போர் வந்தது. நல்லதாப் போச்சு. உடைஞ்ச வீடுகள். மதில்கள், கட்டங்களின், கல்லுகள், மண்கள் எல்லாத்தையும் அள்ளியந்து போட்டு குளத்தை நிரவி, தங்குமிடங்களையும் கட்டி விட்டிருக்கிறார்கள்.''

''பஸ் நிலையத்தைச் சுற்றிக் கம்பி அடிச்சிரிக்கே? அது ஏன்?''

''இஞ்ச வாற பயணியள் சிலபேர் இதில் போவது சங்கடம் எண்டு தப்பி ஓடப் பாப்பினம். அப்பிடி ஓடுறவையைத் தடுக்கிறத்துக்குத்தான் கம்பி வேலியள். இஞ்ச வாறவை இந்த பஸ்களிலை ஏறாமல் தப்ப முடியாது''.

இப்பொழுது முதல் முறையாக சிறீசேனாவும் சிரித்தார்.

''முக்கியமான இடங்கள் முடிஞ்சுதா? அல்லது இன்னும் ஏதாவது இருக்கா பாக்க?''

''இன்னும் ஒரு இடம் இருக்கு, இதுதான் அது. எங்களுடைய பெரியாஸ்பத்திரி.''

''பெரியாஸ்பத்திரி சின்ன இடமாயிருக்கே!''

''கொழும்பு ஆஸ்பத்திரியோடை ஒப்பிட்டுப் பார்த்தா, சின்ன இடம் தான். ஆனா அதுதான் எங்களுக்குப் பெரியாஸ்பத்திரி!''

''மற்ற இடங்களோடை பாக்கேக்கை, இது உடையாமல் பத்திரமாய் இருக்கு''

''உடையாமல் இருக்கா? என்று கேட்க சிறீதரன் ஒரு முறை சிரித்துவிட்டு சொன்னான். ''நாங்கள் சாவகச்சேரிக்கு இடம்பெயர்ந்து போட்டுத் திரும்பிவரேக்கை இந்த ஆஸ்பத்திரிலை உடையாத இடமே இல்லை! பல கட்டடங்களுக்குக் கூரை இல்லை. இப்ப திருத்திட்டினம். இன்னும் திருத்திக் கொண்டே இருக்கினம்!''

''அப்பிடியெண்டா, நோயாளர்கள்''

''அவையும் அதுக்கைதான். நோயாளர்கள் ஆஸ்பத்திரிக்குப் போகாமல் வேறை எங்கை போவார்கள்?

''ஒரு முறை நகர் வலம் வந்தாச்சு. முக்கியமான இடங்களையெல்லாம் காட்டிட்டன். இவ்வளவும் போதுமா? அல்லது புகையிரத நிலையம், கச்சேரி எண்டு இன்னும் ஏதும் பாக்கப் போறியளா?';

''போதும் எண்ணம் போதும்! இதுக்கு மேலை உள்ளமும், உடலும் தாங்காது. மிஸ்ரர் சிறீதரன் இவ்வளவு தூரம் மினைக்கெட்டு என்னைக் கூட்டிக் கொண்டு உலாத்தியாழ். நகரைக் காட்டினதுக்கு நன்றி! உங்களுக்கு நான் ஒரு ரீ வாங்கித் தர வேணும். வாருங்கோ!''

''ரீ என்னத்துக்கு இப்ப?''

''நானும் களைச்சுப் போனேன். ரீ குடிக்க வேணும் வாருங்கோ!''

ஒரு தேநீர்ச்சாலைக்குள் பே யிருந்து ரீ குடித்தார்கள். அதன் பின்பக்கம் உடைந்து திருத்தப்படாமல் இருந்தது. ரீ குடிக்கும் பொழுது சிறீதரன் கேட்டான்.

''யாழ்ப்பாணம் எப்பிடி இருக்கு மிஸ்ரர் சிறிசேனா?''

''படுபயங்கரமாயும் பரிதாபமாயும் இருக்கு. அது இப்பிடி இருக்கும் எண்டு நான் எதிர்பாக்கேல்லை. ஆனா இதுகளையெல்லாம் திருத்தி, யாழ்ப்பாணத்தை திரும்பவும் கட்டி எழுப்ப அரசாங்கம் திட்டம் போட்டிருக்கு!''

''நாங்கள் திரும்பி வந்து குடியேறியும் இரண்டு வருசமாகப் போகுது. இன்னும் ஒண்டும் நடக்கேல்லை''

''இப்பதானே எலெக்ஷன் முடிஞ்சிருக்கு! இனித்தான் எல்லாம் நடக்கப் போகுது''

''யாழ்ப்பாணத்தைதிரும்பவும் பழையபடி கட்டி எழுப்புறதானா கோடிக்கணக்கிலை வேணும். அரசாங்கத் திட்டை அவ்வளவு காசிருக்கும் எண்டு நான் நினைக்கேல்லை. போரை நிறுத்தினா சில வேளை காசு கிடைக்கக்கூடும்.''

''போரை முடிவுக்குக் கொண்டு வந்து, அழிவுற்ற நாட்டைத் திரும்பவும் கட்டி எழுப்புறதுதானே அரசாங்கத்தின்ரை திட்டம்? நீங்கள் வானொலி, ரி. வி. கேக்கிறதில்லையா மிஸ்ரர் சிறீதரன்?''

''கேளாமல் இருப்பனா? ஒவ்வொரு நாளும் கேக்கிறனே! அப்பிடிச் செய்தா எங்களுக்கும் சந்தோஷம் தான்!'

''சரி போட்டு வாறன் மிஸ்ரர் சிறீதரன். யாழ்ப்பாணத்தைக் காட்டினதுக்கு நன்றி!''

''மிஸ்ரர் சிறிசேனா! நானும் உங்களுக்கு நன்றி சொல்ல வேணும். இவ்வளவையும் காட்டச் சந்தர்ப்பம் தந்ததுக்கு. நீங்கள் பத்திரமாய் வீடுபோய்ச் சேர எனது நல்லாசிகள்;''

கைகூப்பி விடை பெற்றுக் கொண்டனர்.

அன்று அவர் பாத்த காட்சிகள் சிறீசேனாவின் மனத்திரையில் இருந்து மறைய மறுத்து விட்டன. மனச்சாட்சி உறுத்திக்கொண்டிருந்தது!

இவ்வளவையும் நாங்களா செய்தோம்? நாங்களா செய்தோம்?

''நீங்கள் செய்த பாவங்களின் பலன்களை நீங்களே அனுபவிக்க வேண்டும்'' என்று புத்த பகவானே சொல்லியிருக்கிறாரே! அப்படியானால் இவ்வளவு பாவங்களுக்கும் "எவ்வளவை அனுபவிக்க வேண்டும்''

புத்த பகவனே!! புத்த பகவானே!!

அன்றிரவு அவருக்கு நித்திரை வரவில்லை; அழுகை தான் வந்தது!

(யாவும் கற்பனை)

# இந்த வார இராசி...

((VIII ஆம் பக்கத் தொடர்)

செலவுகள் அதிகரிக்கும். பொருளால் தடுமாற்றங்கள் ஏற்படும் நிதானமாகச் செயற்படவும்.

★ அதிர்ஷ்ட நாள்; திங்கள்.

விருச்சிகம்: உங்களின் தன்னம்பிக்கையே உங்களை வழி காட்டும். உலகத்தவர்கள் மதிக்க வேண்டும் என எதிர்பார்த்து நீங்கள் எந்தச் செயற்பாடுகளையும் செய்வதில்லையே! உள்ளத்தில் நல்ல, உறுதியான உள்ளம் கொண்ட உங்களை எவரும் அறியமாட்டார்கள். தொழில் ஸ்தானத்தில் ஒரு திட்டத்துடன் முன்னேறி வருவீர்கள். பெரியவர்கள், மேலதிகாரிகள் உதவுவார்கள். கைகால் உளைவு, உஷ்ண வியாதிகளால் அடிக்கடி பிரச்சினைகள் கொடுக்கும். அடிவயிற்றில் நோவிருந்தால் தவறாது வைத்தியம் செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

தனுசு: பசிக்கு உதவாத ஆகாரமும், ஆபத்துக்குதவாத நண்பனும் இருந்தாவென்ன? இல்லாது விட்டால் என்ன? என அடிக்கடி சிந்திக்க நேரிடும். அயலவர்களால் வேதனை வரும். எதிர்ப்பாலாரால் நன்மைகள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் திசைமாற்றங்கள் ஏற்படும். முன்பெல்லாம் போற்றியவர்கள் இப்பொழுது கருத்துக் குழப்பங்களைத் தருவர். கூடி இருந்தோரில் சிலர் விலக நேரிடும். குடும்பத்தினரின் சுப மங்களப் பேச்சுக்களாலும், அவர்களது அலுவல்களுக்காகவும் அதிக அலைச்சல் பட நேரிடும். வயிற்றுநோ, சளி, வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். எதிர்ப்பாலார்கள் எதிர்பாராத விதமாக உதவுவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

மகரம்: வாக்குக் கலக்கமும் —கொடுக்கல் வாங்கலில் பிரச்சினைகளும் காட்டுகின்றது. ''கடன்பட்டார் நெஞ்சம்'' போன்று அடிக்கடி கலக்கமுற நேரிடும். தொழில் ஸ்தானத்திலும் நல்ல அபிப்பிராயங்கள் ஏற்படும். பொருள்தட்டுப்பாடு மனக்கஷ்டங்களைக் கொடுக்கும்; உடம்பில், சாப்பாட்டில் கவனம் எடுக்கவும். இடமாற்றங்கள்மனச்சாந்தியைக் கொடுக்கும். அடிக்கடி ஆலயத்திற்குச் சென்று வாருங்கள். அதனால் மனச் சாந்தி ஏற்படும். பிறர் அலுவல்களில்நிதானமாகச் செயற்படல் வேண்டும். அல்லது வீண் பிரச்சினைகளால் மனம் வருந்த நேரிடும்.

★ அதிர்ஷ்ட நாள்; சனி.

கும்பம்: அதிக யோசனை மாறிமாறிக் கொடுக்கும். உங்களை இதுவரை பீடித்திருந்த கஷ்டங்கள் விலக இடம் உண்டு. ஆயினும் நீங்கள் மனம் குழம்பியபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் மந்தநிலை ஏற்படும். உஷ்ண பீடைகள் கொடுக்கும் — கைகால் உளைவு, சளிவருத்தம், நரம்புவியாதி, வயிற்றுநோ என்பன மாறி மாறிக்கொடுக்கும். பொருள் விஷயத்தில் அவதானமாக இருக்கவும். கள்வர் பயம்உண்டு. கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருபவர்கள் அயலவர்கள். அவர்களுடன் அன்பாகஇருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

மீனம்: மனச்சலிப்பா? விதி வழிப்பலனா? ஏன் இந்த நிலையென அடிக்கடியோசிப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் காணப்படுகின்றன. ஆயினும் முழுமையாக எவரையும் நம்பமுடியாது. இடமாற்றங்கள் நன்மைதரும். உடல் நோ, மந்தநிலை, எந்தக் காரியத்திலும் ஒரு சலிப்புநிலை ஏற்படும். நிதானமாக இருக்கவும். குல தெய்வ வழிபாடு முக்கியமாகும். குடும்பச் செலவு. அல்லது புத்திரருக்காகவோ, சகோரதங்களுக்காகவோ அதிக செவுகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு.

# முன்னேறி வரும்..

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

பாலுறுப்புப் பிரதேசங்களில் ஏற்படும் நுண்ணிய மாற்றங்களை அவதானித்து உடனுக்குடன் சிகிச்சை பெறுவது அவசியமாகிறது. அந்த அறிகுறிகள் மாறும் வரை உறவினைத் தவிர்ப்பதும் சிறந்தது.

காப்புறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இந் நோய் ஆபத்துக்களை முற்றாகத் தவிர்த்துவிடலாம் என்ற கருத்துக்கள் தவறானவை.

வெளிப் பார்வைக்கு எல்லாம் கவர்ச்சியாகவே இருக்கும். எதிர்ப்பாலாரைக் கவர்வது இயற்கை அமைத்துத் தந்தவிதி. அந்தக் கவர்ச்சியை அனுபவிப்பது பார்வையோடும் பேச்சோடும் நின்று கொண்டால் சரி. அதற்கு மேல் ஆழ இறங்கிட வேண்டின் அதிகம் சிந்தித்துத் தான் ஆகவேண்டும். அவர்களின் பாலியல் வரலாற்றுப் பின்னணியில் ஒரு சரித்திரம் ........ இருக்குமோ ........ எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? எந்த பக்ரீரியா, வைரசுக்கள் வாழுமோ?



இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் சமீபத்தில் அவரது மாளிகையில் வைத்து இமாசலப் பிரதேச கிராமிய நடனக் கலைஞர்கள் சந்தித்தனர். குள்ளரான கலைஞர் ஒருவருடன் கைகுலுக்குவதில் மகிழ்ச்சியடைகிறார் ஜனாதிபதி.

## விடைகள்

IX ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் வெளியான புதிர்களுக்கான விடைகள் வருமாறு;-

### குருவியும் ஏமாந்த கழுதையும்

★ முதலில் நெற்பயிர்.
★ இரண்டாவது கச்சான்.
★ மூன்றாவது கரும்பு.

### கணக்கில் நீங்கள் புலியா?

1) 4368 அல்லது 2034.
2) 9 ஆடுகள், 18 கோழிகள்
3) 21 மீற்றர்.
4) 27, 25. 18, 16, 14 ரூபா.

### உங்களுக்குத் தெரியுமா?

1) 14 முக்கோணங்கள்.
2) 35 முக்கோணங்கள்.
3) 50 முக்கோணங்கள்.

### கண்டுபிடியுங்கள்

1) அகராதி
2. மிதிவண்டி
3) விடுகதை
4) ஆகாயம்
5) கடிகாரம்
6) அம்புலி

### வார்த்தை விளையாட்டு

குவி, கதிரை, விதி, குதி, சந்தை, விரை, குரை, சக, விகுதி, குந்தி, சதி, குதிரை, சரை, தரை, கதை, சந்தி, தந்தை, கந்தை, சந்ததி, தவி, கவி, தை, தகுதி, கதி, விந்தை. தரு, கரை, விதை, திரை, திதி.

# தொடுகை...

(VII ஆம் பக்கத் தொடர்)

யில் பயன்படுத்த வேண்டும்; தொடுகையின் எல்லையை உணரவேண்டும். சிலவகைத் தொடுகைக்கு மற்றவரின் அனுமதியைப் பெறவேண்டியிருக்கும் அல்லது எமது வேண்டுதலைத் தெரிவிக்க வேண்டியிருக்கும். மருத்துவர் நோயாளியைப் பரிசோதிக்கும்போது தொடுதல் தவிர்க்கமுடியாததொன்று. இங்கு நோயாளியின் ஒத்துழைப்பு முக்கியமானது.

★

# சுஹார்ட்டோ...

(II ஆம் பக்கத் தொடர்)

இவர்களில் 425 உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிப்பு மூலம் மக்களால் தெரிவு செய்யப்படுகின்றனர். ஏனைய 575 பேரில் ஒரு பகுதியினர் இராணுவத்தில் இருந்தும் ஏனையோர் ஒவ்வொரு மாகாணத்தில் இருந்தும் சமுதாய மட்டத்தில் இருந்தும் ஜனாதிபதியால் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

ஆகவே தற்போதைய அரசமைப்பு உள்ளவரை ஆளும் கோல்கார் கட்சி (GOLKAR) எவரை ஜனாதிபதியாக நியமிக்கின்றதோ அவரே ஜனாதிபதியாக இருக்க முடியும்.

எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறும் தேர்தலிலும் சுஹார்ட்டோ போட்டியின்றி வெற்றி பெறலாம் என்றே நம்பப்படுகிறது.

அரசுக்கு தெரிவிக்கும் எதிர்ப்பின் அடையாளமாக சில சமயம் எதிர்க்கட்சிகள் சுஹார்ட்டோவுக்கு எதிராக வேட்பாளர் எவரையாவது நிறுத்தலாம்.

அவரை எதிர்த்து நிற்கக் கூடியவர் மேகவதி சுகர்ண புத்ரி (MEGA WATI SUK—ARNO PUTRI) மட்டுமே.

ஆனால் அவரது புதிய கட்சிக்கு இதுவரை இந்தோனேசிய தேர்தல் கமிஷனரின் அங்கீகாரம் கிடைக்கவில்லை.

PPP எனப்படும் இஸ்லாமியக் கட்சி அல்லது சுகர்ண புத்ரி முன்னர் தலைமை வகித்த இந்தோனேசிய ஜனநாயகக்கட்சி ஆகியவற்றில் ஒன்று அவரை வேட்பாளராக நியமித்தால் மட்டுமே அவர் போட்டியிட முடியும்.

இந்தோனேசியாவில் முன்னர் பதவியில் இருந்த சுகார்ணோ கடும் சுகவீனம் அடைந்திருந்த சமயம் 1965 - 66 களில் கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர். அச்சமயம் சுஹார்ட்டோ ஆட்சியைக் கைப்பற்றினார். சுகார்ணோ தீவிர சீன ஆதரவாளராக இருந்ததாலும் பிராந்தியத்தில் அமெரிக்க நலன்களுக்கு இடையூறாக இருந்ததாலும் அமெரிக்காவின் முழு ஆதரவு சுஹார்ட்டோவுக்கு அப்பொழுது இருந்தது.

தற்பொழுது வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டிக்கு முடிவு கட்டப்பட்டு விட்டதால் சுஹார்ட்டோவைக் கைவிடும் நிலையிலேயே அமெரிக்கா இருக்கிறது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல்களைத் தொடர்ந்து மாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்படுமா?

## களத்தில் குதிக்க தமிழ்க்கட்சிகள் தயாராகின்றன

இப்போதுதான் தேர்தல் சூடு தணிந்து ஆறிவரும் யாழ். குடாநாட்டில் மீண்டும் தேர்தல் சூடு களை கட்டுவதற்கு கால்கோள் இடப்படுவது போல் தெரிகின்றது.

உள்ளூராட்சித் தேர்தல் முடிந்து விட்டது: இனி மாகாணசபைத் தேர்தல்களாம்!

வடக்கு — கிழக்கு மாகாணம் கடந்த எட்டு ஆண்டுகளாக ஆளுநரால்தான் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. வரதராஜப்பெருமாள் தலைமையிலான மாகாணசபை 1990 இல் கலைக்கப்பட்டது முதல் இதுதான் நிலைமை. ஆகவே இப்போதைய நிலைமையில் வடக்கு — கிழக்கு மாகாணசபைக்கு தேர்தல் நடத்த வேண்டிய அவசரம் ஏதும் அரசுக்கு திடீரென எழுந்து விடவில்லை. என்றாலும் எதிர்வரும் ஜூனுக்கு முன்னர் வடக்கு — கிழக்கு மாகாணசபைக்குத் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை உருவாகி வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு —கிழக்கு மாகாண சபைக்கு வெளியேயுள்ள ஏனைய மாகாணசபைகளின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூனில் முடிவடைகின்றது. அது முடிந்த கையோடு அச்சபைகளின் பொறுப்பை தொடர்ந்து ஏற்கக் கூடியதாக புதிய சபை தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும்.

என்றாலும், நாட்டிற்கு புதிய அரசமைப்புக் கொண்டு வரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால், அந்த அரசமைப்பின் கீழ் மாகாணசபை முறை ஒழிக்கப்பட்டு விடும் என்பதால், அடுத்த (புதிய) மாகாணசபைகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்களை நடத்த வேண்டியிராது என்றே அரசுத் தரப்பில் முதலில் எதிர்பார்க்கப்பட்டது.

தற்போதைய மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர், புதிய அரசமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வர முடியாவிட்டாலும், உத்தேச புதிய அரசமைப்புக் குறித்து மக்களின் கருத்தை அறிந்து கொள்வதற்கான கட்டுப்படுத்தாத சர்வஜன வாக்கெடுப்பை யாவது (Non Binding Referendum) அதற்கு முதல் நடத்தி விடலாம்; அந்த சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி பெற்று விட்டால், அந்த வாக்கெடுப்பு மூலம் மக்கள் வெளிப்படுத்திய கருத்தின் அடிப்படையில் புதிய அரசமைப்பு தயார் செய்யப்பட்டு வருவதால் — அந்த அரசமைப்பின் கீழ் மாகாணசபை நிர்வாக முறை ஒழிக்கப்பட்டு விடும் என்ற காரணத்தைக் காட்டி — புதிதாக மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் விட்டுவிடலாம் என அரசுத் தரப்பு எதிர் பார்த்திருந்தது.

ஆனால் அந்த எதிர்பார்ப்புக்கு மண் விழுவது போல கண்டி ஸ்ரீ தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல் நடந்திருக்கின்றது.

தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதலும், அத்தகைய புனிதஸ்தலம் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்த முடியாத அரசின் கையாலாகத்தனமும் பௌத்த, சிங்கள மக்கள் மத்தியில் பெரும் உணர்வலைகளைத் தோற்றுவித்திருக்கின்றன.

இந்த உணர்வு அலைகளுக்கு மத்தியில் —

அதிகாரப் பரவலாக்கல், தமிழர்களுக்கு சம அந்தஸ்து வழங்குதல், சகல பிரஜைகளையும் சரிசமமாக மதித்தல், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என்ற கோஷங்களுடன் முன்வைக்க உத்தேசிக்கப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு அரசுக்கு எதிர்பார்த்த வெற்றியைத் தருமா என்ற பலத்த சந்தேகம் இப்போது கிளம்பியிருக்கின்றது.

அத்தகைய நிலையில் கட்டுப்படுத்தாத சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை இப்போது நடத்தி தன்னுடைய தீர்வு முயற்சி நடிப்புக்கு நிரந்தரமாக மண் அள்ளிப்போடும் சோதனையில் அரசினால் இப்போதைக்கு இறங்கிவிட முடியாது என்பதே அவதானிகள் கருத்து.

இந்தக் காரணத்தினால் சர்வஜன வாக்கெடுப்புத் திட்டத்தை எப்படியும் இன்னும் சில காலத்துக்குத் தள்ளிப் போடவேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

எனவே சர்வஜன வாக்கெடுப்பைத் தள்ளிப்போட்டால், புதிய அரசமைப்பை உருவாக்கி நடைமுறைக்குக் கொண்டு வரும் திட்டமும் தள்ளிப்போகும்.

அத்தோடு அரசின் தீர்வுத் திட்ட முயற்சியை குழப்பியடிக்கும் நோக்குடன், தானும் மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்கப் போவதாக அறிவித்து களத்தில் குதித்திருக்கின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கட்சி.

மாற்று யோசனைகளை முன்வைக்கும் ஐ. தே. க.வின் திட்டத்துக்கு இடமளிப்பதானால் அதற்காக மேலும் சில மாதங்கள் அரசு கால அவகாசம் வழங்க வேண்டியிருக்கும். அப்படிக் கால அவகாசம் வழங்கினால் தீர்வுத் திட்டத்தையும், அதனைக் கொண்டுள்ள புதிய அரசமைப்புத் திட்டத்தையும் சமர்ப்பித்து நடைமுறைக்குக் கொண்டு வருவது தொடர்பான அரசின் நேர அட்டவணையில் மேலும் காலதாமதம் ஏற்படும்.

எப்படிப் பார்த்தாலும் தீர்வுத் திட்டம், புதிய அரசமைப்பு ஆகியவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரும் அரசின் உத்தேச திட்டங்களைச் செயற்படுத்துவதில் மேலும் காலதாமதம் ஏற்படப் போவது நிச்சயம்.

ஆகவே எப்போதோ வரக்கூடிய தீர்வுத் திட்டத்தையோ அல்லது நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கும் புதிய அரசமைப்பையோ காட்டி, இப்போது நடத்தப்படவேண்டிய மாகாணசபைத் தேர்தல்களை அரசினால் தள்ளி வைத்து விட முடியாத சூழ்நிலையே ஏற்பட்டு வருகின்றது.

அண்மையில் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்திக் காட்டிய அரசு —

வடக்கு—கிழக்கு மாகாண சபையைத் தள்ளி வைத்து விட்டு ஏனைய மாகாண சபைகளுக்கான தேர்தல்களை மட்டும் இப்போதைக்கு நடத்த முடியாது என்பதும் முக்கிய விடயமாகும்.

அப்படி வடக்கு—கிழக்கு மாகாணசபையை விட்டு விட்டு ஏனைய மாகாண சபைகளுக்கான தேர்தல்களை மட்டும் அரசு நடத்த முயன்றால்—

குடாநாட்டில் வெற்றிகரமாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்திக் காட்டியதாகப் பிரசாரப்படுத்தும் அரசினால் வடக்கு—கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை மட்டும் நடத்த முடியாமல் போனது ஏன்? என்ற கேள்வி எழும்.

எனவே ஏனைய மாகாண சபைகளுடன் சேர்ந்து வடக்கு—கிழக்கு மாகாண சபைக்குமான தேர்தல்களை ஒன்றாக நடத்த வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

### கூட்டுச்சேர யோசனை

வடக்கு—கிழக்கு மாகாண சபைத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் அதை எதிர்கொள்வதற்காக தமிழ்க்கட்சிகள் அனைத்தும் இப்போதே தயாராகத் தொடங்கி விட்டன:

வடக்கு—கிழக்கு மாகாண சபைக்கு மொத்தம் 71 உறுப்பினர்கள் தெரிவாவர். 36 பேர் வடமாகாணத்திலிருந்து; 35 பேர் கிழக்கு மாகாணத்திலிருந்து.

எனவே வடக்கு—கிழக்கு மாகாண சபையைப் பொறுத்தவரை ஏதேனும் ஒரு மாகாணத்தில்—

அல்லது இரண்டு மாகாணங்களுக்கும் உட்பட்ட எட்டு மாவட்டங்களில் ஏதேனும் ஒன்றிரண்டில் மட்டும்—

செல்வாக்கை வைத்துக் கொண்டு மாகாணசபையைக் கைப்பற்றி விடமுடியாது என்பது அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் நன்கு தெரிந்த விடயமாகும்.

ஆனாலும் அனேகமான தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை அவற்றின் செல்வாக்கு அல்லது வாக்குகளைப் பெற அல்லது வாக்குகளைப் போட வைக்கக்கூடிய திறன் குறிப்பிட்ட வட்டத்துக்குள் அல்லது குறிப்பிட்ட ஓரிரு மாவட்டங்களுக்குள் மட்டுமே உள்ளது என்பதே யதார்த்தமாகும். இது அக்கட்சிகளுக்கும் தெரியும்.

**உள்ளும் புறமும் — குறுமுனி**

தவிரவும் யாழ் குடாநாட்டில் அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களும் சில 'படிப்பினைகளை' தமிழ்க் கட்சிகளுக்கு எடுத்து உணர்த்தியுள்ளன. பல கட்சிகளாகப் பிரிந்து நிற்பது யாருக்குப் பயனைத் தரும் என்பது முன்னாள் ஆயுதக் குழுக்களான தற்போதைய தமிழ்க் கட்சிகளுக்கு இப்போது புரியத் தொடங்கியிருக்கின்றது.

அதனால் மாகாணசபைத் தேர்தலை ஓரிரு கட்சிகளாகக் கூட்டுச் சேர்ந்து எதிர்கொண்டால் என்ன என்று அவை சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றன. இவ்வாறு கூட்டுச் சேர்வதன் மூலம் வெவ்வேறு இடங்களில் தங்களுக்கு உள்ள செல்வாக்குகளை ஓரணியில் திரட்ட முடியும் என இக்கட்சிகளின் மூத்த உறுப்பினர்கள் சிந்திக்கின்றார்கள்.

ஆனால் உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி தேர்தலின் [illegible] பதவி லாபங்களுக்காகவும் தங்களுக்குள் மாறி மாறி சேற்றை வாரி இறைத்து, அடிமட்ட உறுப்பினர்கள் வரை மாற்றுக் கட்சிக் குரோதத்தை வளர்த்து விட்டு விட்டு, தேர்தலுக்காக ஓரணியில் சேர்வது எப்படி என்று கேள்வி எழுப்புகின்றார் மற்றொரு கட்சிப் பிரமுகர்.

ஆகவே தேர்தல் அறிவிப்பு வருவதற்கு முன்னரே — இப்போதிருந்தே — பரஸ்பர காழ்ப்புணர்ச்சிகளைக் களைந்து ஒட்டுறவை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை செயற்படுத்துவது அவசியம் என்றார் அவர்.

ஆனால் இங்கு களத்தில் இடம்பெறும் சம்பவங்களோ வேறு விதமாக உள்ளன என்பதுதான் பரிதாபம்!

### முஸ்லிம் காங்கிரஸ்

தற்போதைய நிலையில் வடக்கு — கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் அதிக லாபம் அடைவது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியாகவே இருக்கும் என்ற எண்ணமும் தமிழ்க் கட்சிகளிடையே காணப்படுகின்றது.

இப்போது உள்ள நிலையில் யாழ். குடாநாட்டில் ஒரு லட்சம் முதல் இரண்டு லட்சம் பேர்தான் வாக்களிப்பர். வன்னியிலும் இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில்தான் தேர்தலை நடத்தக் கூடியதாக இருக்கும். அங்கும் — அப்பிரதேசத்தில் — வாக்களிக்கக்கூடிய தமிழர்களின் எண்ணிக்கை மிக அதிகமில்லை. கிழக்கிலும் பெரும் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டில். எஞ்சியுள்ள இடங்களில் (பிரதானமாக அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில்) சிங்கள — முஸ்லிம் வாக்காளர்கள் எண்ணிக்கைதான் அதிகம்.

இத்தகைய பின்னணியில் வடக்கு—கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால்—

தமிழ்க்கட்சிகள் தனித் தனியாகப் போட்டியிட்டு தமிழ் வாக்குகளைப் பிரித்தால் —

மாகாணசபையின் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறமுடியாவிட்டாலும் தனித்து அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சி என்ற ஸ்தானத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெறக்கூடிய சூழ்நிலை உருவாகலாம்.

அப்படி ஏற்பட்டால், மாகாண சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செல்வாக்கும், அதிகாரமும் கட்டுக்கடங்காததாக இருக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தவிர, தற்போதைய சூழ்நிலையில் வடக்கு—கிழக்கில் பரவலாகச் சற்றேனும் அடித்தளம் உள்ள கட்சியாக விளங்குவது தமிழர் விடுதலைக் கூட்டணியே. அண்மையில் நடந்த யாழ். குடாநாட்டின் உள்ளூராட்சித் தேர்தல்கள் அதற்கு நல்ல சான்று. அக்கட்சி அண்மைக் காலங்களில் பல விடயங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பொதுவாக இணங்கிப் போவதைக் காணக்கூடியதாக உள்ளது. இரு கட்சித் தலைவர்களுக்கிடையேயும் நல்லுறவு பேணப்படுகின்றது. ஆயுதம் ஏந்தாத தமிழ்க் கட்சி என்ற வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி குறித்து முஸ்லிம்கள் மத்தியிலும் சற்று வரவேற்பு உண்டு.

இந்தப் பின்னணியில் — பொது எதிரிகளை வீழ்த்த வேண்டும் என்ற அடிப்படையில்—கிழக்கு மாகாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தேர்தல் உடன்பாடு வைத்துக்கொள்ளவும் வாய்ப்பு உண்டு என்கின்றனர் அரசியல் அவதானிகள். அத்தகைய உடன்பாடு வந்தால் அது ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் பலத்த பின்னடைவை ஏற்படுத்துவதாகவும் அமைந்து விடலாம்.

வடக்கு—கிழக்கு மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் தமது முதன்மை வேட்பாளர்களாக யாரை நிறுத்துவது என்பது குறித்து தமிழ்க் கட்சிகள் இப்போதே ஆராயத் தொடங்கிவிட்டதாகவும் தெரிகின்றது.

### உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தெரிவு!

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வெற்யீட்டிய கட்சிகள் உள்ளூராட்சிச் சபைகளுக்கு உறுப்பினர்களை நியமிப்பது குறித்து சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அடுத்து வரும் நாள்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அனேகமாக கட்சிகள் அனைத்தும் மேயர், நகர சபைத் தலைவர், பிரதேச சபைத் தலைவர் ஆகிய பதவிகளுக்கு தமது கட்சியினால் முதன்மை வேட்பாளர்களாக நிறுத்தியோரையே அப்பதவியில் அமர்த்த திட்டமிட்டுள்ளன.

ஏனைய உறுப்பினர்கள் பதவிகளுக்குத்தான் ஆள்களை மாற்றி, உள்ளூர்ப் பிரமுகர்களைச் சேர்ப்பது குறித்து கட்சிகள் சிந்திக்கின்றன.

யாழ். மாநகரசபையைப் பொறுத்தவரை மேயர் பதவியைப் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி தமது கட்சியின் முதன்மை வேட்பாளரான திருமதி சரோஜினி யோகேஸ்வரனையே அப்பதவியில் தொடர அனுமதிப்பது என முடிவு செய்துள்ளது. ஏனைய எட்டு உறுப்பினர்களின் இடத்துக்கு ஆள்களை நியமிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட அனைத்துப் பிரதேசங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படும் வகையில் உறுப்பினர்கள் நியமனம் இடம் பெறும் என்று கூட்டணி வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது.

புளொட்டைப் பொறுத்தவரை அதன் முதன்மை வேட்பாளரும் கட்சியின் உபதலைவருமான மாணிக்கதாஸன் மாநகரசபை உறுப்பினர் பதவியை ஏற்க மாட்டார் எனத் தெரிகின்றது. துணை முதன்மை வேட்பாளர் கிருபைராஜா (கிருபா மாஸ்டர்) தலைமையில் புளொட்டின் ஆறு உறுப்பினர்கள் யாழ். மாநகரசபை அங்கத்தவர் பதவிகளை ஏற்பர் எனக் கூறப்பட்டது.

ஈ. பி. டி. பி. கட்சி அதன் தலைமை வேட்பாளர் ஜெகன் தலைமையில் ஆறு உறுப்பினர்களை யாழ். மாநகரசபைக்கு நியமிக்க உள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org